கற்பக விநாயகர் துணை

பருவதராஜபுராணம்

சுருக்கம்.

மூலமும் உரையும்.



இஃது

சன்னுமுனியால்

திருவாய்மலர்ந்தருளியதை

புதுவைமாநகரம்

இரிசப்ப உபாத்தியாயரவர்கள் குமாரர்

பு. சி. சின்னதம்பி நாட்டாரால்

பார்வையிடப்பட்டு.

கொ. லோ. செல்வரங்கம்மாள் அவர்களால்,

டைட்டில்பேஜ் மாத்திரம்

சென்னை

மின்… அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை 1927 அணா 8.

உ

சிவமயம்.

பருவதராஜபுராணம்.

சுருக்கம்.

மூலமும் உரையும்.

இஃது,

சன்னுமுனியால்

திருவாய்மலர்ந்தருளியதை

கிருஷ்ணப்பேட்டை

வேங்கடசாமிநாட்டாரவர்கள் குமாரராகிய

வேங்கியப்பநாட்டார்

ஙு. ஆண்டார்நாட்டாரவர்கள் குமாரராகிய

கோவிந்தநாட்டார்

பு. இராமநாட்டாரவர்கள் குமாரராகிய

வீராசாமிநாட்டார்

இம்மூவர்கள் வேண்டுகோளின்படி

புதுவைமாநகரம்

இரிசப்ப உபாத்தியாய ரவர்கள் குமாரர்

பு-சி, சின்னதம்பிநாட்டாரால்

புலப்படுத்தியதை

கோகுலாபுரம்

அருணசலமுதலியாரால்

பார்வையிடப்பட்டு

சென்னை.

மநோன்மணிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

பவஹு மாசிமீ.

முதல்பதிப்பு - காப்பி - ௧௦௦௦.

சிவமயம்.

கையொப்பக்காரர்களின் பெயர்.

மகரமண்டலத்தைச்சார்ந்த
உலகளந்தசுவாமி.

புழற்பற்று,

பெரியண்ணன்நாட்டார்.

பெரியதனம்

வ. குழந்தைவேலுநாட்டார்.

பெரியதனம்

செ. செங்கழனிநாட்டார்.

பெரியதனம்

சி. பொன்னப்பநாட்டார்.

புலியூர்பற்று

வீராசாமிநாட்டார்.
சை. முனியப்பநாட்டார்.
,, வடமலைநாட்டார்.
வ. சகாதேவநாட்டார்.
செ. கந்தசுவாமிநாட்டார்.
,, அண்ணாமலைநாட்டார்.
,, சபாபதிநாட்டார்.
,, வடமலைநாட்டார்.
பு-செ. பனையநாட்டார்.
கொ-செ. மகாலிங்கநாட்டார்.

பெரியதனம்

சி. பரசுராமநாட்டார்.
,, சுப்பராய்நாட்டார்.
,, பொன்னப்பநாட்டார்.
,, சாமிநாட்டார்.
,, கோவிந்தநாட்டார்.
ஆ-சி. கோவிந்தநாட்டார்.
சி. பொன்னப்பநாட்டார்.
,, சின்னண்ணன்நாட்டார்.
,, கோவிந்தநாட்டார்.
,, ஆண்டிநாட்டார்.

திருமயிலை

ஜெகநாதநாட்டார்.
பெ-அருணசலநாட்டார்.
பெ.பரசுராமநாட்டார்.
,, குழந்தைநாட்டார்.
,, குட்டி. முனிசாமிநாட்டார்.
,, குட்டி. ஏழுமலைநாட்டார்.

கையொப்பக்காரர்களின்பெயர்.

ம. ஏழுமலைநாட்டார்.
,, விநாயகநாட்டார்.
,, சுந்தரநாட்டார்.
,, சபாபதிநாட்டார்.
,, உலகாண்டிநாட்டார்.
,, முனிசாமிநாட்டார்.
,, இராமலிங்கநாட்டார்.
,, கன்னியப்பநாட்டார்.
,, தங்கவேலுநாட்டார்.
,, வீராசாமிநாட்டார்.
,, இராமசுவாமிநாட்டார்.
,, முனிசாமிநாட்டார்.
,, எல்லப்பநாட்டார்.
,, அ. வீராசாமிநாட்டார்.

பெரியதனம்

ஏ. வேங்கடாசலநாட்டார்.
,, முனிசாமிநாட்டார்.
,, முனிசாமிநாட்டார்.
,, பள்ளிக்கூடத்தான்நாட்டா
,, சடையப்பநாட்டார்.
,, குள்ளப்பநாட்டார்.
ச. இராமசுவாமிநாட்டார்.
,, நாராயணநாட்டார்.
முட்டி. பூங்காவனநாட்டார்.

கிருஷ்ணப்பேட்டை

பூங்காவனநாட்டார்.
கி. கன்னியப்பநாட்டார்.
,, சின்னையாநாட்டார்.
,, பார்த்தசாரதிநாட்டார்.
,, குட்டி. முனிசாமிநாட்டார்
மா. அரிஹரபுத்திரநாட்டார்.
,, வேலுநாட்டார்.
,, முனிசாமிநாட்டார்.
ஏ. மாசிலாமணிகிராமணி.

பெரியதனம்

எல்லப்பநாட்டார்.
எ. முனியப்பநாட்டார்.
மயிலை. நாராயணசாமிதோட்ட

பெரியதனம்

அப்பாசாமிநாட்டார்.
இரிசப்பநாட்டார்.

—o*o—

முற்றிற்று.



உ

ஹரிஹராயநம:

பருவதராஜபுராணம்

மூலமும் உரையும்.

பாயிரம்.

விநாயகர் துதி.

வெண்பா.

திருமால்குலத்துதித்த செய்யசெம்புப்படவோர்
வருமாறுலகில் வழூத்துதற்கு—ஒருமா
மழைவிடையோன்றந்த மதமூன்றுடையான்பொற்
கழலைக்கருத்ததனிற் கொள்.

பரமசிவன்றுதி.

விருத்தம்.

அண்டரண்டமுமாய்நின்று மருவுருவற்றதாகிப்
பண்டைமெய்க்கடவுளாய பராபரனாக்கினியநீல
கண்டனுருபயபொற்பூங் கழலதுபணிந்துமண்மேல்
விஷ்டுவின்கோத்திரச்சீர் மிகமகிழ்வோடுகூர்வாம்.

உமையவள் துதி.

இதுவுமது.

அருமறைமுடியிலங்கு மரன்மனமகிழுந்தேவி
திருமலிவையமீது திகழ்ந்தொளிர்முனிவராற்கும்
வருமொருமாக்களுக்கும் வயங்குதற்பரையைப்போற்றி
பருவதராஜன்சீர்த்திப் பார்மிசையுரைக்கின்றேனால்.

சுப்பிரமணியர்துதி.

இதுவுமது.

தெள்ளறிவுடையோர்போற்றும் பருவதன்சிறப்பைச்சொல்லக்
கள்ளவிழ்க்கொன்றையான்கைக் கனியதுபெறவேவேண்டி
புள்ளிமாமயின்மீதேறிப் பூவலம்நொடியில்வந்த
வள்ளிபங்காளனார்தம் மலரடிசென்னிசேர்ப்பாம்.

திருமால்துதி.

இதுவுமது.

ஆரணப்பொருளாய்நின்று மரிதுயிலமர்ந்தேயன்று
வாரணமழைத்தபோது வந்துகார்த்துதவுமாலின்
சீரணிகுலத்தோன்வண்மைத் திண்புவிமிசையான்செப்ப
காரணனென்னும்பெம்மா னளினபொற்பாதம்போற்றி.

இலக்குமிதுதி.

இதுவுமது.

அரிமுகமாகவன்று வரக்கனைச்செற்றவாதி
முரகரியென்னுமாய் னுளமகிழ்திருவின்றாளைப்
பரிவுடன்கருதியிந்தப் பார்மிசைப்பருவதன்றன்
அரியநற்சரிதைசொல்ல வன்புடன்வணங்குவாமால்.

கலைமகள்துதி.

இதுவுமது.

மலைமிசையுதிக்குந்தண்ணார் மாமதியெனவேசெய்ய
நிலைமிசைமாக்கட்கெல்லாம் நீடியவிருப்புநல்கும்
மலைமகட்கினியதாதை வண்மைசேர்புகழைச்சொல்லக்
கலைமகளுபயபொற்பூங் கழலிணைக்கூப்புவாமால்.

அவையடக்கம்.

இதுவுமது.

பதியுளோரெவரும்போற்றும் பருவதராஜன்சீர்த்திச்
சதுர்மறையுணர்ந்தமேலோர் சாற்றியபண்பைக்கொண்டு
மதியிலேன்புகன்றபான்மை மழலைமென்மொழிபோல்யாருந்
துதிபெறக்கொள்வாரென்று துணிபுகொண்டறற்றினேனால்.

ஆசிரியப்பா.

—*—

சீர்மலிநிலநீர் தீக்கால்வானமாய்ப்
பேர்மலிந்திலகு பேறுலகதனில்
அண்டபிண்டமுமா யாவுமாயல்லவாய்த்
தெண்டிரைசூழ்புவித் திகழெழுதோற்றமாய்
இலகியபராபரை இன்னருடன்றாச்
குலவியசத்துமாய்க் கோதிலாச்சித்தாய்
ஆனந்தமாகி அருமறைதேடியுந்
தானறியாத சயம்புவிநோக்கால்
அரிபிரமாதி யரனெனுமூவரும்
பொருவில்தேவர்களும் புகன்றிடுமாக்களும்
தானவரெவருஞ் சத்ததையடைந்து
மோனமேவேண்டி முயன்றுபாற்கடலை
மந்தரகிரியதை வன்மைசேர்மத்தாய்
விந்தைநற்சேடனை வியனுறும்பாசமாய்ப்
பிணித்துவானவரும் பெட்புறுமவுணருங்
குணித்ததைக்கடையவக் கோதிலாவமுதிடம்
அதியிட்முதித்த அமரருஞ்செல்வியுஞ்
சதிருறும்பாகந் தான்பெறவிரும்பியே
இந்துபல்கோடி எழுந்தொளிர்வதுபோல்
செந்திருவென்னுந் திருமகளுதிக்கக்
கண்டமெய்த்தேவருங் கருதொணுமுனிவரும்
மண்டலமனைத்தும் வளர்த்திடுமாதோ
அண்டர்கட்கரிய வமுதமோயாதோ
எண்டிசைவயங்கு மினியபொற்குன்றோ
என்வதிசயித்தே இலங்குநாரதரும்
வனிதையின்பெருமை வைகுந்தநாதற்கு
எடுத்துரைக்குங்கா லின்பமேற்கொண்டு
தொடுத்தருமுனியுடன் றூய்மகடன்னைக்
காரணவாவலதாய்க் கரியமால்தானும்
சேணதைவிடுத்தச் சிதரன்வருகயில்
திருவினிலுயர்ந்த சேயிழைதானும்
வருதலைக்கண்டு வானவர்பிரானும்
மோகமதாகி மொய்க்குழலாளை
வாகுசேர்காந்தருவ மணமதுபுரிந்திட
எண்ணியங்குற்ற எழில்வனத்தின்சீர்
பண்ணவர்தமக்கும் பகருதற்கரிதாம்

கற்பகத்தருவும் கடிமணத்தருக்களும்
பற்பலவாவியும் பளிங்குமாமேடையும்
தவிசுகணிறைந்த தனிவளமதனிற்
புவிமுழுதளிக்கும் பூமகடன்னை
கரியமால்கூடிக் களிகொளுங்காலையில்
மருவுமாமுனியெனும் வஸ்சுதன்பிறந்தான்
தோன்றியசுதனுந் 'துதித்தவன்றாதையை
ஆண்டகையேயெனக் கருள்விதியாதென
மைந்தநீகேண்மோ வன்கயிலாசனைச்
சிந்தையுள்ளிருத்திச் செழுந்தபமிழைக்கின்
தரிசனந்தந்தே தனையநீவேண்டிய
வரமதுந்தருவான் மகிழ்ந்துநீவாழ்வாய்
என்றவனோதியே இனியவனுடன்வை
குந்தமதுற்றான் குணக்கடலன்னான்
ஈங்கிவனெழுந்தே வெழிற்றபவேடந்
தாங்கியேபஞ்சாக் கினியிடையிருந்து
இழைத்திடுந்தவத்தால் இலகுவானவரும்
தழைத்திடுமுனிவருந் தணலதுபொறாமல்
பையரவணிந்த பரமனைக்கூவி
ஐயகோவென்று வயர்ந்திடும்போது
பூதநாயகனும் பொருவிலாவருளால்
மாதவர்தமக்கு மலர்க்கரங்கொடுத்து
திருமகடனக்குஞ் செய்யமால்தனக்கும்
வருசுதனென மருவுமாமுனிபால்
குருகியேபரமனும் குழவியைநோக்கி
அருந்தவமிழைக்குமென் னப்பனீவருக
எதன்பொருட்டிங்கு இழைத்தனை மாதவம்
அதனைநீகேட்கில் லருளுவோமென்ன
முத்தனேசரணம் முதல்வனேசரணம்
அத்தனேசரணம் ஆதியேசரணம்
நித்தனேதமியேன் நிஷதநாடனைத்தும்
மற்றொருவருக்கு மாட்சிமையிலாமல்
ஆளுகைசெய்ய ஆவலுற்றேனெனக்
கோளரவணிந்தவன் குணமுளான்மகிழ்ந்தே
அப்பனீவிரும்பிய ஆளுகைதன்னை
செப்பமாயளித்தேன் செல்வனீவாழ்கெனக்
கூறியேமறையவக் கோதில்மாமுனிவரன்
வீறுசேர்நிஷதமென் பதிசேர்ந்தே

மநுமுறைவிதிப்படி வாழ்ந்தரசாளயில்
தினகரனெனவொளிர் செய்யமேனியனும்
வேட்டமதாட மென்மனமகிழ்ந்துக்
காட்டகநோக்கிக் களிவொடுசெல்கயில்
அளகைகோன்றனக்கு அரியனன்மகவாய்
வளமிகுமாமதி வனப்பினுஞ்சிறந்த
பூங்கொடியனையவோர் புத்திரிபிறக்கப்
பாங்கியர்தன்னாற் பாலனைவருவித்
தேத்தியேகுபேரனு மெழிலுறுமகட்குநற்
பாத்திரர்தம்மாற் பகர்நாமகரணம்
சவுலாகினியெனத் தகைமயதாகப்
புவியுளோர்வாழ்த்தப் பொருவில்பேரளித்து
வளர்த்திடுநாளிலவ் வஞ்சியாமவளும்
அளப்பருமேருவி னருகுளவாவியைச்
சார்ந்தவளதனிற் சலக்ரீடைசெய்வதை
ஓர்ந்தபராமுனியும் உய்த்துமேநோக்கி
மோகமதுற்றே வுளமதுவெறுண்டு
தாகமதாகித் தனிப்பதிசோர்ந்து
அன்னவள்மீது ஆசையான்மெலிந்து
மன்னுமாமுலகின் மநுமுறையாவும்
பிரண்டுநிற்பதனை பெற்றிசேர்சபையிற்
திரண்டமாமுனிவர் திண்ணியன்தன்னை
ஐயயிக்கோல மாகியதென்னே
செய்யமாமுனியே செப்புகவென்னவவ்
முனிவரைப்பார்த்தே முகுந்தனார்மகனும்
நனிமதியுற்றவென் னண்பரோகேண்மின்
வேட்டமதாட விரைந்துயான்செல்கயில்
தாட்டாமறையொளிர் தடத்தினிலிரங்கியோர்
வநிதைவீற்றிருக்கவவ் வஞ்சிமேன்மையல்
இனியிலாதெழுந்தநற் கெவ்வணமுய்வேன்
அன்னவள்தன்னை அருமணஞ்செயாமல்
என்மனம்பொருந்தா தென்றவனிசைக்க
அவ்வுரைகேட்டே அருந்தவமுனிவரும்
எவ்வகையென்றுவ ரேங்கியேதிருஷ்டியால்
பார்த்துமேமுனிவரப் பாவையையறிந்து
சீர்த்தியாமெங்கள் திருமுனியேநின்
மனமதுபோலவம் மாதுநல்லாளையித்
தினமதேசென்று திருமணஞ்செய்ய

ஈண்டுநாம்வருவோ மெந்தையேவிடைதரல்
வேண்டுமிப்போதென விடையதுமேற்றே
அளகைகோன்றன்பா லனைவருஞ்சென்று
புளகமாய்ப்பேசிநின் புத்திரிதன்னை
மருவுமாமுனிக்கு மணம்புரிவிக்க
தருகநீவேண்டுந் தன்னியாவென்ன
மாதவருரைமை மகிபனுமேற்று
வேதியர்தம்மால் மிக்கநாள்பார்த்து
மாமுனிதனக்கு மங்கையர்தனக்குங்
கோமுறைவிதிப்படிக் கும்பமேயிருத்தி
சடங்குகளியாவுஞ் சாங்கமாய்முடித்து
நடம்பயில்மாதர்கள் நல்லிசைபாட
மங்கலஞ்சூட்டி மணித்தவிசேற்றயில்
துங்கவிண்ணோர்கள் தூமலர்சொறிந்து
தரணிவாழ்நாளிற் சவுலாகினிக்கு
பருவதனென்றுமோர் பாலனும்பிறந்தான்
பிறையதுபோலவப் பெற்றிசேர்பாலனும்
இறையவனருளா லிலகியேவளர்ந்து
தாதையினரசைத் தகையுடன்பெற்று
நீதியாயாண்டு நிகழ்ந்திடுநாளில்
கடிமணம்புரியவக் காளையற்கெண்ணி
படிபுகழ்வருணன் பயந்தபாவையெனும்
விண்ணவர்புகழு மேனுவதிதன்னை
கண்ணியன்பருவத காவலன்றனக்கு
மணமதுமுடித்தே மகிழ்ந்துவாழ்நாளில்
இணையில்மைநாகனை இளங்கொடியீன்றாள்
ஈன்றவப்பாலனும் இனிதுடன்வாழ்நாள்
மீன்றவழ்சோலைசூழ் நைமிசாரன்ய
முனிவரர்கூடி முயன்றுபின்னுங்கிசை
முனிமகடன்னை முதுமணமுடிக்கச்
சண்பகவதியெனுந் தையலார்தமக்கு
மண்டலம்புகழு மைந்தராயுதித்த
தொன்னூத்தறுவரில் துலங்குபொன்னுட்டான்
எண்ணுதற்கரிய இலம்புகழாண்டான்
காமப்பிரியன் கரிந்திறற்காலன்
நேமப்படிக்கு நிகழ்சேதுவாண்டான்
பரமானந்தன் பகர்பூதுபுரியான்
பிரியாப்பாதன் பெற்றிசேர்செல்வர்கள்

அரியநற்புதல்வர்பே ரனந்தமுள்ளட்றிவீர்
விரிதருஉலகில்பட வேடுகண்டத்னை த
அரசதுபுரிந்த வருநந்திவேந்தன்
வினாசெரிபுதல்விக டொண்ணூற்றறுவரை
மணமதுபுரிந்து மகிழ்வுடன்கூடி
இணைபிரியாம.லிருக்குமந்நாளில்
அசுரர்கடம்மா லகிலமெள்டிசையும்
விசும்பிடைத்தேவரு மென்றுயருற்றே
தேவநாயகனைச் சேர்ந்தெல்லவருங்
காவநீவேண்டுங் கடவுளேயென்று
ஓலமிட்டலரி வொளித்திடும்போது
காலனைப்போலவக் கன்னியனெழுந்து
தானவர்மீது சண்டைசெய்திடுங்கால்
ஆனைமாமுகனும் அரிமுகன்றனும்
சூரபத்மனுடன் துலங்குதன்முகனும்
வீரதாருகனும் மென்பாநுகோபனும்
சீறியேவெழுங்காற் சேனுலகுள்ளார்
தாறுமாறாகத் தயங்கியேநின்று
தேவநாயகனே செய்வகையாதென
யாவருமாங்கு வயருறும்போது
கண்ணுயிரவனுங் கதிர்வடிவேலனை
எண்ணியேயிறைஞ்சுக வெழின்மாபூரனும்
தானவர்தம்மேற் சத்திவேலேந்தி
கோன்மனம்வெகுண்டு கொடுஞ்சமர்புரிந்திட
வெஞ்சிலைவலியால் வெவ்வியவரக்கர்கள்
தஞ்சமென்பாருந் தனிவுயிர்மாய்வரும்
என்செய்வோமென்று இறைஞ்சிவீழ்வாரும்
பஞ்சதுபோலப் பரந்திடுவாரும்
நிலைகுலைந்தோர்பால் நின்றுமாய்வாரும்
அலைகடறன்னி லழுந்திமீனுருவாய்
கலைமுனிபண்டுயிக் கடியராட்சதரால்
அலைவதுகொண்டுவவ் வலைகடலதனில்
மச்சமாமுனியாய் வன்தவம்புரிபாற்
துச்சனரடைந்தே துயரொழிந்திருக்கயில்
அச்செயலறிந்த வமரர்கோன்யாவரும்
பச்சைமால்குலத்தான் பருவதராசனை
அரக்கரைக்கடிந்தமை யாதரித்திடுதல்நின்
பொருப்பெனப்பணியவப் பொறுப்பனையாலும்

பண்ணவர்க்கிரங்கியே பருவதராசனும்
மண்மிசையிருப்பால் வலையதுபுதுக்கியும்
செம்பிநாம்படவுந் திகழ்பெறவமைத்தவ்
வம்புளவரக்கரை மாய்த்திடவெண்ணி
சிந்துவிற்படவை சீக்கிரம்விடுத்து
சந்தடியிலாமற் றனிவலைவீசியே
அரக்கர்கட்மை அழித்திடுங்காலிற்
சிறக்குநன்மச்சமாய்ச் செறிவர்க்கர்களும்
ஓலமிட்டலரி வுயர்முனிபாற்செல
சீலமாமுனியுந் திருவிழிதிறந்தே
இவ்வகைசெய்தவ னெவனெனவெகுண்டு
அவ்வியமனத்தனு யரசனைநோக்கி
தவமதைக்கெடுத்ததாற் சார்வதாகாலமும்
அவமதாயிதுபோ லசுரரைக்கொன்றே
மன்னுமிவ்வுலகில் வாழ்ந்திடுவாயென
சொன்னசாபத்தால் தூயவனுக்கு
எண்ணருந்துயரத் திருங்கடலாழ்ந்து
பண்ணவர்தமக்காய் பரிந்துநான்சென்ற
அண்ணலேயெனக்கிவ் வருந்துயராமோ
புண்ணியாயென்செய் கேனெனப்புலம்ப
கண்கள்மூன்றுடைய கடவுளும்பார்த்து
நண்ணுமாதவத்து ராசனேகேண்மோ
எங்கள்மூவருக்கு மெழில்முனிவரற்குஞ்
சங்கையில்லாமற் சாபமதுண்டதால்
வருந்துவதென்னே வண்மைசேரரசே
திருந்தியவுனக்குஞ் செல்வர்கட்மக்கும்
சொன்னவச்சாபந் துவாபரயுகமள
மன்னனின்குலத்தின் மறைந்துமேபின்வரும்
கலியதிலுனது காலுளார்க்குற்று
மலியுறமகிமிசை மாதவத்தோரும்
உம்பருமுனிவரு முளமதுகளிக்கச்
செம்படவோரெனச் சிறந்துவாழ்குவரோ

பாயிரம் - முற்றுப்பெற்றது.

ஹரிஹரார்யநம.

பருவதராஜபுராணம்

மூலமும் உரையும்.

—————*※*—————

நூன்முகம்.

விருத்தம்.

திரைகடல்சூழ்வையமிசை சீர்த்தியுறுஞ்சன்முனியை
சவுனகாதி
விரைசெறியுமுனிவரர்கள் ஏத்திநனிபக்தியொடு
மேருவாதி
தரையிலகும்பருவதத்தி னுற்பவத்தைத்தமியோங்க
ளுணரத்தேவர்
பெருமையுடனெடுத்துரைக்க வேண்டுமெனவகையறிந்த
பெற்றியோனும்.

இதன்பொருள்.

அலைகளையுடைய நெடியகடல்சூழ்ந்த இவ்வுலகின்கண் சிறப்போங்கிய சன்முனியை நைமிசாரண்யவாசிகளாகிய சவுனகாதிமுனிவர்கள் மிக்வும், பக்தியோடுபணிந்து ஓய் நாதனே இம்மகியின்மீதிலகும் இமாசலமுதற் பற்பலபருவதங்களினுடைய உற்பவத்தைக்கேட்கும்படியாய் ஆவற்கொண்டிருக்கும் எளியோங்கள் அறிந்துக்கொள்ளும்படித் தேவர் திருவுளமிரங்கிப் பெருமையோடும் எடுத்துரைக்கவேண்டுமென்று பணிந்த வையையோர்ந்த பெருந்தகையோனாகிய சன்முனி—என்றவாறு. (க)

இதுவுமது.

கந்தமூலாஞ்சன்முனியும் வினவியவன்னவர்தமக்குக்
கனிந்துகேன்மின்
முந்துசத்தியாலுதித்த தேவர்களுள்மொழிதிருமால்
குலத்தாரொன்றும்

அந்தமுறுந்தத்துவத்தார் ஞானத்தாரக்கினியைக்
காரத்தாரென்றும்
விந்தைபருவதகுலச்செம் புப்படவோர்மேன்மைதனை
விளம்பலுற்றார்.

இ-ள். கந்தமூலாவுஞ் சண்முனியானவர் தம்மைவினவிய முனிவர்களைப்பார்த்துத் திருவுளமிரங்கி ஓ முனிசிரேஷ்டர்களே ஆதிசத்தியாலுதித்த தேவர்களுக்குள் புகலுதற்கரிய திருமால்கோத்திரத்தாரென்றும், தத்துவகுலத்தாரென்றும், ஞானகுலத்தாரென்றும், அக்கினிகாத்தாரென்றும், பருவதகுலத்தாரென்றும் வழங்குஞ் செம்புப்படவோர்களினது மேன்மையைக் கேளுங்களென்று சொல்லத்தொடங்கினார்—எ-று. (உ)

ஆதிசத்தியாலுதித்த உம்பரெலாம்விமலமுற
அமிர்தைவேண்டி
சோதிபெறும்பொன்மலையை மத்தாகத்தொடுத்துரக
பாசங்கொண்டு
தீதில்திருப்பாற்கடலைக் கடைவதற்குப்புகவாங்கு
அதியாற்றோன்றும்
சீதமதிவனப்புடைய செந்திருவைநாரதருந்
தெரிசித்தாரால்.

இ-ள். ஆதிசத்தியாற்றோன்றிய தேவர்களெல்லாம் ஞானம்பெறவிரும்பி அமிர்தமருந்துவதற்கு பிரகாசம்பொருந்திய இமாசலமென்னும் பொன்மலையை மத்தாகவும், அனந்தன், வாசுகி, தக்கன், சங்கன், குளிகன், பதுமன், மஹாபதுமன், காற்கோடகனென்னும் அஷ்டமாநாகங்களுள் அதிபனாகிய ஆதிசேடனைப்பிணிக்கும் பாசமாகக்கொண்டு குற்றமற்ற திருப்பாற்கடலைக் கடையும்பொருட்டு மேவுகையில் அங்ஙனம் அவ் வவிற்பாகத்தைப்பெறவிரும்பி அதியினிடம்பிறந்த பூரணச்சந்திரோதயம்போன்ற ஒப்பொருவரில்லாத அழகிய செந்திருவென்னும் இலக்குமிதேவியினது வரவை நாரதர்கண்டுதெரிசித்தார்—எ-று. (௩)

செந்திருவைக்கண்டமுனி யதிசயித்துவுடனெழுந்து
திருமால்வாழ்வை
குந்தமதையணைந்துபிரான் றனைப்பணிந்துகுவலயத்திற்
றேவேகேண்மோ

சிந்துவிடம்வந்தவன்னே வனப்பதனையெடுத்துரைக்கச்
சேடனாலும்
அந்தமுறுதிருக்கயிலென் ருெருநாவரலெவ்வளவையா
னறைவேனென்றான்.

இ-ள். இலக்குமிதேவியை தரிசித்த நாரதமுனிவர் மிகவும் ஆச்சரியங்கொண்டு அக்கணமே அவணின்றும்நீங்கிப் பாற்கடற்றுயின்றோனாகிய திருமால்வாழும் வைகுந்தபுரத்தைச்சேர்ந்து பெருமானைப்பணிந்து ஓ நாதனேகேளாய் புவனத்தின்கண் தேவர்களெல்லாங்கூடிப் பாற்கடலைக்கடையும்படியாய் மேவுகையில் அங்ஙனம்தோன்றிய உலகமாதாவைப்போன்ற இலக்குமிதேவியினது சவுந்தரியத்தை ஆயிரஞ்சிரமும், இரண்டாயிரம்நாவுமுடைய ஆதிசேடனாலுஞ்சொல்ல வரிதென்றால் ஒருசிரமும் ஒருநாவுமுடைய என்னாற்சொல்லி முடியுமோவென்றார்—எ-று. (௪)

முனிவாய்மைகேட்டவரி மனத்தடங்காவிரகமுற்று
முனிவநீசொல்
வனிதைதனையான்காண விருப்புளதாற்காண்பொமென
வளத்தைநீத்தே
பனிதவழுமிமயவரை மருங்குசெலத்திருமகளு
மாலைப்பார்த்துக்
கனிவுடையயிருவர்களு மாலாகிவங்குளகா
வதனுட்சென்றார்.

இ-ள். நாரதமுனிவருரைத்த வாய்மையைக்கேட்ட திருமால் மனமடங்காக் காதலுற்றவராய் ஓ முனிசிரேஷ்டரே நீசொல்லும் பெண்ணைநான் காணும்படியாய் எண்ணங்கொண்டிருக்கின்றமையால் போய்க் காணுவோமென்று தான்வாழும் வைகுந்தபுரத்தைவிட்டெழுந்து இமயமலையை நோக்கிவருகயில் அம்மலைச்சாரலில் தேவர்களோடுவீற்றிருக்குந் திருமகளாகிய இலக்குமிதேவி நீலமேகசாமளனாகிய பெருமானைப்பார்த்துக் கனிந்து ஒருவர்மீதொருவர் காதலாகி இருவரும் அவ்வரையினிடமிருக்கும் ஓர் கற்பகக்காவுட் பிரவேசித்தார்—எ-று. (௫)



திருமாலும்லட்சுமியுங் காவதனிற்சுகிக்கயினிற்
செனித்தபாலன்
பெருமானேசிறியேனுக் கென்கதியென்றிறைஞ்சிநிற்கப்
பெரியோன்றானும்
பொருவில்வனப்புடைமருவு முனியெனும்நீபொன்சடையோன்
றன்னைவேண்டி
அரியதவமிழைத்திடிலங் கவனருளால்வாழ்வையென
வறைந்துச்சென்றார்.

இ-ள். வைகுந்தநாதனுகிய திருமாலும், இலட்சுமிதேவியும், கற்பகத்தருக்கள்சூழ்ந்து இலகாநின்ற காவில், ஓர் மணிமேடையிற்சேர்ந்து களித்திருக்கும்போது அங்குபிறந்த பூரணச்சந்திரோதயம்போன்ற பாலனுனவன் தனது தாய்தந்தையர்களைப்பணிந்து சிறியேன் உய்வகை எவ்வகையென்று வினவுவதைக்கேட்ட முகுந்தன் அப்புதல்வனைநோக்கி மகிழ்ந்து தன்னேரில்லாத சவுந்தரியமுடைய மருவுமாமுனியென்னும் புத்திரனே நீ பொன்போலிலகுஞ் சடையினையுடைய பரமசிவனைத்தியானித்து அரியதபஞ்செய்வையேயாகில் அந்த சிவபெருமானருளால் நீ வேண்டியவைகளெல்லாங் குறைவின்றி அடைந்துவாழ்வாயென்று ஆசீர்வதித்து இருவரும் வைகுந்தபுரத்துக்குச்சென்றார்கள்—எ-று. (௬)

அந்தவுரைகொண்டசுத னந்தமிலானைந்தெழுத்தை
யகத்திலுன்னிச்
சிந்தையுலையாதுபஞ்சாக் கினியிடைநின்றேதிருந்துந்
தபஞ்செய்யுங்கால்
எந்தவுலகுந்தனலாய் வீசுதல்கண்டிமையோர்க
ளேங்கிச்சோம
சுந்தரனேகாப்பாயென் றோலமிடக்கடைக்கணித்தான்
துரியாதீதன்.

இ-ள். தந்தையாகிய திருமால் உரைத்தமொழியையேற்ற மருவுமாமுனியென்னுஞ் செல்வன் ஆதியந்தமிலானுகியும், அருவுருவற்றவனுகியும், விளங்குஞ் சகதீசனது பஞ்சாட்சரத்தை மனவெளியுள்ளிருத்தி ஆகாமியமென்னும் பரவையை அணுகவொட்டாமற்கார்த்து பஞ்சாக்கினி இடைநின்று அழகிய தபஞ்செய்யும்போது அத்தபாக்கினியால் லோகாலோகங்களெல்லாம் தணலாய்ச்சொறிய அதைக்கண்ட தேவர்முதல்யாவரும் ஏக்கங்கொண்டு ஏ,சோமசுந்தரா, கயிலாசபதீ தமியோங்களைக் காப்பாயென்று முறையிடும்போது அம்முறைக்கிரங்கினார் நிர்மலன்—எ-று. (எ)





அரிபிரமற்கரியவனு முக்கணனுமருவுமுனி
யருகேசென்று
திருவுடையமுனிவரநீ வேண்டுவதியாததனையிங்கு
செப்பென்றேதத்
திரைகடல்சூழ்ஙிஷதபுரி யாளுகையைத்தரல்வேண்டுந்
தேவேயென்ன
பொருவிலருள்பொழிபரம னவ்வாறேகருணைசெய்ப்
புரியையாண்டான்.

இ-ள். அரிபிரமாதிகளாலுங் காண்பதற்கரிய திரிநேத்திரதாரியா கிய ஜகதீசன் மருவுமாமுனிக்கு தரிசனங்கொடுத்து ஓ அழகியமுனி வரனே நீ இங்கு யாதுகாரணத்தாற் றபஞ்செய்கின்றனை அதனை யுரை ப்பாயென்றுசொல்ல அதைக்கேட்ட செல்வன் ஏ, வானு இந்த நெடி யகடல்சூழ்ந்த ஙிஷதபுரியனைத்தும் நானே ஏகசக்ராதிபதியாயிருந்து அரசாட்சிசெய்வதற்குக் கருணைசெய்யவேண்டுந் தேவேயென்றுகேட் க அளவிறந்த கருணையைப்பொழியும் பரம்பரன் அவ்வாறே ஆளுகை செய்யக்கடவையென்று கிருபைசெய்யப் பின்பு முனிவரன் ஙிஷதபுரி யை ஆண்டுவந்தான்—எ-று. (அ)

வேறு - விருத்தம்.

வேதவேதியர்கள்வேழ்விகணடத்த வேந்தர்கடிறைகொணர்ந்தேத்த
மாதமும்மாரிப்பொழிந்திடச்செய்ய மாதவத்தோர்களுஞ்சூழ
நீதியாயரசுபுரிந்திடுநாளி னரேந்திரன்வேட்டமதாடக் [ன்
காதலாய்ச்சென்றுமுகிந்தபின்னிளைத்தோர் காவதிற்புகுந்தனனிறைவ

இ-ள். நான்குவேதங்களையுமுணர்ந்த அந்தணர்கள் வேழ்விகளை நடாத்திவரவும், ஐம்பத்தாறுதேசத் தரசர்களும் கப்பங்கொண்டுவந் து கட்டித்துதிக்கவும், மாதமும்மாரி பெய்துவரவும், மேன்மைபொரு ந்திய தபோதனர் முனிகணங்கள் புடைசூழ்ந்திருக்கவும், மஹாமண் டலேஸ்வரனுகிய மருவுமாமுனி மநுமுறைபிறழாது அரசுபுரிந்து வ ருகின்றநாளில் ஓர்நாள் காட்டகத்திற்சென்று வேட்டமாடக் காதல் கொண்டு வேட்டமாடுங்கோலம்பூண்டு பரவையோட்டுங் கூட்டத்தோ டுஞ்சென்று வேட்டமாடிமுகிந்தபின் விடாயுற்று அம்மலைவாரத்திற் றோன்றிய ஓர் பூங்காவனத்திற்புகுந்தான் வேந்தர்வேந்தன்—எ-று. (௯)

வனத்தினிற்சென்றமண்டலாதிபனும் வன்மைசேர்வாவியைக்கண்டு
புனலதுவருந்திச்சோபமுந்தீர்ந்து புதுப்பிறையனையமேடையின்மே
லினிதுவீற்றிருக்கவளகைகோன்புதல்வி எழிலுறுமஞ்சனமாட
வனிதையரோடும்வருதலைக்கண்ட மருவுமாமுனிமயல்கொள்வான்.

இ-ள். வனத்திற்புகுந்த மண்டலாதிபன் அங்குள ஓர்வாவியைக் கண்டு அவற்றிலிரங்கிச் சலபானஞ்செய்து பின்னர் தனது சோபந்திரு ம்படியாய் பளிங்குமாமணிமேடையின்மீது இனிது வீற்றிருக்கயில் அளகாபுரிக்கிறைவனுகிய குபேரன் புதல்வி தனது தோழிகளுடன் சேர்ந்து சலக்கிரீடை செய்யும்படியாய்வர அவ்வனிதையைக்கண்ட மருவுமாமுனி விரகமுற்றவரானுர்—எ-று. (௧௦)

அனங்கனுல்மெலிந்தமருவுமாமுனியு மரிவைநீயாரெனவினவ
கனங்கொளுமளகைவேந்தனுக்குதித்த காரிகையென்றுபின்செல்ல
மனமடங்காதமால்கொடுவேந்தன் மவுனமுற்றேபதியுறைய
சினவிடைப்பெருமானறிந்தவைமுடிக்கத் திருவுளமிரங்கினராமால்.

இ-ள். மன்மதனது மலர்க்கணையால்மெலிந்து துன்பப்படும் ம ருவுமாமுனியென்னும் வேந்தன் அதிரூப சவுந்தரியமுடைய அப் பாவையை ஓ பெண்பாவாய் நீயார் உன்பெயரென்னவென்றுவினவ அ தைக்கேட்ட அம்மாது ஓ அரசே நான் அளகாபுரிக்கிறைவனுகிய கு பேரனுக்குஞ் சுரலோகைக்கும்பிறந்த சவுலாகினியென்று சொல்லுவார் களென்று கூறிச்சென்றபின் வேந்தன் நெடுங்காதல்கொண்டு கிஷதபுரி யைச்சேர்ந்து அரசுசெலுத்தாமலும் யாவரோடும்பேசாமலும்மவுனமா கத் துன்பமுற்றிருப்பதை ஜகதீசனுகிய வெண்விடையோனறிந்து அ வ்வாறேமுடிப்பதற்குத் திருவுளமிரங்கினுர்—எ-று. (௧௧)

வேறு - விருத்தம்.

முக்கணனுந்திருமாலு மலரயனுந்தேவர்களு முனிவாருந்
திக்கனைத்துமரசுசெயுமருவுமுனிமணம்வேண்டிச்செறிந்துவொன்றய்
தக்கபுகழளகேசன் பாற்செல்லக்கண்டவனுந் தாழ்ந்துபோற்றி
மிக்கமணிப்பீடமிசை வீற்றிருக்கவேண்டுமென விளம்புசொல்வான்.

இ-ள். திரிநேத்திரதாரியாகிய பரமசிவனும், திருமாலும், பிரம னும், முப்பத்துமுக்கோடிதேவர்களும், சப்தரிஷிகளும், பதினெண்க ணங்களும், ஒன்றாய்க்கூடி எண்டிசையும்புகழோங்க அரசுசெலுத்தும் மண்டலாதிபனுகிய மருவுமாமுனிக்கு மணஞ்செய்துவைக்க எண்ண முற்றவராய் மேன்மைபொருந்திய குபேரனைநோக்கிச் செல்லுகயில் இவர்கள் வரவைக்கண்ட அளகேசன் எதிர்வந்துபணிந்து பலவாறுக த்துதித்து நவரத்தினகசிதமாகிய பீடத்தின்மீது இனிது வீற்றிருக்க வேண்டுமென்று நயந்துகூறுவான்—எ-று. (௧௨)

வேறு-விருத்தம்

அந்திவண்ண னமர்ந்திடுங்காலிவ்வை
குந்தமாதவன் கூடவிளங்கினன்
முந்துந்தேவர் முனிவரர்போற்றிசெய்
எந்தைதன்னை இடம்வலஞ்சுற்றினன்.

(இ-ள்.) செக்கர்வானம்போன்ற சிவந்து அழகிய திருமேனியையுடைய ஜகதீசனாகிய பரமசிவன் மணியாசனத்தின்மேலாரோகணித் திருக்கையில் வைகுந்தமென்று சொல்லப்பட்ட பரமபதத்திலெழுந்தருளியிருக்கும் முகுந்தனும் சிங்காதனத்தின்மீது இனிதுவீற்றிருக்கத் தேவர்கள் முனிவர்கள், முதலியயாவரும் அவரவர்களுக்குத் தகுந்த மணியாசனங்களில் உட்கார்ந்ததைக்கண்ட குபேரன் யாவருந்துதிக்கத்தக்க எந்தையாகிய சிவபெருமானை வலமிடமாகச்சுற்றிநிலத்தின்மீதுவிழுந்து அஷ்டாங்கனாய்ப்பணிந்துகூறுவான்—எ-று. (கங)

போற்றிப்போற்றிப் புராந்தகனேயெனச்
சாற்றிவேந்தன் றனிக்கரங்கூப்பியே
எத்திநாத வெளியன்பால்வந்தவைச்
சாற்றுவீரெனத் தாழ்ந்தனன்பாதமே

(இ-ள்.) போற்றிபோற்றி ஓய்-திரிபுரதகனா தீனதயாளு-சயம்பூ-சங்கரா-சர்வலோக சரண்யா, ஜகதீசாவென்று செங்குமுதம் போன்ற அழகிய கரங்களைச் சிரமிசைக்கூப்பிப் பலவாறாகத்துதித்து ஏ-தேவதேவா-மகாப்ரபூ-நாயினுங்கடையேன் மீது கருணை சுரந்துவந்த காரணம்யாது, அஃதைப் பேதையேனுக்குத் திருவாய்மலர்ந்தருளல் வேண்டும் ஐயனே என்று அரிபிரமாதி தேவர்களாலும் அறிதற்கரியபொற்றாமரைக் கமலங்களைப்போன்ற அழகிய பாதப்புணையிற் றாழ்ந்தான் அளகேசன்—எ-று. (கச)

கொன்றைதும்பைக் குளிர்பிறைபூண்பவர்
நன்றுலாவிய நானிலங்காப்பவர்
பொன்றுலாஞ்சிர மாலிகைபெற்றவர்
அன்றடைந்த வளகனுக்கோதுவார்

(இ-ள்.) பொன்போலிலகுங் கொன்றைமாலையினையும் வெண்மை பொருந்திய அழகிய தும்பைமாலையினையும், சீதளம் பொருந்திய கங்கையினையும், மூன்றாம்பிறைச்சந்திரனையும், அணியத்தக்கவராகியும், தபோதனர்கள், முனிவர்கள், வாழ்ந்து யாகாதி கிர்த்தியங்களை வளர்த்திக்கொண்டிருக்கும் நானிலமுழும் புரந்து காக்கத்தக்கவராகியும், சிரமாலிகாபரண முடையவராகிய பெருமான் தனதுபாதப்புணையிற் படி

ந்து கனிபக்தியோடும் வினவுகின்ற குபேரனுக்குச் சொல்லுகின்றார்—எ-று. (கரு)

வேறு-விருத்தம்.

படியுளோரேத்துமன்னனேகேண்மோ
பச்சைமால்புதல்வனுக்குனது
வடிவினில்மிகுத்தபுத்திரிதன்னை
மணமதுபுரிந்திடவேண்டி
அடைவுடன்யாங்களனைவரும்வந்தோம்
அகமதெவ்வணமுனக்கென்ன
சடைமுடித்தேவேயினதுள்ளம்போலத்
தருகுவேனென்றுசம்மதித்தான்

(இ-ள்.) தபோதனர் முதலிய நல்வர்புகழத்தக்க அளகாபுரிக்கிறைவனாகிய அரசே கேளாய், வைகுந்தநாதனாகிய திருமாலுக்கும் பூமகளுக்கும்,பிறந்துநிஷதபுரியனைத்துக்கும்,ஏகசக்ராதிபதியாகயிருந்து அரசாட்சிசெய்துவரும் மருவுமாமுனியென்னுந் திருப்பெயர்வாய்ந்த புதல்வனுக்கு உனது தவப்புத்திரியாகியும் வடிவில் மிகுத்தவளுமாகிய சவுலாகினியைத் திருமணமுடித்துவைக்கவேண்டித் தெய்வலோகவாசிகளாகிய நாங்களனைவரும் இவண் விஜையஞ்செய்தமையால் உனது கருத்தெவ்வகையாகயிருக்கின்றது சொல்லுவாய் வேந்தனே என்றுகேட்டசந்திரஜடாதரமூர்த்தியாகிய சிவபெருமானைநோக்கி ஓ-கற்றைவேணியங்கடவுளே,தமியேன்என்னபிரதி உத்தரஞ்சொல்லப்போகின்றேன்தேவர் சித்தத்தின்படியே நடப்பித்துக்கொள்ளுங்களென்று சம்மதப்பட்டான் குபேந்திரமகாராஜன்—எ-று. (கசா)

வேறு-விருத்தம்

அலகில்செல்வ னிசைந்தபினண்ணலார்
கலைமகட்கினி யானைக்கருணையால்
நலமைசேர்சுப நாளதுபாரென்க்
குலவிவாழக் குறித்தனனுளுமே

(இ-ள்.) ஒப்பற்ற செல்வத்தினையுடைய அள்காபுரிக்கிறைவனாகிய குபேரன் றனது குமாரத்தியைக்கொடுப்பதற்கு இசைந்தவைகண்டு கயிலாசபதியாகிய சிவபெருமான் அச்சமுகத்தில்வந்திருந்குங்கலைமகளாகிய சரஸ்வதிதேவியினது காதலனாகியும் சிருஷ்டி கர்த்தாவாகியும் விளங்கும் பிரமதேவனை கருணைநிறைந்த பார்வையோடும் பார்த்து-ஓய்-பிரமதேவனே, விவாகமஹோற்சவத்திற்குரியதினமாய் ஒருசுபதினம் பார்ப்பாயாகவென்றுகூற அஃதுணர்ந்த பிரமன் அவ்வாறே ஓர் முகூர்த்ததினம் நியமித்தான்—எ-று. (கஎ)

குறித்தநாளுங் குறுகுவதற்குளே
உருத்திரன்றனுரைப்படிவானுளார்
விருத்தமாம்வெளி யாவுமறைந்திடப்
பருத்தகன்றதோர் பந்தருமிட்டனர்

(இ-ள்.) பிரமதேவனுற்குறிக்கப்பட்ட முகூர்த்தநாள்நெருங்குவ தற்குமுன்னர் உருத்திரமூர்த்தியாகிய சிவபெருமான் உத்தரவின்படி விண்ணுலகவாசிகளாகிய தேவர்களும், பூதகணங்களும், ஒன்றாய்க் கூடி வட்டமாய் எங்கும் நிராமயமாகவிருக்கும் ஆகாயவெளியெல்லா ம் மறையத்தக்கதாக தென்னங்கீற்றுகளாம் பச்சைப்பந்தல் போட்டு முடித்தார்கள்—எ-று. (௧௫)

வேறு-விருத்தம்.

கமுகதின்மரத்தைநாட்டிக் கதலிமாவிலைகள்சூட்டிச்
சமமதாய்த்தோரணங்கள் தனிப்புரியெங்குந்தாக்கி
நிமையதற்கெட்டாதோங்கு நெடுமதிள்மணிகளாலும்
அமுதமென்மதியைப்போல வலங்கிருதஞ்செய்யலுற்றார்

(இ-ள்.) பந்தர்களின் கால்கடோறும், கமுகமரங்களும், வாழை மரங்களும், கருப்பஞ்சோலைகளும், கூந்தற்பனைமுதலிய பலாக்கனி களும், மாவிலைகளுங்கட்டிப் புட்பங்களால் அலங்கிருதஞ்செய்து எங் குஞ்சுகந்தமுலாவும் பனிநீர்களைத்தெளித்துப் பட்டணமுழுமையும், மகரதோரணங்களும், அழகிய துவசங்களுந்தூக்கி அணி யணியாய் முத்துக்குச்சுகள் தொங்கவிடுத்துக் கனகமயமாகிய கும்பங்களைநிறுத் தி மங்குல்தவழும் நாற்புறமதிள்களின்மீதும் வரிசைவரிசையாய் மா ணிக்கங்களை அழுத்தி இலகாநின்ற கலசங்களைநிருத்தி அனந்தங்கோ டிசந்திரர்கள் உதையமானதுபோல அமைத்தார்கள்—எ-று. (௧௬)

வேறு-விருத்தம்.

மலைமகள்முதலாமங்கையர்கூடி
வண்ணமசேர்மஞ்சனமாட்டி
இலகுநற்பணியுமணிகளுந்துலங்க
விசைத்தபின்மணவனையேற்ற
நலமுறுஞ்சடங்கின்முறைபிறழாது
நான்முகனுதியோர்முடித்து
நிலவெறிக்கனைவலம்வரச்செய்து
நிரைநிரைஆர்த்தியுமெடுத்தார்

(இ-ள்.) பார்வதிதேவியும், இலட்சுமி சரஸ்வதிமுதலிய மங்கல மாதர்கள்கூடி வெள்ளையானையின்மீது கனகமயமான கலசங்களை வைத்

துக் கங்கையமுனை நர்மதை முதலியதீர்த்தங்களை வேதவேதியரால்வருவித்து சுபலக்கினத்தில் மருவுமாமுனிக்கு மஞ்சன மாட்டுவித்து வெண்பட்டுகளால் ஈரந்துவட்டி சாம்பிராணிமுதலிய அகிற்புகைகளையூட்டி இழையாயிரம் பொன்பெற்ற இந்திரவர்ன்னப்பட்டுடுத்தி அஸ்தகடகமுதலிய வாகுவலங்கள் பாஜிபந்து உத்திரசஞ்சம் முத்துமாலை சந்திரகாந்தப்பதக்கங்களுமிட்டு விரல்களுக்கெல்லா மோதிரங்களிட்டு நவமணிகளாற்கோர்த்த உத்தரீயமிட்டுசவுலாகினிக்கும்மங்களஸ்நானஞ்செய்வித்துப் பணிமணிகளாலலங்கிருதஞ்செய்து இருவரையும் மணப்பந்தலில் பொற்பீடத்திருத்திபிரமன்முதல் வேதவேதியர்களெல்லாங்கூடி ஓமம்வளர்த்தி அக்கினிதேவனை அவற்றில் ஆவாகனப்படித்திச் சடங்குகள்யாவும் நியமப்படி முடித்து மும்மூர்த்திகளாலும் தேவரிஷிமுதலிய தபோதனர்களாலும் சேஷையிடுவித்து அம்மிமிதிக்கச்செய்து அருந்ததிசேவைகாட்டி அரம்பை-ஊர்வசி-மேனகை- திலோர்தமைமுதலிய நடனப்பெண்கள் மங்களார்த்திகள் சொல்லப் பெண்ணையும் பிள்ளையையும் தவிசுட்சேர்த்துப் பால்பழமுதலிய உபசாரமனைத்துஞ்செய்து தேவர்முதலிய யாவர்களுக்கும் அனந்தவிதசயித்தியோபசாரங்கள்செய்து ஊர்க்கோலங் காட்டி முத்து பவளம் கெம்பு, மரகத வயிடூரிய இந்திரநீலகோமேதக புட்பராக மாணிக்கமென்னும் நவமணிகளாலும் ஆராத்திகள்சுற்றியெறிந்தார்கள்—எ-று. (உ௰)

வேறு-விருத்தம்.

கத்தும்வாரிபோற் காகளபூரியும்
நத்தியெங்கு நவரியமுதமே
பத்திவானர்படையும்நெருங்கவே
வெற்றிசங்கது வேணதுகோடியே

(இ-ள்.) காளை-எக்காளை-சினனம்-கொம்பு-பூரி-காகளம் தவண்டைமல்லரி துத்தாரி நாகசுரம் மத்தளம் கனகதப்பு பேரிகை தடாரி டங்கா,வேணுநாதம் கின்னரி புள்ளாங்குழல் வீணை வாத்தியமுதலிய யாவும் எழுகடலொலியினும் பேரொலிபோற் காட்டி முழங்கும்படியாய்—எ-று. (உக)

பவனிவந்துப் பதியோர்மகிழுற
புவனயீசனென்றே புகழ்ந்தேத்திடத்
தவளநாதனு மாலுஞ்சந்தோஷிக்க
அவனிவேந்த னரன்மனைபுக்கினன்

(இ-ள்.) அனந்தவிதவைபத்தோடும் அளகாபுரியை பவனிவருகையில் அப்பதியுளோர் யாவரும் மகிழ்வெய்தி புவனசராசர மனைத்தும் புரக்கவல்லயீசனேயென்றுசொல்லும்படியாய் அந்தவளமேனியரு

கிய உமாமயேசனும் திருமாலுஞ் சந்தோஷங்கொள்ளத் தக்கதாகவும் நிஷதபுரிக்கிறைவனாகிய மருவுமகாமுனிஅரசன்மனையிற்சேர்ந்தார்-எ(

வந்துவந்து வமரருங்கூடியே
அந்தமில்லா னடியிணையேத்திப்பின்
முந்தும்லோக முயன்றவரோகினர்
விந்தையானதோர் வேழுலகெங்குமே

இ-ள். இவ்வகையாய் மருவுமாமுனி கலியாணமண்டபஞ்சேர்ந்தபின்னர் பூலோக, புவர்லோக, சுவர்லோக, ஜனோலோகதபோலோக, மகாலோக, சத்தியலோக மென்னும் ஏழுலகவாசிகளாகியதேவர்களும் தபோதனர்களும், விருஷீஸ்வராள்-முதலியயாவரும் ஆதியந்தமில்லானாகியும் அருவுருவமற்றவனாகியும், விளங்கும்பரமசிவனுடைய உபய சரணம்புயங்களைப்பணிந்து விடைபெற்று அவரவர்கள்பதிக்கு எழுந்தருளினார்கள்—எ-று (உகூ)

மருவுமாமுனி மங்கையைக்கூடியே
சருவிகாமமுந் தன்மனம்பொங்கியே
உருகியப்பதி யோர்திங்கள்சென்றபின்
அரிவையாளுட னப்பதிநீங்கினன்

(இ-ள்.) மருவுமாமுனியாகிய திருமால்புதல்வன் தனதுதேவிசவுலாகினியைக்கூடிஓர் மாதம்வரையில் அளகாபுரியிலிருந்து இரதிதேவியும்,மன்மதனுப்போலும் இந்திராணியுந்தேவேந்திரனும்போலும், மானும் கலையும்போலும், அன்னமும் பேடுபோலுங்கூடிக்களித்திருந்து பின்பு தன்னுடைய பதியாகிய நிஷதபுரிக்கேகுவதற் கெண்ணங்கொண்டு தனதுதேவியோடு அளகாபுரியினின்றும் நீங்கினன்—எ-று. ().

விருத்தம்

அரசனுஞ்சாற்ற வளகைகோனிசைந்து அமரர்களிருபுறஞ்சூழ
விளைசெறிதளங்களுலாயிரங்கோடிமிக்கநாவலர்களும்நெருங்க
பரவியதேவர்பூமழைபொழியப் பார்த்திபன்தேவியும்ரதத்தில்
தனைபுகழ்நிஷதபுரியதைநோக்கித் தரணிநாயகனுமேடைந்தான்

(இ-ள்.) மருவுமாமுனியென்னும் வேந்தன் தனதுமாதுலனாகிய அளகேசனிடத்தில் தான் ஊருக்குப்போகவேண்டியதைத்தெரிவிக்க வதற்கிசைந்தகுபேரன் கனகமயமாகிய அநேகம் இரதங்களும் இந்திரலோகத்தில்வாழும் அயிராவதத்திற்கிணையாகிய அநேகம் யானைகளும், வாயுவேகம்போன்ற கோடா கோடி குதிரைகளும், நாலாயிரங்கோடி காலாள்களும், பூஷணாவர்க்கங்களும், பிரயாணப்படும்படியாய்த்திட்டப்படுத்தி தேவர்முதலிய முனிவர்களும், பட்டுவான்களும், புடைசூ

ழும்படி ஐந்துவித பேரி பூரி முதலியவாத்தியங்களுங்கடலொலிபோல் முழக்கிவித்து மருவுமாமுனியையும் சவுலாகினியையும் நவரத்தினமயமான தேரிலேற்றி ஆடல்பாடல்கள் சங்கீதவாத்தியத் துடனே, ஆசீர்வதித்து அனுப்புகையில் விடைபெற்று ஆடம்பரத்தோடும் நிஷதபுரியைநோக்கி நடந்தான்—எ-று. (உரு)

வேறு-விருத்தம்.

அப்பதிகடந்தவரு மார்ப்புடனெழுந்து
முப்பதிவனத்திஞெடு மொய்யிருள்கடந்தே
துப்புலவுதொய்தவனத் துறையதுகடந்து
செப்பமதாய்தேவரொடு செல்வனும்நடந்தான்

(இ-ள்) அளகாபுரியைக்கடந்து ஆடம்பரத்தொடு மெழுந்ததானையின்பெருக்கானது சூரியமண்டலத்தையும்மூடி மூவர்கள் வாழும்பதிகளையுந்தாண்டி வனங்கள்முதலிய அந்தகாரமாகிய சோலைகளையெல்லாம்விடுத்து பரிசுத்தராகிய தபோதனர்கள் வாழும் தொய்தவனத்துறைசேர்ந்து அங்குள அதிசயங்களையெல்லாம்பார்த்துக் களித்து அவணின்றும்நீங்கி மாட்சிமையோடும் வானவர்கள்சூழும்படி ஒப்பற்றசெல்வத்தையுடைய மருவுமாமுனி நடந்தான்—எ-று. (உசு)

தங்கமுடிமன்னவர்க டாளிணையில்வீழ
இங்கிதமடந்தையர்க ளிருபுறமுலாவ
அங்கபதிவாழ்புவியு மடவியதும்நீங்கி
மங்களமுழங்குபதி மன்னவனுமுய்த்தான்

இ-ள். கனகமய கிரீடகுண்டலங்களோடுங்கூடிய வேந்தர்கள் மருவுமாமுனிவரும் பவனியைக்கண்டெதிர்சென்று-ஏ, மண்டலாதிபர் பராக்கென்றோதி அடிவணங்கவும் இங்கிதமுலாவும் கணிகையர்களாகிய அரம்பையர்கள் நடித்திருமருங்கு முலவிவரவும் அங்கதேசாதிபன் வாழும்பட்டணம் ஆரண்யமுங்கடந்து மங்களம் பெற்றிலங்காநின்ற நிஷததேசத்தையாளும் இராஜராஜேஸ்பரனுகியமன்னன் றனதுநாட்டைநோக்கினுன்—எ-று. (உஎ)

ஆளிபுலிசிங்கமுறு மடவியதும்நீத்த
கோளரியன்னுனை நறுங்கோவலர்களேத்த
நீள்புவியின்மேவரொலாய் நிருபதமேகாண
ஆள்புவியடைந்தன னரிக்குரியமைந்தன்

இ-ள். காட்டானை கரடி புலி சிங்கம் யாளி சார்த்தூலம் கண்டபேரண்டமுதலிய கணக்கூட்டம் வாழும் வெவ்விய காடாரம்பங்களைக்கடந்த பராக்கிரமகேசரிபோன்ற மண்டலாதிபனுகிய மருவுமாமுனி

யை சிறப்போங்கிய கோமுறமை செய்யும் வேந்தர்களும் நெடியவா னுலகுற்ற அமரர்களும் எதிர்கொண்டுவந்திறைஞ்சும்படியாய்த் தான ரசாட்சிசெய்யும் நிஷதபுரியின் கோட்டைவாயலையடைந்தான்பாற்கட ற்றுயின்றோன் மைந்தனாகிய பார்வேந்தன்—எ-று (உ-அ)

தோரணமிலங்குதடம் தூமுனிகடந்தே
ஆரணனுநாரணனு மரிவயருஞ்சூழ
சீரணிகொள்வீதியில் செழித்துவளர்மாதர்
காருலவுமேடைதனில் காணவெதிர்நிற்பார்

இ-ள். மகரதோரணமுதலி கும்பங்களும் நானாவிதத்துவசங்களு ம் தூக்கி எங்கும் சுகந்தமுலாவும் பனிநீர்களைத்தெளித்துக் கோலங் களுமிட்டு கற்பூர ஆராத்திகளுமேந்தி நிற்கும் அழகிய வீதிகளில் ஆ ரணனாகிய சிவபெருமானும் நாரணனென்னுந் திருமாலும் தத்தம்தே விகளோடும் கனகமயமாகிய இரதங்களின்மீது இருபுரமுஞ் சூழ்ந்து வர நடுநாயகமாய் ஒளிரும் மருவுமாமுனியை அப்பதியில்வாழும் அ ருந்ததியைப்போன்ற கற்புடையமங்கையர்களெல்லாம் மணமாலைசூட் டியிலகும் மணிமார்பனை காண்பதற்காசைகொண்டு மேகங்கள் தவழா நின்ற உப்பரிகையின்மீது கூட்டங்கூட்டமாகக்கூடிநிற்பார்கள்-எ-று()

உரையுமணிமாளிகை யுளும்பருடன்புக்கி
அருளுலவுமப்பதியி லத்தினமிருந்தே
மறைபுகலொணுதவரன் மாதுமையோடேக
நறைகமழும்பரமபதன் நங்கையொடுசேர்ந்தான்

இ-ள். மருவுமாமுனிவாழும்படியாகிய சந்திரகாந்தமணிமேடை கள்வயங்கும் அரண்மனைக்குள் பொன்னுலக வாசிகளாகிய தேவர்க ளோடுசேர்ந்து முப்பத்திரண்டறங்களுக்குந்தாயகம்போல்விளங்கும் அந்த நிஷதபுரியில் அன்றுமுழுமையுமிருந்து மறுநாட் போதுவிடிந் தபின்பு; இருக்கு-யசுசு-சாமம்-அதரணமென்னும் நான்கு வேதங்களா லுஞ்சொல்லப்படாத கயிலாசபதியாகிய பரமசிவன் உமாமகேஸ்வ ரியோடும் பரமபதநாயகனாகியதிருமால் இலக்குமிதேவியோடும் மரு வுமாமுனியை ஆசீர்வதித்து அவனிடம்விடைபெற்றுத் தத்தம்பதிக் கெழுந்தருளினர்கள்—எ-று (௩௰)

அப்பதியைமாமுனியு மறநிலையில்நின்றே
முப்பதியோர்மெச்ச மநுமுறைமைபிறழாமல்
எப்பதியுளாருமிவ னீசனெனவேத்த
மைப்படியுங்கன்னியுடன் மகிபதியும்வாழ்ந்தான்

இ-ள். செப்புதற்கரிய நிஷதபுரியென்னும் நகரத்தை மருவுமா முனிவேந்தன் - தரும நிலையில் நின்றும் - கயிலாசபதியாகிய பரமனும் வைகுந்தநாதனாகிய திருமாலும், பிரமலோகத்துக் கதிபதியாகிய மலரவனும் இம்மூவரும் சந்தோஷிக்கும்படியாயும் மண்ணுலகவாசிகளாகிய வேந்தர்முதலிய தபோதனர்களும், ஜகதீசனே, இவ்வடிவங்கொண்டனனென்று துதிக்கத்தக்கதாய் மநுமுறையாகிய இராஜநீதியிற்பிறழாமல் நீலோற்பலம்போலும் சேலைப்போலும் ஒள்ளியவேலைப்போலும் மானைப்போலும் ஆலகாலவிடத்தைப்போலும் கரிவண்டைப்போலும் மையார்ந்த அழகியகண்களையுடைய சவுலாகினியென்னும் வநிதையைக்கூடி வாழ்ந்தான்—எ-று (௩௧)

மன்னனொடுமங்கையு மதன்ரதியைப்போலும்
துன்னுமணியூசலின்மேற் றூவிசயனத்தில்
புன்னைமருமாமலர்கள் பூவணைகளிட்டே
நன்னயமதாகவிளை யாடிநாட்கழித்தார்

இ-ள். மன்னர்பிரானாகிய வேந்தனும் சவுலாகினியும் பொன்னினாற்பலகைசேர்த்து மரகதமாணிக்க கோமேதக புட்பராக வைடூரிய இந்திர நீலங்களாலழுத்தி இலகாநின்ற அழகிய ஊஞ்சற் பலகையின்மீது அன்னத்தின் றூவிகளாலமைத்த சயனமிட்டு அவற்றின் மீது மல்லிகைமுல்லை மருவு இருவாட்சி பாரிசாத புன்னை கோங்கு மந்தாரமென்னும் நருமணங்குலவு மலர்களைபரப்பி நன்னயத்தோடும் அனங்காகமவிதியின்படி இரதி மன்மதனைப்போலக் கூடிக்களித்து விளையாடி நாட்கழித்துவந்தார்கள்—எ-று. (௩௨

பந்துவிளையாடிவெள் பாங்கியர்களுடனே
விந்தையுறுமென்மலர்கள் வேணபடிகொய்தே
அந்தமொளிரளகமதி லறிவையர்கள்சூட்ட
மைந்தனதுவில்லையென மாதுதுயருற்றாள்

இ-ள், சவுலாகினியானவள் தனது பாங்கிகளுடன்கூடி பூங்காவனத்தில் பந்துவிளையாடுவதும் தன் மனதுக்கிசைந்த சுகுந்தமுலாவும் நானாவிதபுட்பங்களைச் சேடியர்களால் பரிப்பித்தும் கருங்கங் குலைப்போல் பிரகாசியாநின்ற அளகத்திற் றரித்துக்கொள்ளுவதும் மனதுக்கிசைந்தபடி யுலாவி களித்திருக்கயில் தான் கொஞ்சிக்குலாவி எடுத்தணைத்து முத்தமிட்டு உச்சிமுகர்ந்து களிப்புற்றிருப்பதற்கு புத்திரபாக்கியமில்லாமற் போயிற்றேயென்று புந்தியில் மிகவுந்துயரங் கொண்டாள் பெண்ணரசியானவள்—எ-று (௩௩)

மன்னனெனுமாமுனிவன் வண்மையரசாட்கால்
தன்னரசினுக்குறிய சந்ததியிலாதால்

பொன்னனையநெஞ்சமது புண்படவிருக்க
மன்னுசமுகந்தனில் மதங்கமுனிவந்தான்.

இ-ள். வேந்தர்வேந்தனாகிய மருவுமாமுனி சிறப்போங்கிய விதேதபுரியைக் கோலோச்சிவரும்நாளையில் தன்னரசுக்குறிய புத்திரபாக்கியந் தனக்கில்லையென்று பொன்போலிலகும் நெஞ்சம் புண்ணாகிக்குழைந்து துன்பசாகரத்துள்ளழுந்தி இராஜரீகத்தினும் மற்ற எவற்றினும் மனஞ்செல்லாமல் ஏக்கங்கொண்டிருக்கும்போது விருஷீஸ்வரர்களாலும், முனியீஸ்வரர்களாலும், தபோதனர்களாலும், தேசமன்னர்களாலும், சூழப்பட்டுப் பிரகாசம்பொருந்தியிராநின்ற மன்னனது கொலுச்சமுகத்திற்கு யாவராலும் போற்றுதற்கரிய மதங்கமாமுனிவந்தார்—எ-று. (௩௪)

வேறு - விருத்தம்.

பொன்னிறம்போன்ற சண்ணுமாமுனியைப்
போற்றியேமுனிவரர்யாரும்
மன்னியசபையில் வேந்தனுக்கந்த
மதங்கமாமுனியருளியதை
கன்னல்வாய்த்திரந்து கலுழுவிரொன்னக்
கரைகுவோம்கேண்மினென்றவரும்
அன்னிலமுனிவ ரருந்தவர்கேழ்க்க
வருமுனிசெயல்சொலவிசைந்தார்.

இ-ள். மருவுமாமுனியினுடைய சரித்திரத்தையெடுத் தோதிக்கொண்டுவரும் பொன்போன்ற சடைமுடிதரித்துப் பிரகாசியாநின்ற சண்முனியைச் சவுனகாதிமுனிவர்கள்பணிந்து மருவுமாமுனியினுடைய சமுகத்துக்கெழுந்தருளிவந்த பெருமைபொருந்தியமதங்கமாமுனி அம்முனிவேந்தனுக்கு அநுக்கிரகஞ்செய்ததைத் திருவாய்மலர்ந்தருளவேண்டுஞ் சுவாமீயென்றுகேழ்க்க கேளுங்கள் சவுனகாதிமுனிவர்களேயென்று முனிவரர் சொல்லத்தொடங்கினார்—எ-று. (௩௫)

வேறு-விருத்தம்.

மதங்கமாமுனிவர்வருதலைக்கண்டமன்னெதிர்சென்றவணிறைஞ்ச
இதம்பெறுமுனிவராசியையேற்று வெழின்மணிப்பீடமேலிருத்திச்
சுதனிலர்வகைக்கென்செய்குவேனென்னத்தூயவர்நித்தன்வாழ்கயிலை
சதியுடன்சென்றுபிரதட்சணஞ்செய்யிற் சந்ததியாமெனச்சென்றார்

இ-ள். கேளுங்கள் சவுனகாதிமுனிவர்களே மதங்கமாமுனிவருதலைக்கண்ட மாயவன் புதல்வனாகிய மருவுமாமுனிவன் சிங்காசனத்

தைவிட்டெழுந்து முனிவர்களும் இராசாக்களும் புடைசூழ்ம்படியாய் எதிர்கொண்டுபோய் முனீந்திரனது பாதகமலங்களில் பணிந்தெழுந்து இருகரங்களையும் சென்னிமேற்கூப்பி ஓய்-முனிநாதனே, தேவரீர் கடையேனை ஒருபொருட்டாகவெண்ணிப் பொற்றாமரைக் கமலம்போன்ற அழகியபதாம்புயங்கள் வருந்தும்படியாய் எழுந்தருளிய காரணம்யாதோ அறியேனென்று பலவாறு துதித்துநிற்கும் மருவுமாமுனியை மதங்கமாமுனி இருகரங்களாலுந்தழுவி அடாசெல்வனே. நீயும் உனதுதேவியும், நீடூழிகாலம் வாழக்கடவையென்று ஆசீர்வதிக்க அவ்வாசியைப்பெற்றபின் அம்முனிசிரேஷ்டனை அனந்தவித சயித்தியவுபசாரங்களோடும் கொலுச்சாவடிக்கழைத்துக்கொண்டுபோய், நவரத்தின கசிதமாகிய சிங்காதனத்தின்மீது எழுந்தருளச்செய்து தான்பணிந்திருந்து ஓ மாதவப்பொருளே," சிறியேன் அரசுக்குறிய செல்வனில்லாமையால் வருந்துகின்றேனென்றுகூற வஃதுணர்ந்தமுனிவரன் வேந்தனைநோக்கி, அப்பா ராஜசிங்கமே, நீயும் உனது பத்தினியும், சந்திரசடாதரமூர்த்தியாகியும் சதுர்மறைமுடியில் நடமிடுசயம்புவாகியும் சம்புவாகியுந் தனிப்பொருளாகியும், ஆரணப்பொருளாகியும் அமலனாகியும் அடியார்க்கடியவனாகியும் அருவுருவற்றதாகியும் அரிபிரமர் தேடுதற்கரிதாகியும் ஆதியந்தமிலாதாகியும் வயங்கும் சகதீசன்வாழும் ஸ்ரீகயிலாசகிரியை பஞ்சசுத்தியோடும் பிரதட்சணஞ்செய்தால் பரமசிவனுடைய கிருபையினால் புத்திரசந்தானமுண்டாகுமென்று சொல்லிவிடைபெற்றுதன்னாசிரமத்துக்கு எழுந்தருளினார்—எ-று. (௩௬)

முனிவரனுரைத்தவாய்மையைத்தனதுமொய்க்குழலாளுடன்மொழிந்
பனிவரைக்கேகத்தேர்மிசையூர்ந்துபாலைமாவனமெலாங்கடந்து [தி
தனிகயிலாசகிரிவலஞ்செய்து சங்கரனருளதும்பெற்று
வனிதைதன்னோடும்நகரதையடைந்துமன்னவனரசுசெய்நாளில்

இ-ள். மருவுமாமுனி தேவமுனியா லுரைக்கப்பட்டதை தனது காதலியாகிய - சவுலாகினியுடன் சொல்லிக் கயிலாசகிரிக் கெழுந்தருள வேண்டுமென்று - தேவரிஷிகளோடும் முனியீஸ்வரர் தபோதனர் - வேதவேதியர் - யாவருந் தன்னைச்சூழ்ந்து வரும்படியாய் தானும் தன்னுடைய மங்கையும் கனகமயமான ரதத்திலேறி நிஷதபுரியைக்கடந்து காடுமலை வனம் வனாந்திரமுதலிய கானாறுகளையெல்லாந்தாண்டிபாலவனத்தைச் சார்ந்துபோகையில்தன்னுடன்சூழ்ந்து வரும்முனிவர்முதலியோருக்கும்தனக்கும் கந்தமூலபலங்களுங்கிடைப்பதற்கரிதாயிருப்பதன்றியும் சூரியனது வெவ்வியகிரணத்தால்திரேகம்வருந்தி மெலிவுற்றமையால் அக்காலையில் யாவரும் ஸ்ரீகயிலாசபதியாகிய பரமசிவனை தியானித்து அவ்வனத்தைக்கடந்து உமாமயேசன் வாழும் வெள்ளியங்கிரியைக்கண்ட மாத்திரத்தில் அவரவர்கள் யேறி

த வாகனாதிகளைவிட்டிரங்கி நிலத்தின்மீது அஷ்டாங்க பஞ்சாங்க ரியாங்கராய்ப்பணிந்தெழுந்துஅஞ்சலியஸ்தராய்நின்றுஎ-கயிலாசபதே, மஹாப்பிரபோ-தீனயாளுவென்று பலவாறாகத்துதித்து அவ்வரையருகிற்சென்று அங்கெழுந்தருளிநாநின்ற இரண்டாஞ் சங்கரனாகிய நந்திகேஸ்வரனை தரிசித்து பின்னர் பிரங்கிரிஷிமுதலியபதினெண்கணங்களையும் நவநாதர்களையும் அஷ்டவசுக்களையும் பூதபேதபைசாசர்களையும்பணிந்து உமையொருபாகனாகிய சிவபெருமானைஉள்ளத்தில் நினைந்து திரிகரணசுத்தியோடும் கயிலையங்கிரியை மூன்றுதிரம் வலஞ்செய்துபணிந்துநின்ற மருவுமாமுனியையும் சவுலாகினியையும் கருணையங்கண்ணால்நோக்கிய பரமசிவன் அடாகுழந்தாய் உனக்கென்ன வரம்வேண்டுமென்றுகேழ்க்க-சுவாமி. தமியேன் அரசுரிமையைத்தாங்கும்படியாகிய ஓர்புத்திரனைத்தரல்வேண்டும் எந்தையேயென் றுகந்தமுலாவிய அரவிந்தமலர்போன்ற பதாம்புயத்திற்றோய்ந்த அரசிளங்கன்றாகிய முனிவனை எந்தவுலகமுமேத்தும் அந்திவண்ணன்சிந்தை மகிழ்ந்து அடா மைந்தனே, இப்போது எம்மை. நீ, கோறியவண்ணம் பெறுதற்கரிய புதல்வனைப்பயந்து சுகஜீவியாய் வாழக்கடவதென்றுவரமளிக்கயில் விண்ணுலகவாசிகளாகிய தேவர்கள் மலர்மாரி பெய்து தெய்வதுந்துபிமுழக்கி ஜெயாவிஜையபவாவென்று வாழ்த்திமறைந்தார்கள், அதைக்கண்ட காவலனாகிய முனிவனும் அவனது தேவியும் பணிந்து வாகனாதிகளிலேறி கயிலையினின்றும் நீங்கி பாலைவன முதலிய வனம் வனாந்திரங்களையெல்லாம் கடந்து நிஷதபுரியைச் சேர்ந்து அரசாண்டுவருகையில்—எ-று. (௩௯)

வேறு-விருத்தம்

இந்தவாறுயிருக்குமன்னாளையில்
அந்திவண்ணனருளியவாய்மையால்
சந்திரநேர்சவுலாகினிதையலாள்
மந்தமாய்க்கருவால்மயக்குற்றனள்

இ-ள். இவ்வகையாய் நிஷதமாபுரியை முனிசிகாமணி யாகிய வேந்தன் நீதிசெலுத்திவரும்நாளையில் அந்திவண்ணனென்னுஞ் செக்கர்வானம்போன்ற அழகிய திருமேனியினையுடைய பிறைக்கடவுள் அருளால் பூரணச்சந்திரோதயம்போன்றசவுலாகினியென்னும்பெண்பாவைக்குகெற்பமுண்டாய் தேகத்தில் மயக்கமுற்றயடியால் கைத்தல்-புளித்தல்-கார்த்தல்-உவர்த்தல்-துவர்த்தல்-தித்தித்த லென்னும் அறுசுவையினுடைய பதார்த்தங்களினிடத்தும் விருப்பும் வெறுப்புற்றவளாமாகினாள்—எ-று. (௩௰)

ஓங்கியகெற்பர்தானுமோரிரண்டெட்டுங்கூடப்
பாங்கியர்பக்கம்சூழ்ந்துபரிவுடனுபசரிக்க

மாக்குயிற்குடல்வெளுத்துவன்முலைமுகங்கறுத்து
பூங்கொடியிடைநோயுற்றுபொறுப்புநேர்புதல்வனீன்றாள்

இ-ள். சவுலாகினிக்கு கெற்பமானது யீரைந்துதிங்களும் பூரண மாய்சென்றதான் திரேகத்தில் பிரயாசையுண்டாக அவ்வசதிக்காததை க்கண்டு பாங்கியர்கள் நாற்புறமுஞ்சூழ்ந்து அனந்தவுபசாரங்களைச்செ ய்து எதிர்பார்த்திருகையில் கோகிலத்தைப்போன்ற இனியசொற்களை யுடையமங்கையினிடவுடலம்வெளுத்து யானையின் மத்தகம்போலும் அமிர்தகலசம்போலும் விளங்கும் முலைமுகங்கறுத்த பசுங்கொடிக்கு கெற்பவேதனையுண்டாகி நெடுமலைபோன்றஅழகிய வோர்செல்வனைப் பெற்றாள்—எ-று. (௩௬


பருவதனெனப்பெயர்பரிந்துடனளிக்கத்
திருமலர்சொரிந்தனர்கள் சேணுலகுளாரும்
இருடிக்குமுனிவர்களுமெழிலரசர்மகிழ
அரியரனுருத்திரருமப்பதியில்வந்தார்

இ-ள். சந்திரபிம்பம்போலுதித்த அழகியபாலனுக்கு பாவலர்க ளால் பருவதராஜனென்று திருப்பெயரளிக்க வக்காலையில்; ஆட்கலோ கவாசிகளாகிய தேவர்கள்கற்பகமலர்களை சோணைமாரிபோல் சலசல வென்றுவருஷிக்கவும் விருஷீஸ்வராள் முனீஸ்வராள் வேந்தர் முதலிய யாவரும் சந்தோஷமுறும்படியாய் ஸ்ரீகயிலாசபதியாகிய பரமசிவனு ம் வைகுந்தனாகிய திருமாலும் பிரமலோகத்துக்கதிபதியாகிய பி ரமனும் தங்கள் தங்கள் தேவிகளோடும் வாகனங்களிலேறி நிஷதபுரி யில்வந்துசேர்ந்தார்கள்—எ-று. (௩௭)

செப்பரியதேவரவர்திருமனைபுகுங்கால்
எப்பதியுமோங்கிடவெழுந்தபூரசோலம்
செப்புமுலைஉமையவளுஞ்செந்திருவுங்கூடி
அப்பனெனப்பருவதனைஅன்புடனெடுத்தார்

இ-ள். சொல்லுதற்கரிய பிரமன் விஷ்ணு ருத்திரனென்னும் மூ வர்களும் தேவிமாருடன் அரண்மனையில்வந்த காலையில் எண்டிசையு ங்கேழ்க்கத்தக்கதாய் தேவதுந்துபிமுதலிய ஐந்துவித பேரிகைகளும் கடலொலிபோலெழுந்தன பின்னர் உண்ணாமுலையென்று சொல்லப்ப ட்ட உமாமயேஸ்வரியும் செந்திருவென்னும் இலக்குதேவியும் அந்தப் புரத்துட்சென்று பொன்மலைப்போல் பிரகாசிக்கும் அழகிய பருவத ராசனை பேரன்போடும் அப்பனே வருகவென்று வனசமலர்போன்ற மிருதுவானகரங்களால் எடுத்தார்கள். (௩௮)







முன்டைகளுமுனிவருமுத்தருமிருந்தே
தென்றிரைமுகற்புவிசராசரமதுற்ற
அன்னையளித்தவுனக்கப்பனிவனுல்
பன்டையுளவோரொரும்பகரரியனென்றார்

இ-ள். முன்னைத்தோனுகிய பிரமன்முதல் முனிவர்களும் ஜீவன்முத்தர்களாகிய மேலோரும் உமாமயேஸ்வரியைப்பார்த்து கடல்சூழ்ந்த உலகமனைத்தையும் அவற்றுளடங்கிய தேவர்முதலிய ஜீவர்களையும் படைத்தளித்தழிக்கவல்ல தாயகமாகியவுனக்கு இச்சிறுவன் அப்பனுல் பன்டையுளயாவர்களாலும் சொல்லுதற்கரிய மெய்யனன்றேயென்றார்—எ-று. (௬௨)

சங்கனைவழங்கினர்கள் தரணிமிசையெங்கும்
அக்கரவணிந்தவனொடரியதிசயித்தே
மைக்குழலிதந்தையெனமனமதுமகிழ்ந்தார்
பக்கலுளமங்கையர்கள்பாடினர்களூசல்

இ-ள். நிஷதபுரியை அரசாட்சிசெய்துவரும் மருவுமாமுனிக்கு நற்றவப்புதல்வனுய் பருவதராசன்பிறந்தானென்று உலகமுழுமையும் சங்கனைவழங்க அக்குமணியாகிய உருத்திராட்சமாலைகளும், அரவமாகிய சர்ப்பங்களையும் ஆபரணமாய்த்தரித்திலகும் சந்திரசடாதரமூர்த்தியென்னும் பரமசிவனும் அரியாகிய திருமாலும் இவ்விருவர்களும் நமதுவுமையவளுக்கு இவன்றந்தையாகிய விதமெப்படியென்றும் திருமால்யெனது சோதரிக்குத்தாதையாகிய விதமெப்படியென்றும் ஒருவருக்கொருவர் மாச்சரியங்கொண்டு மனமகிழ்ந்திருக்கையில் அரிகிலிருந்தமங்கையர்கள்ஊசல்பாடத்தொடங்கினர்கள்—எ-று. (௬௩)

குரும்பைமென்முலை கோதையர்பாடுங்கால்
அரம்பைமாதர்க ளார்த்தியெடுத்திட
சுரும்புலாங்குழற் றோகையோர்பாகனர்
சிரமசைத்தந்த செல்வனைவாழ்த்தினன்.

இ-ள். தென்னங்குரும்பையைப்போன்ற தனங்களையுடைய மடந்தையர்கள்பாடும்போது அரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமையென்னுங் கணிகைமாதர்கள் முத்து, வைடூரியம், கோமேதகம், புட்பராகம், மரகத மாணிக்க இந்திரநீலம், பவளங், கெம்பென்றுசொல்லும் ஒன்பதுவகை ரத்தினங்களாலும, ஆரத்தியேந்தி எறியயில் சுரும்பாரும்புட்பங்களை அளகபாரத்திற்பொருந்திய உமையவளை இடப்பாகத்தில்வைத்திருக்கும் சிவபெருமான் சிரக்கம்பஞ்செய்து பர்வதராஜனென்னும் குழந்தையைப்பார்த்து நீடூழிகாலம் வாழக்கட்வையென்று ஆசிர்வதித்தார்—எ-று. (௬௪)

மருவுமாமுனி மனமதுபொங்கியே
அருகிலங்கும ரன்பதந்தாழ்ந்திட
பொருவிலாக்கிருபை யாலந்தபுத்தனும்
மருவ்வாழ்ளெ வாணுலகேகினர்.

இ-ள். இவ்வகைக் கோலங்களைக்கண்டு மருவுமாமுனியானவன் மனமடங்காத மகிழ்வுகொண்டு தனக்கருகிலிருக்கும் ஜகதீசனாகிய சயம்புவினது பாதகமலங்களில் பணியயில் அதைக்கண்ட புத்தமிர்தம்போன்ற சிவபெருமான் அளவுபடாத கருணையங்கண்ணால்நோக்கி அடாசெல்வனே நீயும், உனதுதேவியும், உன் புத்திரசிகாமணியாகிய பருவதராஜனும், வாழக்கடவீர்களென்று ஆசிகூறி கயிலையங்கிரிக்கு தனது தேவியோடுஞ்சென்றார்—எ-று. (௪௫)

வேறு - விருத்தம்.

சந்திரப்பிறையுந்தனிக்கதிர்பிறையுந் தரளமென்வடமணிமுதலாம்
விந்தைசேர்பணிகள்வேணதுசூட்டி மிகவணப்புறுதிருநுதலிற்
சுந்தரமுலவுசுட்டியுந்தொடுத்து துலங்கிருசெவிகளிற்றோடும்
இந்திரநீலக்கடுக்கனுமிட்டு யெழிலுறுமனங்கன்போல்வளர்ந்தான்.

இ-ள். பருவதராஜனுக்கு இரத்தினங்களழுத்திய சூரியப்பிறை, சந்திரப்பிறையுஞ்சூட்டி, முத்துமாலை, மோகனமாலை முதலிய மணிமாலைகளுந்தரித்து யானைத்துதிக்கையைப்போன்ற இருகரங்களுக்கும் அஸ்தகடகங்களும், பாஜிபந்துமிட்டு அழகியநெற்றியில் விளங்காநின்ற சுட்டியுங்கட்டி, இரண்டுபாதங்களுக்குந் தண்டை, சதங்கைச்சிலம்புந்தரித்து நாளொருமேனியாய் பருவதராஜன் மன்மதனைப்போல்வளர்ந்தான்—எ-று. (௪௬)

பருவதரார்ஜனூற்பவமுறைத்தோம் பன்புளான்மணமதையினிமேல்
பரிவுடனுரைப்போங்கேண்மினென்றோத பரிதிபாற்கரனிதையறிந்து
விரைகுடதிசையிலிருப்பவர்தமக்கு விளம்பிடச்சென்றவன்போல
தரையெலாமிருளைச்செறியவேவிடுத்துத்தாழ்ந்தனன்மேற்றிசைதானே

இ-ள். சன்முனியானவர் முனிவர்களைப்பார்த்து கேளுங்கள் சவுனகாதிமுனிவர்களே இதுவரையில் யர்முங்களுக்கு மருவுமாமுனியின் றவத்தினாலுதித்த புத்திரசிகாமணியாகிய பருவதராஜனுடைய உற்பவத்தைச்சொல்ல யாவரு,முணர்ந்தீர்களன்றோ இனிமேல் அந்த மலையரசனுக்கு திருமணஞ்செய்த வைபவத்தையும், எடுத்துரைப்போம் கேளுங்களென்றுகூற அக்காலையில் மருவுமாமுனியினது பெருமையாவுங்கேட்டிருந்த செஞ்சுடர்க்கிரணனாகிய சூரியன் குடதிசையென்னும் அதல, விதல நிதல சுதல தராதல ரசாதல மஹாதல பாதாளலோகங்க

னுக்குத் தெரிவிக்க எண்ணங்கொண்டு புகுந்ததுபோல புவனமனைத்தும் அஞ்ஞானிகளது இதையம்போன்ற அந்தகாரயிருளைச் செறிய விடுத்து மேற்றிசையில்மறைந்தான்—எ-று. (சஎ)

இருளதைக்கண்டமுனிவரரொவரும் எழிலுறுஞ்சாலையிற்சேர்ந்து
திருவிழிவளர்ந்துயுறங்கிடும்போது செய்யமாமுனிவரன்பயந்த
பருவதராஜன்மணமதுகேழ்க்கப் பரிந்ததிவிறைவில்வந்தவன்போல்
சிரகொளிர்சுரும்புபுள்ளினமொலிக்கத் தினகரன்கீட்டிசையுதித்தான்

இ-ள். அந்தகாரம்போன்ற இருளைக்கண்ட சவ்னகாதிமுனிவருந் தபோதனர்களும், பன்னகசாலையுட்சேர்ந்து அவரவர்கள் ஆசனங்களின்மீது சயனித்துக்கொண்டிருக்கையில் திருமால்புதல்வனாகிய மருவு மாமுனியின் குமாரனென்னும் பருவதராஜனுடைய திருமணத்தைக் கேட்கும்படியாய் ஆவல்கொண்டு அதிவிறைவாய் ஒற்றையாழியோடும் சப்தமாவென்னும் புரவிபூட்டிய இரதத்தின்மீதேறி அனிச்சமலர்களின்றேனை யருந்தும்படிச் சுரும்பினங்களையும் அழகிய புள்ளினங்களையுமெழுப்பி ஒலிசெய்யவிடுத்துப் பின்னர் கீட்டிசையிலுதித்தான் தினகரனென்னுஞ்சூரியன்—எ-று. (சஅ)

வேறு-விருத்தம்.

முனிவரரெழுந்துகங்கையிற்றோய்ந்துமுழுமதிபோன்றவெண்ணீற்றை
புனிதமாய்ப்பூசி புதுமலர்க்கொய்து புத்தனார்பூசனைபுரிந்து [ப்
பனிவனாவேந்தன் மணமதுகேட்கப் பருதியைநோக்குபங்கயம்போல்
நனிவிருப்போடு மிருப்பதையறிந்து நாதனுமுறைசெயப்புகுந்தான்.

இ-ள். சூரியோதயத்தைக்கண்ட முனிவர்களெழுந்து காலைக்கடனைமுகித்து பின் கங்கைக்கரைக்குச்சென்று மஞ்சனமாடி பூரணச்சந்திரோதயம்போலும் தவளநிரமாய்விளங்கும் பஞ்சாக்ஷரத்தைப்பூசி அலர்ந்து பரிமளித்திலகாநின்ற கொன்றைமலர்களைக்கொய்து புத்தனாகிய உமாமயேசனது பொற்றாமரைக்கமலம்போன்ற அழகிய திருவடிகளை பஞ்சசுத்தியோடும் பூசித்துப்பணிந்து மேகங்கள்தவழாநின்ற பருவதராஜனுடைய திருமணத்தைக்கேழ்க்கப் பருதியென்னுஞ் சூரியனது வரவைப் பார்த்திருக்கும் பங்கயமென்னுந் தாமரையைப்போல் முனிசிரோஷ்டனாகிய சன்முனியின் திருமுகத்தை அதிக ஆவலோடும் பார்த்திருக்கும்படியாகிய தபோதனர்களது கருத்தையுணர்ந்த தேவரிஷியானவர் சொல்லத்தொடங்கினார்—எ-று. (சக)

வேறு-விருத்தம்.

விரைசெறிமுனிவர்கேண்மின் வேலைகட்கரசனான்
தரைபுகழ்வருணன்றானுந் தனியரசானநாளில்

பரவியவிலங்கின்வேட்டம் பண்புடனாடவெண்ணித்
திரைகடலதனினின்றுந் தேர்மிசைப்புறப்பட்டானல்.

இ-ள். சிறோங்கி ஒளிரும் சவுனகாதிமுனிவர்களே கேளுங்கள் தேவர்முதல் யாவரும் புகழத்தக்க லவணம், இட்சு, சுரா, சற்பி, ததி, க்ஷீரம், சுத்தோதகமென்னும் ஏழுசமுத்திரத்துக்கும் இறைவனாகிய வருணமஹாராஜன் அரசாண்டுவரும்நாளில் ஓர்நாள் புவனத்தின்கண் விலங்குக்கூட்டங்களின்மீது வேட்டையாடுவதற்கு எண்ணங்கொண்டு கனகமயமாகிய தேரின்மீதேறி அலைகளை எறியாநின்ற சமுத்திரத்தினின்றும் புறப்பட்டான்—எ-று. (௫௰)

வேறு விருத்தம்.

மன்னனெனுமருணனவன் வண்மகியிலேறிப்
பொன்னிலகுவெண்கவரி பூவையர்கள்வீச
பன்னரியவாவிகளும் பரவைகளுநீத்தே
துன்னுமிருள்சூழ்வனந் தொடர்ந்துசிலைதொட்டான்.

(இ-ள்.) சமுத்திரராஜனாகிய வருணன் வண்மைபொருந்திய நிலத்தைச்சார்ந்து இரதத்தைநடாத்துகையில் வெவ்விய சூரியகிரணத்தால் திரேகத்தினின்றும் குருவியர்வுசிந்துவதைக்கண்ட அடைப்பைக்காரிகள் இருமருங்குநின்று பொன்னினாற்செய்தசாமறைகளை இரட்டி உபசரிக்கவும் சொல்லுதற்கரிய நதிகளையும் தடாகங்களையும் மலை நுழைவுகளையும் அந்தகாரம்போல் இருள்சூழ்ந்து மேகமண்டலத்தை யளாவியிருக்கும் கொடுங்கானகத்தைச்சேர்ந்து திரிகோணமாய் வளைந்து மேருவைப்போல் பிரகாசியாநின்றவில்லையெடுத்துநிறுத்திநாணை யிட்டு ரீங்காரவோசையெழுப்பினான்—எ-று. (௫௧)

வேறு-விருத்தம்

மட்டிலாமிரு கங்களின்மீதினில்
தொட்டவெங்கணை யின்சுடர்பற்றியே
பட்டொழிந்தகணங்களை பார்தாங்கும்
அட்டநாக வதிபனாலாகுமோ

(இ-ள்.) அளவில்லாத விலங்கின்கூட்டங்களின்மீது வருணராஜனால்விடப்பட்ட தீமுகக்கணைகளின் தீட்சண்யத்தால் வனமுழுதும்பற்றி எரிந்து நீருவதோடும் சிங்கமுதலிய யானைக்கூட்டங்களும்புலிக்கூட்டங்களும் பற்பலமிருகக்கூட்டங்களும் அம்பின் சுருக்கினால்உடலங்கிழிந்தும் தலையுடைந்தும் காலறுந்தும் ஆவிவிடுத்த மிருகங்களின் றொகையை அனந்தன் வாசுகி தக்கன் சங்கன் குளிகன் பதுமன் மகா

பதுமன் கார்க்கோடகனென்னும் அட்டமாநாகங்களுக்குள் அதிபனாகிய ஆதிசெட்டனாலுஞ் சொல்லப்போமோ—எ-று. (௫௨)

வேறு - விருத்தம்.

பதிவுளவிலங்கனைத்தும் பாழ்படமுடித்தமன்னன்
கதிரவன்வெப்பத்தாலே களைமிகவாகக்கண்ட
மதிமிகுபாகன்றேரை வண்மையாய்த்திருப்பியோர்பால்
மதிதவழ்மதிள்களோடு வயங்குமோர்நகரைக்கண்டான்

(இ-ள்.) மலையிடுக்குகளிலும் மரத்தின்பொந்துகளிலும் பதுங்கியிருந்த மிருகங்களையெல்லாம் சின்னபின்னப்படுத்தி உயிர் விடச்செய்த வேந்தன் சூரியவெப்பத்தால் களை தாங்கி தேரின்மீது சாய்ந்ததைக்கண்ட தேர்ப்பாகன் தேரைத்திருப்பிக்கொண்டு உத்திர பாகமாய்ப்பார்க்கையில் மேகங்கள்வந்து மொய்க்கும்படியாய்ப்பொன்போலிலங்குநாற்புறமதிளுஞ் சோலைகளுமுள்ள ஓர்பட்டணங்கண்ணுக்குளெட்டியதூரத்தில் அகப்பட்டபடியால் அம்மார்க்கத்திற் றேரைவிடுவதற்கு யோசித்தான்—எ-று. (௫௩)

கண்டவப்பாகன்றேரைக் காற்றினும்விரைவாய்த்தூண்டி
அண்டருக்கரியவூர்போலலங்கிருதமுலவுநாட்டை
விண்டுவின்புரமோயாதோ விளங்குமிப்பதியென்றெண்ணித்
தெண்டிரையரசனுக்குத் தெரிவித்தான்காவைக்கண்டே

(இ-ள்) தனது கண்ணுக்குத்தோன்றியநகரைநோக்கி காற்றினும் கொடியவேகமாய்க் குதிரைகளைத்தூண்டித் தேவர்களுக்கு மரிதாகிய நகரம்போலக் காணுகின்ற இந்நகரம் மகாவிஷ்ணுவாழ்கின்ற வைகுந்தபுரமோ யாதோவென்று பலவாறாகமனதிலெண்ணி அப்பட்டணத்துக்கருகே மிகவுஞ்சீதளத்தோடும் பலபலவிருட்சங்களாற்சூழ்ப்பட்ட ஓர் பூங்காவனத்தைக்கண்டு அங்ஙனம் தேரை நிறுத்தி அலைகளையுடையசமுத்திரங்களுக்கு அரசனாகிய - தன்னுடைய வேந்தனுக்குச் சொன்னான்—எ-று. (௫௪)

மன்னவனிரங்கியந்தவனமதிற்புகுந்துநோக்க
தன்னிகரில்லாதோங்குந் தடங்களுங்கூவந்தானும்
அன்னங்களுலவுஞ்சோலை அணியணியிலங்குந்தன்மை
மன்னுமேடைகளுங்கண்டு மகிபனுமதிசயித்தான்

(இ-ள்.) வருணராஜன்தேரைவிட்டிழிந்து சோலையுட்புகுந்து பார்க்கையில் தாமரை அல்லி ஆம்பல் நீலோற்பலம் செங்கழுநீர்முதலிய மலர்கள் புட்பித்து வயங்குந்தடாகங்களும் ஓடைகளும் அழகியநடபாயிகளும் அன்னம் நாகணவாய்ப்புள் சகோரப்பட்சிகள் கூட்டங்கூட்

டமாய்க்கூடி விளையாடும் பூஞ்சோலைகளும் பொன்போலிலங்கும் மண்டபங்களும் சந்திரகாந்தக் கற்களினலமைத்த மேடைகளையுங்கண்டு அதிசயங்கொண்டான்வேந்தன்—எ-று. (௫௫)

மனமதுகளித்தவேந்தன் வயங்குமோர்தடத்தைச்சார்ந்து
புனலதுஅருந்தியாங்கு பொன்மணிமேடைதன்னில்
தனைமறந்தரசன்ருனுஞ்சாய்ந்துநித்திரைசெய்யுங்கால்
வனிதையர்கூட்டத்தோடுங்கேந்திரவதிவந்தாளால்

இ-ள். அழகிய பூங்காவனத்தைக்கண்டு மகிழ்வுகொண்ட வருணராஜன் அங்குதோன்றிய ஓர்தடாகத்துக்கருகேபோய் அவற்றிலிறங்கி மஞ்சனமாடி ஜலபானஞ்செய்து பின் அங்குளமேடையிற் படுத்துத்தன்னைமறந்து நித்திரைசெய்கயில் சொர்ன்னபுரியிலிருந்து கேந்திரவதி என்னப்பட்ட அரசிதனது தோழிகளுடன்கூடிச்ஜலக்கிரீடைசெய்யும் பொருட்டுப் பூங்காவனத்துக்கு வந்தார்கள்—எ-று. (௫௬)

தேசுலாங்கன்னிதானுந் திருந்தியவேந்தைக்கண்டு
ஆசையாய்மன்னனுரோ அடவியில்வேட்டமாடி
பாசஞ்சேர்படையிலாமல் பார்தனிற்றனித்துவந்து
வாசவன்போலேயோங்கு மகிபனுக்கிரங்கலானாள்

இ-ள். இரதிதேவியைப்போற் றுலங்குங்கன்னியானவள்மேடையின்மீது படுத்திருக்கும் வருணராஜனைக்கண்டு உருவத்தைநோக்கி மனதில்மையல்மீறிதேவேந்திரனைப்போன்ற இந்தவேந்தனுக்குப்படைத்துணையுமில்லாமல் தனித்துவந்து காட்டில்வேட்டமாடிக்களைதாங்கி இங்ஙனம்வந்து விழுந்து விட்டானென் றெண்ணங்கொண்டு மனங்கனியலானாள்—எ-று (௫௭)

அந்திரமாதுதானுமரசன்றன்சோபந்தீர்க்கப்
புந்தியிலுன்னிச்சீதப்புனற்கரையருகுசென்று
விந்தைபொற்கலசந்தன்னில்மேதகுநீருங்கொண்டு
கந்தமாமலருஞ்செய்யகனிகளும்பறித்துவந்தாள்

இ-ள். அந்திரமார்க்கத்திலுலாவும்கந்தருவ்ஸ்ரீயாகியகேந்திரவதி வருணராஜன் கொண்டசோபத்தைத் தீர்க்கவேண்டுமென்றுபுந்தியில் நினைந்து மிகவுஞ்சீதளத்தோடும்கூடிய குளக்கரையிற்சேர்ந்து பொன்னினுற்செய்து நவமணிகளழுத்தி யொளிராநின்ற அழகிய ஓர்பாத்திரத்தில் ஜலத்தையெடுத்துக்கொண்டு கரைமீதேறிக்கற்பகமலருக்கிணையாகியும் நனிபரிமளத்தோடும் அலர்ந்துபிரகாசியாநின்ற பற்பலமலர்களையும் பழுத்துக்கனிந்து தேன்சொறிந்துக் கொண்டிராநின்ற நல்ல

கனிவர்க்கங்களையும் பறித்துக்கொண்டு அதிகஆவலோடும் வேந்தனிடம்வந்தாள்—எ-று. (ரு அ)

அரசனதருகிற்சென்ற அரிவையுமுகத்தைநோக்கி
விரைசெறிவேந்தர்வேந்தேமிகமெலிவுற்றதென்கொல்
பரவியவிலங்கின்வேட்டப்பான்மையால்இளைப்புற்றீரோ
தரைபுகழ்மாரனென்னைச்சாற்றுரான்பாருமென்பாள்

(இ-ள்.)கேந்திரவதி அரசன்பக்கலில்சேர்ந்து சந்திரபிம்பம்போன்ற அழகியமுகத்தைநோக்கி கீர்த்தியோங்கியவேந்தர் வேந்தேயாது காரணத்தால்மெலிவுற்றீர் காட்டிற்சென்று வேட்டமாடிய தன்மையால் மெலிந்தீரோ தரைபுகழும்படியாகிய மன்மதன் மலர்க்கணையால் என்னைவருத்துகின்றகோலத்தைக் கண்ணுற்றுப்பாரும் அரசேயென்று பலவாறுகத்துன்பப்படுவாள்—எ-று (ரு கூ)

அன்னநடைமெல்லியவ ளானதெலாங்கூறிக்
கன்னல்வில்லிமன்னவனைக்கரமதிலெடுத்து
துன்னுமடிமீதிலிட்டுத்தூய்முகந்துடைத்தே
மன்னுகலசத்திலுள வண்புனலளித்தாள்

(இ-ள்.) அன்னப்பேடைப்பழிக்கும் நடையினையுடைய கேந்திரவதியென்னும் வனிதை ஏதேதோ விரகதாபத்தால்தனதுவாயில்வந்தவையெல்லாங்கூறியும் அரசன் விழிக்காதவையைக்கண்டு மனவுறுதிகொண்டு வேந்தனைத்தன்னுடைய கரங்களால்தூக்கிமடியின்மீதுஉட்காரவைத்து சந்திரபிம்பம்போற் பிரகாசியாநின்றமுகத்தைவனசமலர்போன்ற மிருதுவாகியதனது கரங்களால் துடைத்துத்தன்னுற்கொண்டுவந்தஜலத்தை மெல்லெனவாயில்விடுத்தாள்—எ-று. (கூ0)

ஜலமதுவிடுக்கயில் தராபதிவிழித்தே
இலங்கியமடந்தையவளெழிலுறுவக்கண்டே
துலங்குமிவளிந்திரியோசொர்னபுரிமாதோ
கலங்கியமனத்தினொடுகன்னிகையையுய்த்தான்

(இ-ள்.)வருணனைமடியின்மேல்உட்காரவைத்துமெதுவாய்ஜலத்தைவாயில்விட்ட வச்சீதளஉபசாரத்தால்சோபம்நீங்கிக்கண்ணைத்திறந்தவேந்தன் சந்திரோதயம்போன்ற திருமுகவிலாசமும்பத்தரைமாற்றுப் பசும்பொன்னுக்கிணையாகிய திரேககாந்தியோடும் பிரகாசியாநின்ற வனிதையைநோக்கி இவள் தேவேந்திரன் தேவியாகியஇந்திராணியோ, அல்லது இவ்வனத்துக்கருகே சொர்னமதிள்களோடும் பிரகாசிக்குஞ் சொர்னபுரியென்னும் நகரத்தின்அரசியோவென்று மனதிற் கலக்கங்கொண்டு வனிதையைக்கடைக்கண்ணினுல் நோக்கினன்—எ-று (கூக

வேறு-விருத்தம்.

கன்னிதன்னையுக்காவலனோக்கியே
பொன்னிநேர்மயிர்புரமெதுவோவென
மின்னெனத்துவளும்இடைமெல்லியாள்
மன்னவென்பதிமாசிலாவந்தரம்

(இ-ள்.) கன்னியர்களுக்கரசியாகிய கேந்திரவதியைப்பார்த்த வருணராஜன் பொன்போலிலகும் பூவையே நீயார் எந்தநாட்டுக்குரியவளென்றுகேழ்க்க மின்னலைப்போலும்உடுக்கையைப்போலும் பூங்கொடியைப்போலும் நூலின்இழையைப்போலுந் துவண்டாடாநின்றஅழகிய இடையினையுடையவம்மாது ஓ அரசே நானிருப்பது அந்தரலோகமாகிய சொர்னபுரியென்றறிவாயென்றாள்—எ-று (௬௨)

வேறு-விருத்தம்.

கன்னல்மென்மொழியாய்நீயுங் கடிமணம்புரியாதின்னம்
என்னகாரணமவற்றை எனக்குறைசெய்வாயென்ன
மன்னவாவுந்தன்மீது மாலதுகொண்டேனென்று
சொன்னவைகேட்டுஅந்த சுகுணனும்இசையலானான்.

இ-ள். கன்னலைப்போன்ற இனியவார்த்தையினையுடைய ஓ பெண்பாவாய் இதுவரையிலும் நீ கலியாணஞ்செய்துக்கொள்ளாமல் இருக்குங்காரணம் யாதோ அதனை எனக்குத் தெரியப்படுத்துவாயென்று கேழ்க்க அதைக்கேட்ட கேந்திரவதியென்னும் பாவை ஓ அரசே யான் உன்மீது நெடுங்காதல்கொண் டிருக்கின்றமையால் என்னை இப்பூங்காவனத்திற்கூடி என்மையலைத் தணித்தருளவேண்டுமென்று விரகமீறி உரைத்ததற்கு வேந்தன் ஓ சரசீ உன்மனம்போற் காந்தருவமணம்புரிவோமென்று இசைந்தான்—எ-று. (௬௩)

கலந்தவர்மகிழும்போது கன்னிபுத்திரியைப்பெற்றாள்
அலர்ந்ததோர்மகவைக்கண்டே ஆரிழைநகராச்சேர்ந்தாள்
இலங்கியபுதல்வித்தன்னை இறைவனுமெடுத்துப்பின்னர்
ஜலந்திகழ்தேர்மீதேறித் தனிநகரடைந்திட்டானால்.

இ-ள். கேந்திரவதியும், வருணராஜனும், இந்திராணியும், தேவேந்திரனும்போலும், இரதிதேவியும், மன்மதனும்போலும், மானுங்கலையும்போலும், அனமும், பேடும்போலுங் கூடிக்குலாவிக் கலந்தபின் உடனே காந்தருவமாது மிகவும் ரூபலாவண்ணியத்தோடுங்கூடிய ஓர் புத்திரியைப்பெற்று வருணராஜனிடத்திற் கொடுத்துவிட்டு தன்னுடைய நகரத்தைச்சேர்ந்தாள் அதைக்கண்ட வேந்தன் சந்தோஷங்கொண்டு அக்குழந்தையைத் தான் எடுத்துக்கொண்டு சம்வர்த்தமென்னும்

மேகத்தைப்பூட்டிவிளங்கும் இரதத்தின்மீதேறிக் கடலுட்போய்ச்சேர்ந்தான்—எ-று. (சுசு)

வேறு-விருத்தம்.

கன்னியாசை கருத்திலொழித்தமன்
பன்னுறுப்பசும் பொன்னிடச்செல்வியை
அன்னம்போன்ற அரிவையர்பாற்றந்தே
மின்னலொத்தமே னுவதியென்றனன்.

இ-ள். கேந்திரவதியின்மீதுற்ற காதலைப்போக்கிய வருணராஜன் தன் பதியைச்சேர்ந்து சொல்லுதற்கரிய பசும்பொன்போலிலகும் அழகிய தனதுபுத்திரியை அந்தப்புரத்திலிருக்கும் மங்கையர்களையழைத்து அவர்களிடம் அக்குழந்தையைக்கொடுத்துப் பூஜிதமா மேனுவதியென்னும் எனது இப்புதல்வியை வளர்த்துவரக் கடவீர்களென்றுகொடுக்க அவர்களும் அதுபோல்வாங்கி நாளொருமேனியாய்ப் போஷித்துவந்தார்கள்—எ-று. (சுடு)

வேறு - விருத்தம்.

அப்பதியில்கன்னியவள் அழகுடன்வருங்கால்
செப்பமொடுதேவர்களுஞ் செந்திருவும்வாழ்த்த
எப்புவியுமேபரவு மெழிலுறுநாரதரும்
ஒப்பிலொளிர்நிஷதபுரி யுன்னியேயெழுந்தார்.

இ-ள். வருணராஜனிடத்தில்வளர்ந்து தேவர்களும் செந்திருவாகிய இலக்குமிதேவியும் மகிழ்ந்து வாழ்த்தும்படியாய் அழகோங்கி வளர்ந்துவருங்காலையில் எத்திசையும்பணிந்து போற்றத்தக்க நாரதமுனிவர் ஒப்புவமையில்லாதோங்கும் நிஷதபுரிக்குப் போகவேண்டுமென்று மனத்தில்நினைந்து எழுந்தருளினர்—எ-று. (சுசு)

வேறு - விருத்தம்.

காவிகாம்பரமுத்திராக்ஷங் கரத்தினில்மாலைதுன்ன
ஏவருநீறுமெய்யி லிலகிடக்குழையெறிக்க
மேவியகுறடுபூண்டு மேதகுபதியைநாடி
நாவலரொவரும்போற்ற நாரதமுனிவர்வந்தார்.

இ-ள். காவிபீதாம்பரம் துலங்கும்படியாய் உருத்திராட்ச மாலிகாபரணமும், தண்டுகமண்டலமும், யோகப்பட்டையும், ஜெபமாலையும், யாழும் துலங்கும்படியாயும் அழகிய இருசெவிகளிலும், மகரகுண்டலத்தின் நிலவெறிக்கவும், பாதக்குறடுபூண்டு நிஷதபுரியைநோக்கி நாவலர்முதலிய பட்டுவான்கள் துதித்துப் பணியும்படியாய் நாரதமகாமுனிவர் மருவுமாமுனியினது சமுகத்துக்குவந்தார்—எ-று. (சுஎ)

வேறு - விருத்தம்.

மருவுமுனிவேந்தனவன் மாமுனியைக்கண்டு
விரகுடனெழுந்தவர்த மென்பதமிறைஞ்சித்
திருமுனிவரருளியதென் சிறியேன்மனைதேடி
அருளுமெனவாசனமு மன்புடனளித்தான்.

இ-ள். மருவுமாமுனியென்னும் மண்டலாதிபன் நாரதமகாமுனிவரைக்கண்டு தான் ஆரோகணித்திருந்த அழகிய மணியாசனத்தினின்றும் எழுந்து எதிர்சென்று முனிவரது பாதகமலங்களில் அஷ்டாங்கனுய்ப்பணிந்து ஓ மாதவசிரேஷ்டரே தேவரீர் திரோகம்வருந்தும்படி இச்சிறியேன்மனை தேடிவந்தகாரணம் யாதோ அருள்செய்யவேண்டும் எந்தையேயென்று நவரத்தினகசிதமாகிய ஓர் ஆசனத்தைக்காட்டி அதன்மீது எழுந்தருளச்செய்தான்—எ-று. (௬அ)

பருவதனுமாமுனிவர் பாதமதில்தோய
விரகுடனெடுத்தவனை மென்மடியில்வைத்தே
இரவியுளநாள்வரையில் வாழெனவிசைத்தே
மருவுமுனியோடுசில வாய்மையதுரைப்பார்.

இ-ள். மருவுமாமுனியின் புதல்வனுகிய பருவதராஜன் சிங்காதனத்தின்மீ தெழுந்தருளியிருக்கும் நாரதமகாமுனிவர் பாதகமலங்களிற்பணிய முனிவரன் அப்புதல்வனை இருகரங்களாலுந்தூக்கித் தனது மடியின்மீது உட்காரவைத்துக்கொண்டு சூரியசந்திராளுள்ளவரையில் வாழ்க்கடவையென்று ஆசீர்வதித்துப் பின்பு வேந்தனைப்பார்த்து நாரதமுனிவர்கூறுவார்—எ-று. (௬௯)

வேறு - விருத்தம்.

மன்னவுநினதுமைந்தனுர்தமக்கு மணமதுமுடித்திடவெண்ணி
உன்னிடம்யாமுமுவந்துவந்தமையா லுளமதுயாதெனவினவ
நன்னிலதேவமாதவமுனியே நலந்திகழ்வனிதையுங்கிடைத்தால் [ன்.
சொன்னசொற்படியேபருவதன்றனக்குத் தூய்மணமுடிக்கலாமென்று

இ-ள். ஓ மண்டலாதிபனே உனதுமைந்தனுகிய பருவதராஜனுக்குத் திருமணமுடித்து வைக்கவேண்டி யாம் பரிவுகொண்டுவந்தமையால் உனது உளம் யாதோ அதனைத் தெரியப்படுத்துவாயென்றுகேழ்க்க அதைக்கேட்ட மருவுமாமுனியென்னும் வேந்தன் முனிவரனைப்பணிந்து நன்னிலத்தோர் பரவும்படியாகிய தேவரிஷியே நன்குவாய்ந்த கன்னிகைகிடைப்பாளாகில் தாங்கள்சொல்லிய வாய்மையின்படிப் பருவதனுக்கு மணமுடித்துவிடலாமென்று கூறினுன்—எ-று. (௭௦)

வேறு - விருத்தம்.

கன்னிதன்னைக் கலுழுவோம்கேளென
மன்னும்வேலே வருணனிடம்வளர்
மின்னலொத்த மேனுவதிதன்னையாம்
உன்மகனுக் களித்திடவோதுவோம்.

இ-ள். பெண்ணிருக்குமிடத்தைச் சொல்லுகின்றோம் கேளும் மருவுமாமுனியென்னும் வேந்தே பிரகாசம்பொருந்திய ஆழிகளுக்கிறைவனுகிய வருணராஜனிடத்தில் மின்னற்கொடிபோல்வளர்ந்துவரும் மேனுவதியென்னுங் கன்னிகையை உன்மகனுக் கிசையவைத்துத் தெரிவிக்கின்றோமென்று கூறினார் நாரதமகாமுனிவர்—எ-று. (எக)

வேறு - விருத்தம்.

விறைவிலிக்கணமேசெல்வோம் வேந்தனேவாழியென்று
மறைபுகல்முனியெழுந்து வருணன்பாற்செலவிசைந்து
துறையதாய்ச்சென்றபோதித் தூய்முனிவரவைக்கண்ட
இறைவனுமெதிர்சென்றேத்தி எழின்மணிப்பீடந்தந்தான்.

இ-ள். ஓ அரசே யாம் இக்கணமேபோர்வோம் நீ வாழக்கடவை யென்று ஆசிர்வதித்து வேதங்களால்சொல்லப்பட்ட முனிவரன் அவணின்றும் நீங்கி வருணராஜனிடத்திற்செல்ல அதிதீவரமாய்ப்போகயில் இம்முனிவன் வருதலைக்கண்ட வேந்தன் எதிர்வந்து பணிந்து அழைத்துக்கொண்டுபோய் நவரத்தினகஜிதமான ஆசனத்தின்மீது எழுந்தருளச்செய்தான்—எ-று. (எஉ)

வேறு - விருத்தம்.

மன்னன்செல்வி மலர்ப்பதம்வீழ்ந்திட
பன்னுமாமுனி பாவையைவாழ்த்தியே
பொன்னுலாமெழிற் பூவைக்குநன்மணம்
இன்னமேன்செய வில்லையென்வினவினர்.

இ-ள். ஆசனத்தின்மீது எழுந்தருளியிருக்குந் தேவரிஷியாகிய நாரதமகாமுனிவரது செந்தாமரைக்கமலம்போன்ற அழகிய பாதகமலங்களில் வருணராஜன் புதல்வியாகிய மேனுவதிவந்து பணிந்துநிற்கையில் சொல்லுதற்கரிய பெருமைபொருந்திய அம்முனிவரன் பொன்போலிலகும் பிரதமையைப்போன்ற அப்பூங்கொடியைவாழ்த்தி வேந்தனுகிய அவள் தாதையைநோக்கி ஓ மன்னே இன்னமேன் திருமணஞ்செய்துவைக்காம லிருக்கின்றாயென்றுகேட்டார்—எ-று. (எங)

எந்தவேந்துக் கிசைந்தவளோயிவ
ளெந்தமன்னே யருள்செயுமென்றிடச்
சிந்தைபூரித்தே செய்யமுனிவரன்
கந்தமேவுமக் கால்வழிசொல்லுவான்.

இ-ள். வருணராஜன் முனிவரனைப்பார்த்து ஓ முனிசிரேஷ்டரே இவள் எந்தலோகத்தரசனுக்கு பாரியாளாக யிருக்கின்றதோ புன்மையேன் அறியேன் ஆதலால் அந்த வேந்தனைப் பேதையேன் தெரிந்துக்கொள்ளும்படியாய்த் தேவரீர் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்றுகேழ்க்க மேன்மைபொருந்திய முனிவர் உளங்களித்துக் கந்தமென்னுஞ் சிறப்போங்கிய அவ்வேந்தனது கால்வழியைச்சொல்லுகின்றேன் சாவதானமாய்க்கேளும் வருணராஜனேயென்றுகூறுவார்—எ-று.()

மருவுமாமுனி மாதவத்துற்றதோர்
திருமிகுந்திடுஞ் செல்வன்பருவதன்
பெருகும்நூல்வழி யோனுக்குனன்பினும்
வருபுதல்வியை மணமதுசெய்குவாய்.

இ-ள். கேளும் வேந்தே திருமாலுக்கும், இலக்குமிதேவிக்கும், பிறந்து மருவுமாமுனியென்று அரியபெயர்வகித்துப் பின்னர் ஆதியந்தமிலாதவனுகவும், அருமறைதேடியுங் காணுவமலனுகவும், அடியார்க்கெளியவனுகவும், ஆலாலமுண்ட ஐயனுகிய கயிலாசபதியைநோக்கித் தபஞ்செய்து அக்கடவுளின் அருளால் நிஷதபுரியனைத்துக்கும் ஏகசக்ராதிபதியாகியும்அளகாபுரிக்கிறைவனுகிய் குபேரனுடைய புத்திரியை மணந்தும் புத்திரபாக்கியமில்லாமலிருக்கயில் நெடுநாள்சென்றபின் தேவரிஷியாகிய மதங்கமாமுனிவந்து வேந்தனைநோக்கி ஓ மண்டலாதிபா, உமாமயேஸ்வரனுகிய பரமசிவன்வாழும் ஸ்ரீ கயிலாசகிரியை நீயும், உனதுமங்கையாகிய சவுலாகிணியும், பிரதக்ஷணஞ்செய்துவருவீர்களேயாகில் புத்திரபாக்கிய முண்டாகுமென்றுசொல்ல அதுபோல் அந்த மருவுமாமுனி முனிசிரேஷ்டர்களோடும் தம்பதிசமேதராய் பிரயாணப்பட்டு வெள்ளியங்கிரியைத்தரிசித்து வலஞ்செய்து ஜகதீசனுகிய சயம்புவின் அருளைப்பெற்றுத் தன்பதியைச்சேர்ந்து சவுலாகினியென்னு மாது கருப்பவதியாகிப் பருவதராஜனென்னும் புதல்வனைப்பெற அப்புதல்வன் மூவர்களாலும் ஆசீர்வதிக்கப்பெற்று நான்குவேத மாறுசாத்திர மறுபத்திநன்கு கலைக்கியான மநுவிக்கியான முதலிய யாவும் உணர்ந்து ஒப்பொருவரில்லாமல் ஓங்கி வளர்ந்துவரும் உத்தமனுக்கு உன்மகள் பாரியாளாக வேண்டிவிருப்பதால் அதுபோல் மணஞ் செய்துவைப்பாயாகவென்று கூறினர்—எ-று. (எரு)

வேறு-விருத்தம்

அருகினிலிருந்தவருணனுமகிழ்ந்து அருமுனிபதமதைத்தொழுது
மருவுமாமுனியின்புதல்வனுக்குறிய மன்மணவோலையுமனுப்ப
திருவுறுஞ்சுருளைக்கண்டவம்முனியும் தீஞ்சுவைக்கடலினுள்ளமுழ்ந்தி
பெருகியதானையுடனெழுந்தேகப் பிரியமுமனதினுட்கொண்டான்.

இ-ள். நாரதமகாமுனிவர்சொல்லியதை அருகேயிருந்து கேட்டுக்கொண்டிருந்த சுத்தாவதிப்பட்டணத்துக் கிறைவனாகிய வருணமகாராஜன் உளம்பூரித்துத் துதிப்பதற்கரிய முனிவரனுடைய பாதகமலங்களில்பணிந்து தேவர் சித்தத்தின்படியே நடாத்துகிறே னென்றுகூறி வேதவேதியர்களால் மருவுமிமாமுனியின் புதல்வனாகிய பருவதராஜனுக்கு மேனாவதியைப் பாணிக்கிரகணஞ் செய்துக்கொடுக்கின்றேன் யாவரும் விஜயஞ்செய்யவேண்டியதென்றெழுதி மஞ்சள்காப்பிட்டு பிராமணர்கள்கையிற்கொடுத்து அநுப்ப அம்மணவோலையைக்கண்ட நிஷதபுரிவேந்தன் தீஞ்சுவை யருந்தியவைபோல் வாசித்துச் சந்தோஷமென்னுங் கடலுட்டோய்ந்து தனது நால்வகைச்சேனைகளோடும் வருணராஜன்வாழும் நகரத்துக்குப்போகும்படியாய் மனதிற் பிரிவுகொண்டான்—எ-று. (எசு)

வேறு-விருத்தம்.

விந்தைசுத்தாவதியின் வீதிகளிலெங்கும்
பந்தர்துமிட்டுவெகு பண்புறவமைத்தார்
எந்தவுலகும்மிதனுக் கிணை தருமோவென்ன
சுந்தரமுலாந்துவச தோரணமுமிட்டார்.

இ-ள். விந்தைசேர்ந்திலங்குஞ் சுத்தாவதிபட்டண முழுமையும் ஆகாயத்தையளாவி உயர்ந்தோங்கும்படியாய்ப் பச்சைப்பந்தர்போட்டுத் தூணுக்குத்தூண் தேங்கு, கமுகு, வாழை, பலா, கூந்தற்பனைகளுந்தூக்கி, மாவிலைகளைக்கட்டி, சண்பகம், பாரிசாதம், கோங்கு, மந்தாரை, புன்னைமுதலிய மலர்மாலைகளைத்தூக்கி முத்துக்குச்சுகளைச் சரஞ்சரமாய் அதனடுவிற்றூக்கி இரத்தினகம்பளங்களைவிரித்து ஓமகுண்டங்களும், அமைத்துப் பசும்பொன்னினாற்செய்து மரகதமாணிக்கங்களாலழுத்தி இலகாநின்ற கும்பங்களைநிருத்தி எங்கும் ஆசனங்கள் பரப்பி குத்துவிளக்கு, குடவிளக்கு, கிளைவிளக்குத், தூங்காவிளக்குச், சங்கிலிவிளக்குகளும் நிருத்தி எங்குஞ் சுகந்தமுலாவுங் கதம்ப கஸ்தூரிகளைத்தூவிப் பனிநீர்தெளித்து எந்தலோகமும் இதற் கிணையாகமாட்டாதென்று சொல்லும்படியாய் வீதிகடோறும் வன்னவன்னத் துவசங்களுந் தோரணங்களுந்தூக்கி இலகச்செய்தார்கள்—எ-று.()

சரசரமனைத்துமவர் தாம்பூலமதுப்ப
பரமனெடுமாலயனும் பரிவுடனேயேற்று
இரவிமதியாதியெழி லிமையவரொழுங்கே
பரிமிசையுகந்துவியன் பதியதுபுகுந்தார்.

இ-ள். வருணராஜன் தனது புதல்வியாகிய மேனுவதிக்கு மணமாலைசூட்டுகின்றேனென்ன கயிலாயகிரிமுதலிய சராசரமனைத்துக்கும் தாம்பூலமனுப்ப அதைகண்ட உமாமயேஸ்வரனாகிய பரமசிவனும் இலக்குமிசமேதனாகிய திருமாலும், கலைமகள்சமேதனாகிய பிரமனும் இம்மூவரும் நனிகாதலோடும் தாம்பூலத்தைப்பெற அக்காலையில் சூரிய சந்திராள் முப்பத்துமுக்கோடி தேவர்கள், பதினெண்கணங்கள், நவநாதர்களோடும் அட்டதிக்குப்பாலகரும், தங்களில் ஒருவனாகிய வருணராஜன் வாழும்பதியாகிய சுத்தாவதியென்னும் நகரத்துக்கு அவரவர்கள் வாகனாதிகளிலேறி பிரையாணப்பட்டுவந்துசேர்ந்தார்கள்—எ-று.

நற்றவமிகுத்தவரும் நாரதரோடாதி
வெற்றியுறுமன்னவரு மேதினியுளாரும்
கற்றுபுனல்போலிலகு கனநகரடைந்தே
பத்தியுடனேத்தியவர் பந்தரிலமர்ந்தார்.

இ-ள். கடல்சூழ்ந்த உலகின்கண்வயங்கும் நற்றவச்சீலராகிய நாரதர்முதல் சப்தரிஷிகளும், அஷ்டவசுக்களும், வேதவேதியர்களும், வெற்றியோங்கிய மண்டலாதிபர்களும், மற்றுங்குடிகளும், பிரையாணப்பட்டு சம்வர்த்தம், ஆவர்த்தம், சங்காரித்தம், புட்கலாவர்த்தம், துரோணம், காளமுகி, நீலவர்னமென்னும் ஏழுமேகங்களும் கூடி ஒலிசெய்திரானின்ற சுத்தாவதியென்னும் வருணராஜன்வாழும் பட்டணத்தைச்சேர்ந்து காண்பதற்கரிய மும்மூர்த்திகளையுங்கண்டு பணிந்து மிகுவிசித்திரமாய்வயங்கும் மணப்பந்தலிற்சேர்ந்து அவரவர்களுக்குத்தக்க ஆசனங்களின்மீது ஆரோகணித்திருந்தார்கள்—எ-று. (எசூ)

மாதர்மங்கல வோசைமுழக்கவே
கீதம்பாடிக் கின்னரியோங்கவும்
ஓதும்வேத வொலியதுஆர்த்தெழப்
போதவாச்சியம் பொங்கியவண்டமெண்.

இ-ள். மங்கலமாதர்கள்கூடி மங்களஞ்சொல்ல அரம்பை, ஊர்வசி, மேனகை, திலோர்தமையென்னுங் கணிகைமாதர்கள் நடித்துக் கீதம்பாடவும், பட்டுவான்கள், கின்னரி, சரமண்டலம், வீணை, வேணுநாதங்கள்செய்யவும், வேதியர்கள்செய்யும் வேதகோஷ்டமானது கடலொலிபோல்முழங்கவும், ஐந்துவிதபேரியும், காளை, எக்காளம், சின்

ணம், கொம்பு, பூரி, காகளம், தவுதி, சங்கம், துத்தாரி, நாகசுரம், மத்தளம், கனகதப்பு, தவண்டை, தாளம், கண்டைகைத்தாளம், தடாரியோடு, உடுக்கை, பம்பை, டவுல்நவுரி, சந்திரவளையம், டங்கா, விடக்கைதட்டை, நீளமுகவீணைகள், புள்ளாங்குழல்கள், நிர்த்தகீதங்களானது அவ்வெட்டிசையும் அதிரும்படியாய் முழக்குவித்தார்கள்—எ-று. ()

மருவுமாமுனி மைந்தனும்வேந்தரும்
இரதமேற வெழிற்கரிக்கூட்டமுந்
துரகங்கோடி தூசிப்படையாவுமே
விரிகடற்போல் விளங்கியெழுந்தவே.

இ-ள். நிஷதமாபுரியை அரசாட்சிசெய்துவரும் மகாமண்டலேஸ்வரனாகிய மருவுமாமுனியும், அவன்புதல்வனாகிய பருவதமகாராஜனும், மகுடமன்னர்கள்முதலிய தபோதனர்களும், சவுலாகினிமுதலிய மாதர்கூட்டங்களும், கனகமயமாய்ப்பிரகாசித்து சூரியன் இரதத்திற் பூட்டிய சுவேதவாம்புரவியைப்போன்ற குதிரைகளைப்பூட்டிவயங்குந் தேரேறிநிற்கயில் அனந்தங்கோடி நீருண்ட மேகங்களைப்போலும், மலைகள் கால்கொண்டு நடந்துவருவதைப்போலும், கன்னமத, கபோலமத, பீஜமதமென்னு மும்மதம்பொழியத்தக்க யானைக்கூட்டங்கள் அணியணியாய்நிற்க அவைகளின்மீது பொன்னினாலும், வெள்ளியினாலுஞ்செய்த அம்பாரிகள்வைத்து அவற்றில் வேந்தர்களும், மேலவர்களாகிய பிராமணர்கள் உட்கார்ந்துக்கொண்டும் மச்சகதி வாய்வுகதியோடுங்கூடி அநேகங்கோடி அஸ்வங்களின் மீது வீரர்களேறியும் முப்பத்திரண்டு ஆயுதங்களோடுங்கூடி அநேகங்கோடிகாலாள்கள்சூழ்ந்துசமுத்திரம்பிரண்டு வருவதுபோற் பிரகாசித்து நாற்புறமுஞ் சூழ்ந்துவளைந்து சுத்தாவதியைநோக்கிநின்றார்கள்—எ-று. (அக)

பூரிபேரிப்புகன்றிடுமல்லரித்
தூரியங்கள்தொனித்திடவெங்கணும்
வாரிபோற்சென்றுவண்பதிபுக்கவச்
சீருளாரெதிர்கொண்டுதிருந்தினர்

இ-ள். பூரி பேரிகை மல்லரிமுதலிய தூரியங்கள் லோகா லோகங்களெல்லாஞ் செவிடுபடும்படியாய் ஒலிக்கக் கடல்போலெழுந்த சேனையோடும் அட்டதிக்குப் பாலகர்களிலொருவனாகிய வருணமகாராசன்வாழும் வண்மைபொருந்திய சுத்தாவதியைச்சேர்ந்தபோது வங்குளமேலோர்களும் வேதவேதியர்களுந் தேவர்களும் எதிர்கொண்டுவந்து மருவுமாமுனி பருவதமகாராசன் முதலியதபோதனர்களையும் பெரியோர்களையுங்கண்டு சுபங்கூறினார்கள்—எ-று. (அஉ)



வேறு - விருத்தம்.

பருவதராஜனுக்குப்பரமனார்தேவியோடும்
திருமகள்தானுங்கூடிச்சிறக்குமஞ்சனமுமாட்டி
வினைவொடுயீரம்போக்கிவேணநற்பணிகள்பூட்டி
தரைபுகழ்தவிசுட்சேரத்தையலோடமர்த்தினார்கள்

இ-ள். மருவுமாமுனியின் புதல்வனாகிய பருவதராஜனுக்குநல்ல சுபமுகூர்த்தத்தில் திவ்வியதீர்த்தங்களால் மஞ்சனமாட்டுவித்து வெ ள்டுசுகளால் யீரந்துவட்டி பார்வதாதேவியும் இலக்குமிதேவியுங்கூடி இழையாயிரம் பொன்பெறத்தக்கப் பட்டுபீதாம்பரமுடுதேதிக்கழுத்தில் முத்துமாலை மோகனமாலை சந்திர ஆரமுதலிய உத்திரசஞ்சமுஞ் சூட் டிக்கைக்கு அஸ்தகடகபாஜிபந்துமிட்டு விரல்களுக்கு மோதிங்களிட் டு அழகியஇருசெவியினும் பண்டிக்கடுக்கன் மகரகுண்டலமும்பூட்டி மேலுக்கு உத்தரீயமும்போட்டு பேசுவதற்கரிய கலியாணமண்டபத் தில் வருணன்குமாரத்தியாகிய மேனவதியுடன் மணவரையின்மீது உட்காரவைத்தார்கள்—எ-று. (அரு)

வேறு - விருத்தம்.

மாலையதுவிகநிகென மரகதமதென்ன
சோலைகுயில்மென்மொழியைசுண்டுவிரல்தாங்கி
ஆலமதுமங்கயர்களன்புடனேயேந்த
மாலைமணவோமமதுமலரயனுஞ்செய்தான்

இ-ள். மாலைமணஞ்செய்வதற்காகப் பசும்பொன்னினாற்செய்து நவரத்தினங்களிழைத்து இலகாநின்ற அழகியதாம்பாளத்திற் கற்பக மலர்களை விசித்திரஉன்னதமாகத்தொடுத்து நறுங்கமழோங்கும்மாலை யைக்கொண்டுவந்து உமாதேவிபிரமன் முன்னிலையில்வைக்கவும் அர ம்பை ஊர்வசி மேனகை திலோர்த்தமை யென்னும் அரம்பைமாதர்க ள் ஆலங்காத்துச்சுழற்றிநிற்கவும் முண்டகத்தோனாகிய பிரமதேவ ன் ஓமகுண்டத்தில் அக்கினிதேவனை ஆவாகனஞ்செய்து தேவரிஷிக ளால் வேதமோதச்செய்து ஓமம்வளர்த்தினான்—எ-று. (அச)

வேதனாையுமென்விதியோரையும்
ஆதிநாயகனன்புடனோக்கியே
கீதமாம்விதியாவும்நித்ழ்த்தென
போதவாச்சியம்பொங்கியேஆர்த்தவே

இ-ள். வேதனாகிய பிரமனையும், மேன்மைபொருந்தியமறையோ ர்களையும் கயிலாசபதியாகிய பரமசிவன் அளவிலாக்கருணைநிறைந்த


ங்களால் நோக்கி ஓய்-மறையவர்களே, இங்ஙனம் செய்சடங்குகள் யாவும் முறைபிறழாது நடத்துவீர்களென்றோத அவ்வாஞ்ஞையைக் கேட்டமாத்திரத்தில் மங்கலவாத்தியம் முன்னர் சங்குநாதமுதலியமுரசங்களும் அண்டமதிரும்படியாய் முழக்கினார்கள்—எ-று. (அரு)

வேறு-விருத்தம்.

பரவியபிரமன்றானும் பாரனல்வளர்த்திநெய்யால்
அரியமந்திரங்களோதி ஆகமவிதிபோற்செய்ய
விணைவொடுமாலைமாற்றி மெல்லியராலஞ்சுற்ற
அரன்மனமகிழ்ந்தன்னோற்கு ஆசிகள்கூறினால்

இ-ள். சிவபெருமா னுரைத்தவையைக்கேட்ட வேதன்பணிந்து பாரனைத்துந் துதிசெய்யத்தக்க ஓமகுண்டத்தில் அக்கினியை நெய்களைச்சொரிந்து ஓங்கி எழச்செய்து ஆகமவிதியினின்றும்நீங்காது மந்திரங்களைச்சொல்லி அட்சதையை யாவர்கரங்களிலுங்கொடுத்து மணமாலையைத் தாம்பாளத்தோடுமேந்திச் சந்திர சடாதரமூர்த்தியாகிய ஸ்ரீகயிலாசபதியினிடத்திற்காட்ட அப்பெருமான்மகிழ்ந்து பருவதராஜனுக்கும் மேனுவதியம்மனுக்கும்ஆசீர்வதித்து அட்சதைகளையிறைக்க மாலைமாற்றி அரம்பைமாதர்களால்ஆலங்காட்டிப்பாடினார்கள்—எ-று.





வேறு-விருத்தம்.

ஆசிசொலிரிஷிகளருஞ்சேஷைகளிறைக்க
பாசமுறுங்கன்னியர்கள் பக்கமதில்துன்ன
கேசுலவுமன்னரெல்லாந்தேவரொடுகூடிக்
காசிபர்வசிஷ்டருடன்கவுதமரும்வாழ்த்த

இ-ள். ஆசிகூறிய விருஷீஸ்வராள் முனீஸ்வராள் தபோதனர்கள் யாவரும் அருஞ்சேஷையிறைக்கவும் பார்வதாதேவி, இலக்குமிதேவி, கலைமகள். சவுலாங்கினிதேவி. சுரரோஷை முதலியவம்கத்தவர்கள் பக்கத்திலிருந்து மனமகிழவும் கீர்த்தியும் அழகும் வாய்ந்த மகாமலாடலேஸ்வரனாகிய மருவுமகாமுனியும் வருணாராஜனும் பொன்னுலகவாசிகளாகிய தேவேந்திராதிதேவர்களும் இராஜராஜாக்களும் காசிபர் வசிஷ்டர், கவுதமர் முதலிய சப்தரிஷிகளும் அஷ்டவசுக்களும் கணங்களாதி நவநாதர்களும்வாழ்த்திமகிழ்ந்தார்கள்—எ-று. (அஎ)

சோகமலர்க்கண்ணியர்கள்சோபனங்கள்கூற
நாகமடமாதர்கணயந்துவிசைபாட
பாகமுறுஉமைதிருவும்பருவதனைவாழ்த்த
வாகுசெறிவையமெலாம்மலர்மழைசொறிந்தார்

இ-ள். மன்மதனால் எய்யப்படும் மலர்க்கணைகளாகிய,. முல்லை-அசோகம்-நீலோற்பலம்-மாம்பூ-தாமரை-இவ்வைந்துக்குரிய தானங்களையுடைய மாதர்களில் அசோகமலரால்மெலிந்து அனைக்கண்களாகச்சோர்ந்து இவ்வேந்தன் நமது கண்களைச்சோரச் செய்தமையால் அனங்கனேவென்று உய்த்துநோக்கிச் சுபமங்களம்பாடவும் நாகலோகவாசிகளாகிய பாவையர் அடங்காமகிழ்வோடும் இனிய கீதங்களைப்பாடவும் அக்காலையிற் கயிலாசபதியாகிய பரமசிவத்தினதுவாமபாகத்துக்குரிய மஹேஸ்வரியென்னும் உமையவளும் திருமால் தேவியாகிய இலக்குமியும் மணமாபிள்ளையாகும் பருவதமகாராஜனைப்பரிவோடும் பார்த்து வாழ்த்தவும் திணிந்த சேனைமலிகெங்கணு மூடும்படியாய்மலர் மழை பொழிந்துமகிழ்ந்தார்கள்—எ-று. (அஅ)

மணவிதிமுகிந்ததெனமலரயனுமோதத்
திணிகொள்பரவதனுமவன்றேவியுமெழுந்தே
இணையிலரனரிபிரமரொழில்பதமிறைஞ்ச
வணிகொள்சுரரொடுமவர்களாசிபலசொன்னார்

இ-ள். மலரிலவதரித்த சதுர்முகப்பிரமன் திருமணச் சடங்குகள்யாவும் முடித்தமையால் மணவறையினின்றும் எழுந்திருந்து பெரியவர்களைச் சேவித்துக்கொள்ளுவீர்களென்றுசொல்ல அதைக்கேட்ட

திணிந்த தோள்வலியோடுங்கூடிய பருவதராஜன் தனது தேவியாகிய மேனுவதியோடும் எழுந்திருந்து ஒப்பொருவரில்லாத கற்பகத் தருவைப்போன்ற பரமசிவனையும் பாற்கடற்றுயின்றோனாகிய திருமாலையும் முண்டகத்தோனாகிய வேதனையும் மற்றுந்தனது தாதைமுதலிய தபோதனர்களையெல்லாம் சிறப்போங்கிய பதாம்புயங்களை மனதிற்றியானித்து ஏகநமஸ்காரமாய் நிலத்தில்வீழ்ந்து இருவரும் பணியயில் மூவரோடும் யாவரும் நீடூழி வாழக்கடவீர்களென்று ஆசீர்வதித்தார்கள்—எ-று. (அகூ)

வருணன்விடைதருமளவில்வானவரொழுங்கு
கருணைபொழியீசனொடுகனியமிர்தருந்தி
மருவுமுனிபுத்திரனைமாகரியிலேற்றித்
திருவுடையகோலமதுசெய்திடமுயற்றார்

இ-ள். வருணராஜன் கயிலாசபதியாகிய பரமன்முதற் பண்ணவரையும் எண்ணிலாத முனிக்கூட்டங்களையும் திண்ணம்பொருந்திய வேந்தர்களையும்நோக்கி நமஸ்கரித்து ஐசுவரியம்பொருந்திய மேன்மையோரே யாவரும் இன்று பேதையேன் வளவிலுள்ள உண்டியை உளமகிழ்வோடும் அருந்தக்கோருகின்றேனென்றுகூற அவ்வுரைகொண்டயாவரும் கருணையங்கடலாகிய சிவபெருமானோடுமெழுந்து போசனசாலையுட்புகுந்து அவ்வவர்களுக்கு அமைத்த ஸ்தானங்களிலிருந்து கச்சாயவற்கங்களும் அமிர்தங்களும் வேணபடியருந்தித் தாம்பூல கந்தபுஷ்ப பரிமளாதிகளுமணிந்து பின்பு மருவுமாமுனி புதல்வனுக்குவளர்க்கோலங்காட்டவிரும்பி யானையைச் சிங்காரஞ்செய்து அதன்மேல் நவரத்தினகசிதமான அம்பாரியைவைத்துப் பருவதராஜனைச் சிங்காரித்தேற்றினார்கள்—எ-று. (கூ0)



வேறு - விருத்தம்.

முற்றும்வாத்திய மூவுலகோங்கவே
நிர்த்தகீதங் நேரிழையார்செய
முத்துலாஞ்சத்திர சாமரமொய்த்திட
அத்தனுருடன் யாவருந்துன்னினர்.

இ-ள். முரசுமுதன் முப்பத்திரண்டுவாத்தியங்களும் மூன்றுலோககமும் முழங்கத்தக்கதாய் அரம்பைமாதர்கள்நடித்துக் கீதம்பாடிவரவும், முத்து-வைடூரிய-கோமேதக-புட்பராக-மரகத-மாணிக்கங்களினலமைத்த குடைகளும், வெண்சாமரைமுதலிய பீலிக்குடைகளுமிரட்ட அத்தனுகிய சிவபெருமானும் மற்றுந் தேவர்களும் அவரவர்கள் வாகனுதிகளிலேறிப் பிரகாசித்தார்கள்—எ-று. (கூக)

வேறு - விருத்தம்.

சீலமாமுனிவர்தேவர் திருந்தியவரசரோடு
கோலமேவந்துவேந்தன் கொற்றவன்மனையுட்சேர்ந்து
பாலொடுபழமுமுண்டு பரமனுர்விடையைப்பெற்று
தாலமென்புகழுற்றோங்குந் தனிப்பதிதனக்கெழுந்தான்.

இ-ள். சீலம்பொருந்திய முனிவர்களும், தேவர்களும், மகுடமண்டலீகர்களும் கூடி ஊர்க்கோலம்வந்த வேந்தன் வருணராஜனுடைய அரண்மனையிற்சேர்ந்து தனதுதேவியுந் தானுமாய்த் தீம்பாலுங்கனியுமருந்திச் சந்திரஜடாதரமூர்த்தியாகிய பரமசிவனிடத்தில் விடைபெற்று வணங்கி லோகாலோகங்களெல்லாம் புகழத்தக்க மேன்மைபொருந்திய தனது நிஷதபுரிக்கு மருவுமாமுனியின் புத்திரசிகாமணியாகிய பருவதமகாராஜன் சேனுசயின்யங்களோடும் பிரயாணப்பட்டான்—எ-று. (கூஉ)

வேறு - விருத்தம்.

வாத்தியமுழங்கவெழில் வானவர்கொண்டாட
நேத்தியதாய்நிஷதபுரி நிபுணன்வலம்வந்து
ஏற்றுபதியிளவரசு மிந்திரனைப்போல
நாற்றிசையுமகிழ்வுற நடாத்தினனன்நீதி.

இ-ள். வாத்தியகோஷ்டிகள் கடலொலிபோலிசையத் தன் நகராகிய நிஷதபுரியைச்சேர்ந்து ஊரை வலம்வந்து அரண்மனையிற்சேர்ந்த பின்பு மருவுமாமுனியென்னுந் தனதுதாதையால் அப்பதியை இளவரசுபட்டம்பெற்று அமராவதிக்குரிய தேவேந்திரனைப்போல நாற்றிசையினுமுள்ள இராஜராஜாக்களும் புகழ்ந்து கப்பங்கட்டி வரும்படி

வாய் மநுநீதிபிறழாமற் செங்கோல்செலுத்திவந்தான் பருவதமகாரா ஜன்—எ-று. (கூங)

வனிதையர்களரசியுடன் மன்னனுமகிழ்ந்தே
தனிமணிகணிலவெறியுஞ் சயனமதணைந்து
இனியமொழிசரசமதிழைத்துவருநாளிற்
கனிவுடையமருவுமுனி காளையோடிசைப்பான்.

இ-ள். பெண்ணரசியாகிய மேனுவதியோடு பருவதராஜன் பசும்பொன்னினாற்செய்து நவரத்தினங்களுமிழைத்து நிலவெறிக்கானின்ற மஞ்சத்தின்மீது அன்னத்தூவிகளாற்செய்த சயனம்பரப்பிய தன்மீது நறுமணமுலாவு மலர்க்களைத்தூவி கோகிலவாணியாகிய தேவியுந்தானும் இனியவார்த்தைகளாலுஞ் சரசசல்லாப லீலைகளாலுமகிழ்ந்து வாழ்ந்துவரும்நாளையில் ஓர்நாள் மிகவும் பரிவோடு மருவுமாமுனியானவர் தனது குமாரனையழைத்துக் கூறுவார்—எ-று. (கூச)



வேறு - விருத்தம்.

பருவதனையழைத்தெனது பாலகனேயிதுவரையான் பாரனைத்தும்
உரமதுறவாண்டுவந்தேன் ஒருகோடியுகமின்ன மொழிக்கவேண்டும்
சரிதைமுலலீறுய வத்துவையானடைகுவனேல் தன்யனுவேன் [ன்
விரகுடனீவாழ்வையென மென்முனிவோருடன்சென்று விமலமுற்று

இ-ள். மருவுமாமுனியென்னும் வேந்தன் தனது புதல்வனாகிய பருவதமகாராஜனையழைத்து அடாசெல்வனே இக்கடல்சூழ்ந்த உலகனைத்தும் வேறொருமன்னனுக்கில்லாது மண்விண்ணனைத்தும் புகழும்படியாய் இதுவரையிலும் நீதிசெலுத்திவந்தேன் இன்னம் ஒருகோடியுகமளவும் இத்தேயத்தோடு மிருக்கவேண்டியிருப்பதால் உலகத்தும் ம ஜீவர்களுக்கு ஜகதீசனுல்விதித்த சரிதை-கிரியை-யோகம்-ஞானமென்னும் நான்குபடியில் முத்திவீட்டைப்பெறவிரும்பியவர்கள் ஞானத்தையடைந்தாலன்றோ தன்யராவார்கள் அதுபோல் நானும் மோக்ஷவீட்டைப்பெறவேண்டும் ஆதலால் நீ யாதுங்குறைவின்றி புத்திரபாக்கியம்பெற்று நீடூழிகாலம் நீதிசெலுத்திவாக் கடவையென்றுவாழ்த்திப் பின்னர் தவவேடம்பூண்டு தேவரிஷிகளைக்கூடி அடவியைச்சேர்ந்து விமலமாகிய ஞானத்தைப்பெறத் தபஞ்செய்திருந்தார்—எ-று. (௬௫)

வேறு - விருத்தம்.

அன்னமுனியுரைதவிரா தரசதுபுரிந்தும்
பன்னரியநகரதனைப் பாவலர்களேத்த
கன்னியிளமாமயிலே கனிவுபெறக்கூடி
மன்னுமணிபீடமதில் வாழ்ந்துவருநாளில்.

இ-ள். தாதையுரைத்தவிதிபோல் பண்ணுதற்கரிய நிஷதமாபுரியென்னும் பட்டணத்தை நவரத்தினகஜிதமாய்வயங்குஞ் சிங்காசனத்தின்மீதிருந்து அரசாண்டும் மயிலைப்போன்ற அழகிய சாயலினையுடைய மேனுவதியைக்கூடிக் களித்தும் பாவலர்முதலியயாவரும் துதிக்கத் தக்கதாய்ப் பருவதமகாராஜன் வாழும்நாளில்—எ-று. (௬௬)

வேறு - விருத்தம்.

கங்கைவேணிக் கருணையினுலிறை
மங்கையாற்கு வயறதுசூலதாய்த்
திங்களைந்துஞ் செறிந்திடவாங்கவள்
பொங்குமேனிப் பசுநிறம்பூர்த்ததே.

இ-ள். விரிந்தகங்கையைச் சடாமகுடத்தில்வைத்திருக்குங் கயிலாசபதியாகிய பரம்சிவத்தினுடைய கருணையென்னுங் கிருபாநோக்கத்தினுல் பருவதமகாராஜன் தேவியாகிய மேனுவதிக்கு ஆலிலைபோன்ற அழகியவயற்றிற் கருவுண்டாகி ஐந்துமாதம்நிறைந்த தான் பொன்போலிலகும் அம்மங்கையின்மேனி மரகதம்போன்ற பச்சைநிறந் தோணப்பட்டுப் பிரகாசித்திருந்தாள்—எ-று. (௬௭)

பச்சைமேனிப் படர்ந்தொளிர்போதினில்
இச்சையாகுவ ளெவ்வகைதன்னினு

மெச்சுஞ்சேடிய ரியாரும்வினவுடன்
உச்சிதப்பல காரங்களூட்டுவோர்.

இ-ள். மேனுவதியம்மன் திரேமெல்லாம் பச்சைநரம்புகள்தோன்றியகாலேயில் பூங்கொடியைப்பழித்திலகும் இடையினையுடைய அம்மாதுகண்ட வஸ்துக்களின்மீதும், பல்வகைச் சிற்றுண்டிகளின்மீதும், நானுவித கனிவர்க்கங்களின்மீதும், சட்சுவைகளிற் புளிப்பினிடத்தே மனது பூரணமாகவைத்திருப்பதாலும், அரசியினதுமனம்போல் மேன்மைபொருந்திய தோழிமார்கள் உச்சிதமாகியுந் தீஞ்சுவையோடுங் கூடிய உணவுகளை வேணவளாயிற்செய்து உபசாரத்தோடும் அருந்தச் செய்வார்கள்—எ-று. (௬௪)

வேறு - விருத்தம்.

திங்களீரைந்து முதிர்ந்தபின்வட்குச் செப்பிடுங்கெர்ப்பநோயடுத்து
அங்கமும்பதைத்துஆருயிர்மெலிந்தஅரிவையும்புதல்வனைப்பயந்தாள்
இங்கிதமாத ருபசரித்தவட்கு யிளம்பிறைபோன்றவச்சேய்க்கு
மங்களமாக மஞ்சனமாட்டி மன்னனுக்குரைசெயமகிழ்ந்தான்.

இ-ள். மேனுவதியம்மனுக்குப் பத்துமாதமும் பூரணமாய்ப் பிரசவநோயென்று சொல்லுங் கெர்ப்பவேதனை யதிகரித்த தான் வஞ்சிக்கொடிபோன்ற அரிவையினது திரேகம் நடுக்கமுற்று சகிக்கலாற்றாதவளாய் மூர்ச்சையடையுங்காலேயில் சேடியர்களும் மற்ற மாதர்களுநெருங்கி வேண்டிய உபசரனைகள்செய்துவருக மூன்றாம்பிறைச்சந்திரன் போல் எவ்வுலகினும் இணைசொலப்படாத அழகிய புத்திரனைப்பெற அப்புதல்வனைக்கண்ட பாங்கியர் உளம்பொங்கிப் பசும்பொன்னினுற் செய்த பலகையின்மீதுவளர்த்தி மங்களகரமாய் மஞ்சனமாட்டுவித்துப் பின்பு மண்டலாதிபனுகிய பருவதமகாராஜனுக்குச்சொல்ல அதைக்கேட்ட வேந்தன் சந்தோஷமென்னுஞ் சமுத்திரத்ில்மூழ்கினுன்—எ-று. (௬௬)

வேறு-விருத்தம்.

மன்னனுரைசெய்ய ஒளிர்மாநகரமெங்கும்
மின்னுமறையவர்களுறுவீதிமுதன்யாவும்
துன்னுமலவாத்தியமொடுதோரணமுமிட்டே
அன்னநடைமெல்லியரரண்மனையில்வருவார்

இ-ள். பருவதமகாராஜன் ஆஞ்ஞையின்வண்ணம் பெருமைபொருந்திய நிஷதபுரியினைத்தும் பிரம்மக்ஷத்திரிய வைசியசூத்திரரென்னும் நான்குவருணத்தார் வாழும்வீதிகளும் நிறைநிரையாய் மகுடதோரணங்களும் மாவிலைத்தோரணங்களும் நானுவித வன்னத்துவ

சங்கஞ்தூக்கிப் பனிநீர்களைத்தெளித்துக் கோலங்களிட்டு முப்பத்திரண்டு வாத்தியங்களுமுழங்கச்செய்து அந்நகரத்திலுள்ள அன்னம்போன்ற நடையினையுடைய மின்னார்கள் கும்புகும்பாய்க்கூடி இராஜபுத்திரனைக்காணும்படியாய் அரண்மனைவாயலைநோக்கிவருவார்களென்றவாறு. (௩)

கட்டழகியின்றசிறுகாளையர்தமக்கு
தட்டுகளிலாபரணந்தையலர்களேந்தி
இட்டமொடுபாலனுக்கிசைந்தவைகள்பூட்டி
பட்டுகளுடுத்தியவர்பார்த்துளமகிழ்வார்

(இ-ள்.) பாலைப்பருவமுடைய மேனவதியம்மன்பயந்த அரசிளங்கன்றாகிய புதல்வனுக்குக்காணிக்கையாக நவரத்தின வர்க்கங்களும், பொன்னாபரணங்களும் இந்திரவன்னப்பட்டுகளும் மாதர்கள் தங்கத்தாம்பாளங்களிற் கொண்டுவந்து மிகுஆவலோடும் அப்பாலன் கரசரணாதிகளுக்கேற்ற பணிகளைப்பூட்டியும் பட்டுகளையுடுத்தியும் பார்த்துப்பார்த்து அடங்காமகிழ்வைய்துவார்கள்—எ-று. (௱௧)

மஞ்சனமுமாட்டிடுவர்மங்கையர்கள்கூடி
கொஞ்சுபசும்பூங்கிளியாங்கோமகன்றனக்கு
மிஞ்சுபணிபூட்டிமகிழ்மேற்கொளுமந்நாளிற்
பஞ்சுபதந்தத்தியவன்பாரினிடைப்பான்

(இ-ள்.) அழகியமங்கையர்கள்கூடிக் கொஞ்சிக்குலாவும் பூங்கிள்ளையனைய புத்திரசிகாமணிக்கு நிதநிதம் அந்திசந்தி இருகாலங்களினும் மஞ்சனமாட்டி அழகியபட்டுகளினால் ஈரம்போக்கி பூரணச்சந்திரோதயம்போன்ற திருநுதற்குப்பொட்டிட்டுச் சந்திரபிறைசூரியபிறை சுட்டிமுதலிய தலைசாமான்களும் கழுத்தில்மோகனமாலைமுத்துமாலைகளும் கரங்களில் பாட்டீல் கடகம் பாஜிபந்தும் பஞ்சின்மெல்லடியைப்போலும் செங்குமுதம்போலு மொளிரும்பதங்களில் சதங்கை தண்டைசிலம்பிகளுஞ்சூட்டி நனிகாதலோங்கி வளர்த்து வருகின்றநாளில் மெதுவாய்த் தத்தித்தத்தி நடக்கலாயினன் பருவதவேந்தன்புதல்வன்—எ-று. (௱௨)

வேறு - விருத்தம்.

சீருலவுகிடதமாபுரி வேந்தனுக்கினிய
செல்வனாய்வந்துதித்த
சிறுபிறையினன்றனக் கைக்தாவதாண்டனிற்
றிகழுமைம்நாகனென்றே

ஏருலவுமன்பே ரளித்துவித்தியாரம்ப
மெழின்முனிவராலிசைத்து
இங்கிதமிருந்த முப்பத்திரண்டறமும்
இழைத்தின்பவாரிதியெனும்
பேருலவுங்கைவே ணியனருடழைக்கும்
பெருந்தகையினன்பயந்த,
பெருமையுறுபாலனும் கலையெலாமோர்ந்துதரு
பேதமுற்றோங்குநாளிற்
தாருலவுமணிமார்பன் பருவதன்சமுகமதை
தவமுனிவர்போற்றுசீலன்,
தன்னுளமதித்துநா ரதமுனிவர்வரவைத்
தராதிபன்கண்டனனரோ.

(இ-ள்.) சிறப்போங்கிய நிஷதபுரியை அரசாட்சிசெய்துவரும் மகாமண்டலேஸ்வரனாகிய பருவதமகாராஜனுக்கு அரியபுத்திரனாகவும் மூன்றாம்பிறைச் சந்திரனைப்போலவும் வளர்ந்துவரும் அப்புதல்வனது ஐந்தாவது ஆண்டில் வேதவேதியர்களாலும் முனிவர்களாலும் தேவரிஷிகளாலும் நல்லமுகூர்த்தத்தில் அழகிய மைநாகனென்று வேந்தனானவன் பெயரளித்து வித்யாரம்பமுஞ்செய்துநனிகாதலோடும் நீதிசாஸ்திரத்திற்சொல்லும் முப்பத்திரண்டு தருமங்களாகிய ஆதுலர்க்குச் சாலை ஓதுவார்க்குணவு அறுசமையதாற்குண்டிமுதலிய தருமங்களை நடாத்தி வருகயில் கருணையங்கடலாகிய ஜகதீசனதுஅருளால் தழைத்தோங்கும் மேன்மையோன் யீன்றபெருமைபொருந்திய மைநாகன் நான்குவேதமாறுசாத்திரமறுபத்துநான்கு கலைக்கியானமநுவிக்யானமும், தநுர் வேதமும் உணர்ந்து வல்லவனாகியிருக்கும்நாளில் மலர்மாலையணிந்ததிண்டோளினையுடைய பருவதராஜசமுகத்துக்கெழுந்தருளவேண்டுமென்று கருதி முனிசிரோஷ்டராகிய நாரதமகாமுனிவர்வருதலை வேந்தன்கண்டான்—எ-று (௭௯)

வேறு - விருத்தம்.

காண்டலுமெதிர்சென்றேத்திக் கடிமலர்ப்பதத்தில்வீழ்ந்து
வேண்டியேயழைத்துவந்து மென்மணிப்பீடங்காட்டி
ஆண்கையேநீரென்பாலருளியதென்கொலென்ன
யிண்டொளிமுனிவன்றானுமிறைவனுக்கியம்பலுற்றான்

(இ-ள்.) முனிநாதன் வரவைக்கண்ட வேந்தன் சிங்காசனத்தினின்றும் எழுந்து எதிர்சென்று துதித்து செந்தாமரைக் கமலம்போன்ற அழகிய பாதகமலங்களிற் பணிந்து அழைத்துவந்து நவரத்தினகசித

மாகிய பீடத்தின்மீது ஆரோகணிக்கச்செய்து பின்னர் வேந்தன்முனிவரனைநோக்கிப்பணிந்து எம்மையாட்கொள்ளுங்கோ முனியே தேவர்பேதைபால் யாதுகாரணத்தா லெழுந்தருளியதோவென்று கேழ்க்க, அதைக்கேட்ட வெண்பொடி உருத்திராட்சமாலைகளால் வயங்கும் நாரதமுனிவர் பருவதராஜனைப்பார்த்துச்சொல்லுகின்றார்—எ-று. (௭௪)

மன்னகேளுமையுனக்கு மகவதாய்சனிக்கவேண்டி
முன்விதியிருப்பதானீ உருத்திரன்றன்னைநோக்கி
இன்னிசைத்தேவியோடு மிமாசலமதனினின்று
பன்னருந்தபஞ்செய்வாயேற்பலிக்குமென்றுரைத்துச்சென்றான்

இ-ள். கேளாய் வேந்தே உமாமஹேஸ்வரியாகிய பார்வதாதேவி உனக்குப் புத்திரியாய்வந்து தோன்றும்படியாய்ப் பண்டைமறையிற் பயிலுகின்றமையால் அதுபோல் நீயும், உன்தேவிமேனுவதியும், இமயமலைச்சாரலிற்சென்று கயிலாசபதியாகிய பரமசிவனைநோக்கிச் சொல்லுதற்கரிய அருந்தவமிழைப்பையேயாகில் நான்சொல்லியவண்ணஞ் சித்தியர்குமென்றுகூறி நாரதமுனிவர் தன்னிருப்பிடத்துக்குச் சென்றார்—எ-று (௭௫)

ஆங்கவருரைத்தவண்ணமரசனுமகனைநோக்கி
வீங்கொலிவேலைசூழும்வியனகரணைத்துஞ்சேய்நீ
தீங்கிலாதாள்வாயென்றுதிருந்தியவேடம்பூண்டு
மாங்குயிலனையாளோடிமாவரைநோக்கிச்சென்றான்

இ-ள். நாரதருரைத்த வாய்மையின்படி மண்டலேஸ்வரனாகிய பருவதமகாராஜன் பெறுதற்கரியதனது புதல்வனைப்பார்த்து அடாசெல்வமே நீ நெடியகடல்சூழ்ந்த இவ்வையமனைத்தும் ஏகசக்ராதிபதியாய் மநுநீதியிற்பிறழாது அரசுசெலுத்திவரக்கடவையென்று இளவரசுபட்டங்கொடுத்துப் புன்பு தவத்துக்குரிய வேடம்பூண்டு மாஞ்சோலையின்மேவுங் கோகிலத்தைப்போன்ற இனியவார்த்தைகளையுடைய தேவியைத்தன்னுடுவரும்படியாய்ச்சொல்லி அழைத்துக்கொண்டுஇமோர்க்கிரிபருவதத்தைநோக்கி நடந்தான்வேந்தன்—எ-று (௭௬)

விளங்குமப்பதியைநீத்த வேந்தனுந்தேவிதானும்
களங்கமில்லாமற்றோன்றுங் கங்கையுஞ்சுரமுந்தாண்டி
இளங்கொடியனையாளோடு யிமாசலவரையைச்சார்ந்து
வளங்கொளச்சாலைசெய்துவஞ்சியையவற்றுள்வைத்தான்

இ-ள். மலர்க்காவுகளாலும் வயங்கும்மேடைகளாலுஞ் சூழப்பட்டநிஷதபுரியைவிடுத்த பருவதராஜன் தனதுதேவி மேனுவதியோடும் நிஷ்களங்கரதிதமாய்க் கடல்போலிரைந்து அலைகளைவீசிக்கொண்

டிருக்கும் கங்காநதியையும் காட்டானே சிங்கங்காடிபுலிமுதலியகணக் கூட்டங்கள்வாழும் அடர்ந்த காடுகளையுங்கடந்து சாக மூலபலாதிகளை யருந்திக்கொண்டுஇமயமலையைச்சேர்ந்து வஞ்சிக்கொடிபோன்ற தன் பத்தினியிருப்பதற்கு ஓர் பர்ணகசாலையைப்புதுக்கி, அச்சாலையுள்மங் கையை இருக்கச்செய்தான் பருவதராஜன். (ருஎ)

பெருந்தகைவேந்தன்றானும் பித்தனுமொருகூறாகத்
திருந்தியஉமைதனக்குச்செல்வியாய்வேண்டிப்பன்னா
ளருந்தவமிழைக்குநாளிலரனுமையிருவராங்கு
தெரிந்தவாறருளவெண்ணித்தேவியுமுரைக்கலுற்றாள்

இ-ள். மேன்மையோனாகிய பருவதராஜன் கயிலாசபதி யாகியுங் கங்கைவேணியனாகியும் பேயோடாடியாகியும் விளங்குஞ் ஜகதீசனது ஒரு கூறாகஇலங்கும் அழகிய உமாதேவிதனக்குப் புத்திரியாக வந்து ஜனிக்கவேண்டுமென்று அதியாவலுற்று பங்கயாசனத்தின்மீது உத்தி ரதிசைநோக்கி யுட்கார்ந்துஜம்புலச்சிக்கையறுத்துப் பரமசிவத்தைமன த்திற்பதித்துப் பஞ்சாக்கினிஇடைநின்று நெடுநாள்வரையில் அருந் தவமிழைத்துவருகயில் அவ்வெண்ணத்தையறிந்த கயிலாசபதியும்அ ம்மனும் அவ்வாறே அருட்செய்ய அன்புகொண்டு நாதனைப்பார்த்து உமாதேவிகூறுவாள்—எ-று. (ருஅ)

அறுசீரடிவிருத்தம்.

எந்தைமகம்பாற்கவிடையருளுமெனஉமைகேட்க
இறைவனுக்கு
புந்தியிலாதிகழ்ந்தனனென்றுரைக்கசிவையெனைவேண்டிப்
பொறுப்பாயென்று
வந்தனஞ்செய்தனளவளைநகைபுரிந்துகடிதணைந்து
வருவாயென்னக்
கந்தமலர்க்குழலாளுந்தந்தைமகந்தொடங்குகன
பதியைச்சார்ந்தாள்

இ-ள். உமாமகேஸ்வரியானவள் தனது தந்தையாகிய தக்கன் வேள்விவளர்த்துவதைக்கேட்டுத் தான்போய்க்காணவேண்டி விருப்ப முற்றவளாய் சிவபெருமானைப்பார்த்து சுவாமிஎன்றந்தையாகதீட்சை யிலிருப்பதால் யான்போய்ப்பார்த்து வருகின்றேனென்று கேட்க அ தைக்கேட்டபெருமான் ஓ பெண்பாவாய், உன்தகப்பன் புத்தியில்லா மல் என்னைநிந்திக்கின்றபடியால் நீ அவனிடம் போகலாமோவென்று சொல்லதேவி சுவாமீ என்தகப்பன்செய்தகுற்றத்தை என்னை வேண் டித்தாங்கள் மன்னித்துப்போய்வரும்படியாய் விடைதரல்வேண்டுமெ

ன்றுயணிந்துநின்றதேவியின் திருமுகத்தைநோக்கிப்புன்னகைபுரிந்து நல்லது நீபோய்ச் சீக்கிரத்தில்வந்து சேரென்றுசொல்லப் பார்வதா தேவியும் மகிழ்ந்து தன் தகப்பன் யாகஞ்செய்கின்ற இடத்திற்குச் சென்றாள்—எ-று. (௫௪)

தாயனைக்கண்டடிபணியஆங்கவளும்வினவாது
தடிந்துபின்னர்
தீயவனுகிய தகப்பன்றனைபணிய இகழ்ந்தவன்றன்
செயலையுன்னி
பேயுலவுஞ்சுடலையைப்போற்பிழைபிறந்துவிடுகவுங்கள்
பெற்றியென்றுஞ்
வாய்பிறக்கும்வசையுரைத்துமறைந்தனளச்
செயலறிந்தான்மங்கைபாகன்

இ-ள். உமாதேவியானவள் தன்தாதையினதுயாகசாலைக்குப்போய்த் தனதுஅன்னையைக்கண்டுபணியயவள் தழுவாமலும் ஆசீர்வதிக்காமலு மிருக்கப்புந்திவெறுத்தவளாய்ப் பிறகுதனது தகப்பனுடையபாதத்தி லும்வணங்க அதற்குத்தீமையாவுங்கூடி ஒருருவாயுதித்ததுபோலிருக் குந்தக்கனுனவன்பணிந்தபுத்திரியைமகிழாமல் இகழ்ந்துபேசஅதைக் கண்டஅம்மன்கோபங்கொண்டுஉன்னுடையயாகசாலைவாழ்வுமுதலியா வும்பேயிருந்து,நடிக்குஞ்சுடலையாகிப்போகக்கடவதென்று சபித்துப் பின்னர் கோபமடங்காது இப்பாவிவளர்த்ததேகம் இருக்கப்படாதெ ன்றுயோகத்தினுலே தன்னுடையதேகத்தைவிட்டாள் அச்செய்கை யைக்கைலாசபதியாகியும் ஜகதீசனுகவும் விளங்கும் பரமசிவன் உ ணர்ந்தான்—எ-று. (௫௫)

வேறு - விருத்தம்.

பண்ணுலாமொழிச்சிசெல்லபரமனுவிதங்குமோ
தன்னுலாமுடிக்குணின்றுதழலைவீசியெறிவதால்
அன்னைல்வெம்பிமுனிவுகொள்ளுமளவினெற்றிவிழிதனில்
விண்ணுமண்ணும்வாடவதனில்வீரன்வந்துதித்தனன்

இ-ள். சார்வதாகாலமும் வாமபாகத்தின்கண்ணே விளங்கியிருந் தபண்ணினேர்மொழியினையுடைய பார்வதியம்மனுனவள் தன்னைப்பி ரிந்துதேகத்தைவிட்டவுடனே தனித்துஒண்டியாகி நின்றுவிட்ட பர மசிவத்தினது ஆவிசடத்திற்றங்குமோ ஆதலால் சீதளமுலவும் மூன் றும்பிறைச்சந்திரன் றனதுசடாமகுடத்திலிருந்து வடவைக்கனலைவா ரிவாரி இறைப்பதால் உளம் வெதும்பி இந்தத் தக்கனுகிய பாதக னலல்லவோ இவ்வருத்தம் நமக்குக்கிடைத்ததென்று அதிக சினங்

கொண்டபோது அவருடைய நுதல்விழியிலிருந்து மன்னவின் முதலிய யாவும் நடுங்கிஉயிர்மாயும்படியாய் வீரபத்திரரானவர்தோன்றினார் - எ(

மங்குல்போலுடற்கறுத்துமணிமயூரமுடியுடன்
இங்குலாவுமேருபோலவிடிமுழங்குதழலின்வாய்
பொங்குகொட்பளிக்கநெற்றிவிழியினும்புகையெழ
செய்கையஞ்சலித்துவீரதேவன்வந்துதோன்றினான்

இ-ள். ஆகாயத்திலிலங்காநின்ற ஆவர்த்தமென்னும் மேகத்தினும் அதிககறுப்புற்ற தேகத்தோடும் அழகிய கலாபத்தினதுநிறம்போன்ற மரகதமணிகளாலிழைத்தொளிரும் கிரீடத்தோடும் இங்ஙனம்வந்து சஞ்சரிக்கின்ற மேருவோவென்ன எண்ணத்தக்கதாயும் மேகத்தின்கர்ச்சனைபோல்முழங்குகின்ற வாயினிடத்திலும் நுதல் விழியினிடத்திலும் புகையெழுந்து தீப்பரக்கும்படியாய் செங்குமுதம்போன்ற கரங்களை அஞ்சலிசெய்துக்கொண்டு வீரபத்திரர்தோன்றினார்—எ-று. ()

மாய்ந்தசிங்கவுரிபுயத்தின்மன்னுமுத்தரீயமாய்க்
காய்ந்தொழித்தவல்லியத்தினதளிசைத்தகச்சையாய்
வாய்ந்தகண்ணிமைக்குமுன்னம்வான்மறைக்குமேனியாய்
வெய்ந்திடத்துதித்தவாவழைத்ததென்சொல்வினவினான்

இ-ள். இரணியனென்னும் அரக்கனைக்கொல்லுவதற்காகத் திருமாலானவர் நரசிங்கமாக அவதரித்துஅவனைக்கொல்லஅவ்வுக்கிரத்தைக்கண்ட தேவர்முதல்யாவரும் நடுக்குற்றிருக்கையில் சிவபெருமானருட்சுரந்து சிம்புகளாகவடிவங்கொண்டுவந்து அச்சிங்கத்தினதுகபோலத்தைப் பேதித்துக்கொன்று அவ்வுருவத்தை மாற்றியபடியால் அத்தோலே உத்தரீயமாகவும் தாருகாவனத்து ரிஷிகளால்விடப்பட்டுசுவாமியினால் மரணமடைந்த புலியினது சர்ம்மமே இடையிலுடுக்குங்கச்சையாகவும் தேகத்தில் ஐந்துருவத்தில் ஒன்றாகவாய்ந்த கண்களை இமைப்பதற்குமுன்னமே ஆகாயமெங்கு மறைக்கத்தக்க தேகத்துடனேயும் வேயின்ற முத்தனுக்குமுன்தோன்றிய வீரபத்திரர் என்னை யழைத்தகாரணம்யாதென்றுகேட்டார்—எ-று. (௱௰௩)

முக்கணத்தநீர்கொடாதுகனல்கொடுக்குமுகிலெனத்
தக்கன்வேள்வியைத்தவிர்த்துமீள்தியென்றுசாற்றினான்
அக்கணத்தினுவகைபொங்கிஅடிவணங்கிவீரனும்
பக்கநின்றபூதபேதபடைகளோடுமேவினான்

இ-ள். ஸ்ரீகயிலாசபதியாகியும் ஒப்பொருவரில்லாத நுதற் கண்ணனாகிய சிவபெருமானைப்பார்த்து என்னை அழைப்பித்தகாரணம் யா

தென்றுகேழ்க்க சுவாமி வீரபத்திரனைநோக்கி சலத்தைப் பொழியாமல் வடவைக்கனலைப் பொழியு மங்குலைப்போற்சென்று மகாபாவியாகிய தக்கனுடைய யாகத்தைஅழித்துவரக்கடவையென்று அருளிச்செய்யஅதைக்கேட்ட வீரன் காதையினுடைய பாதபத்மங்களைப்பணிந்து அதிசந்தோஷத்தோடும் பக்கத்தில்நின்ற பூதபேதபைசாச கூட்டங்கள்தன்னைச் சூழ்ந்துவரும்படியாய் நடந்தார்—எ-று. (௩௰௪

வெதிர்சிலம்புமுரசுசங்கம்வீறுபம்பையதிரவே
புதியகல்லடைமணிதவண்டைபுரிமவங்கமறுகநீள்
கதிகடந்துயாகசாலைகண்டுபூதகணமெலாம்
அதிதிமைந்தரானபேர்களாவிவாரிவீசினர்

இ-ள். பரமசிவனால் கோபித்து அநுப்பப்பட்ட வீரபத்திரர் புறப்பட்ட உடனே பூதகணங்கள் பூரிபேரி புள்ளாங்குழல்சிலம்புசங்கங்கள் உடுக்கைமுதலாகிய வாத்தியமுழக்கவும் பெரியமணி தவண்டைமிருதங்கங்கள்சப்திக்கவும்சென்றுதக்கனுடைய யாகசாலையைக்கண்டு பூதகணங்களெல்லாம் ஒன்றாய்க்கூடிப் பிரளயகாலமேகக்கூட்டம்போலெழுந்து அதிதியினுடைய பிள்ளைகளாகிய சகலதேவர்களையும் பிடித்து நிலத்தோடுவாரிவீசிக்கொன்றார்கள்—எ-று. (௩௰௫)

மிக்கருந்துசோமபானம்வீரபானமாகவே
ஒக்கநின்றயாகதண்டமொன்றுகொண்டுகுன்றுமோற்
றக்கனெதிர்த்தபோதுதலையறிந்துதள்ளினன்
அக்கணத்திலொன்றுசென்றதைக்கணத்தில்தின்றதே

இ-ள். தேவர்களெல்லாங்கூடிச் சோமபானஞ்செய்கின்றதை நாசப்படுத்தித் தனக்கு வீரபானமாகும்படியாய் யாகசாலையிற் புகுந்து வேழ்விஸ்தம்பத்தைப் பிடுங்கிக்கொண்டு எதிர்த்துவந்த தக்கனுடைய தலையை மலைசாய்ந்துவிழுந்ததுபோல் அறுந்துவிழும்படிவீசிச்சாய்க்க அப்போதுதன்னிடத்திலிருந்த பூதகணங்களில் ஒன்றுகுபீலென்றுபாய்ந்துஅரைநிமிஷத்தில் அத்தலையைத்தின்றுவிட்டது—எ-று. ().

வேறு-விருத்தம்.

இங்கிதுவாய்முடிந்ததற்பின்வீரனிறைபரம்பதவியினைத்தானெல்லாம்
அங்கணனுமுனிவாரி னருள்சுரந்துமகத்திறந்தார்க் காவியீந்து
மங்கரியபதங்களெலாம் பழயபடியுதவுதலும் வணங்கிப்போனர்
சங்கரியைமுன்பெற்றானென்பெற்றான்றனக்காட்டுத் தலைப்பெற்றானே

இ-ள். இவ்விதமாய்த் தக்கனுடைய யாகசாலையில் தேவர்முதலியாவரையும் பாழ்படநூறிய அகோரவீரபத்திரர் கயிலாயத்துக்குச்செ

ன்று சிவபெருமானுடைய பாதகமலங்களில்வணங்கி நடந்த சங்கதிகளையெல்லாஞ்சொல்ல அந்தக் கேட்டருளிய பரமசிவனுக்குக் கோபமாறிக் கிருபைபிறந்து அந்த யாகத்திலிறந்தவர்க ளெல்லாரையும் பிழைப்பித்து அவரவரிடங்களை அவரவர்களுக்குப் பழையபடியே யிருக்கும்படியாய் அநுக்கிரகஞ்செய்ய அவர்கள் கடவுளைப்பார்த்து சுவாமீ நாங்கள் விவேகமில்லாமையினாற் செய்தகுற்றத்தைப் பொறுக்கவேண்டியதென்று பணிந்து விடைபெற்றுக்கொள்ளப் பிறகு சுவாமி பார்வதியைப்பெற்ற தக்கனுக்குமாத்திரம் தன்னை நிந்தைசெய்ததற்கு அபராதமாக ஆட்டுத்தலையை அவனுடலில்வைத்துப் பொருத்தி எழுந்திருக்கும்படியாய்ச்செய்தார்—எ-று. (௱௰௭)

பன்னகப்பணியோனை வைதவன்றன்புதல்வியெனும் பழிகழுரத்
தன்னகந்தனையோகச் சாதனையால்விடுத்திமவான் றவத்தினாலும்
முன்னாகமைநாகன் றனைப்பயந்தமேனியது முயற்சியாலு
மின்னாகவவதரித்தா ளமரரெலாமலர்மாரி வீசினாரே.

இ-ள். சொல்லுதற்கரிய அனந்தன்-வாசுகி-தக்கன்-சங்கன்-குளிகன்-பதுமன்-மகாபதுமன்-கார்க்கோடகனென்னும் அட்டமாநாகங்களையும், ஆபரணமாகப்பூண்டிலங்கும் ஸ்ரீகயிலாசபதியாகிய பரமசிவனைத் தூஷணஞ்செய்த பாவியாகிய தக்கன்மகளென்று தன்னை உலகினர் பழிப்பார்களாதலால் அப்பழிதீரும்படி நாம் இத்தேகத்தை விடவேண்டுமென்று தன்னுடையதேகத்தை யோகாக்கினியால் நிவர்த்திசெய்த உமாதேவி பருவதராஜன் தபோமகிமையினாலும் முன்னே மைநாகனென்னும் பிள்ளையைப்பெற்ற மேனாவதியினது தவமுயற்சியினாலும், அவர்களுக்குப் புத்திரியாக அவதரிக்கயில் தேவர்கள் மலர்மாரி பெய்தார்—எ-று. (௱௰அ)

பன்னகசாலையிலிருந்த தேவியவள்பசுங்குழவி யலரக்கண்டு
மன்னனிடம்போய்ப்புகல அக்கணமேவந்தவனு மகிழ்ந்துநோக்கி
தன்னிகரிலரன்செயலென் றெடுத்தணைத்துமுத்தமிட்டுத் தையலோடு
பொன்னுலவுமிஷதபுரி தனைச்சேர்ந்துபுத்திரியை வளர்த்துவந்தார்.

இ-ள். பன்னகசாலையுள் சிவபெருமானை தியானித்துக்கொண்டிருக்கும் பருவதராஜன் தேவியாகிய மேனாவதியம்மன்பக்கலில் பசுங்கலாபம்போலும், மரகதப்பச்சையைப்போலும், பூரணச்சந்திரனைப்போலும், பிரகாசித்து குயிலின்னோசையைப்போற் செம்பவளவாயைத்திறந்து அலறுகின்றசப்தம் தன்செவியிற் பட்டமாத்திரத்திற் திரும்பிப்பார்த்து குழவியென்றெழுந்து ஆச்சரியமுடையவளாய்த் தனது ம

னிடஞ்சென்று சொல்லுகையில் வேந்தன் யோகத்தினின்றும் விழித்தெழுந்து பன்னகசாலையுள்வந்து குழந்தையை இருகரங்களாலுமெடுத்தணைத்து முத்தமிட்டு ஒப்பொருவரில்லாப் பரமசிவனருளால் பார்வதாதேவி நமக்குப் புத்திரியாகவந்து தோன்றினளென்று சந்தோஷங்கொண்டு தனது மங்கையோடுஅவ்விமையமலைச் சாரலினின்றும் நீங்கி காடுமலைமுதலிய யாவுங்கடந்து பொன்மயமாகப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் ஙிஷ்தபுரியைச்சேர்ந்து மகா வைபவத்துடனே பார்வதாதேவியை நாளொருமேனியாய் வளர்த்துவந்தார்கள்—எ-று.

கலையுயரும்பிறைபோலு மால்மகனுமுருவிலிங்கக் கரும்புபோலும்
பலகலையுமுணர்ந்துபந்து பூங்கியர்களுடன்கூடிப் பயிலும்நாளில்
மலையரசனிடத்தில்மறை நாரதனுமொருநாளின் மகிட்சியெய்தி
உலகமெலாமீன்றஅன்னை தனைநோக்கிமுனிவரரு முரைக்கலுற்றார்.

இ-ள். நாளுக்குநாள் ஒவ்வொருகலையாய் உயர்ந்து பிரகாசித்துக்கொண்டுவருஞ் சந்திரனைப்போலும், திருமால்புதல்வனாகிய மன்மதனுடைய கையிலிருந்து முதிர்ந்துவராநின்ற கன்னலைப்போலும், பலகலையும் ஓர்ந்து தோழியர்களுடன்கூடிப் பந்தடித்துக்கொண்டிருக்கும் நாளில் ஓர்நாள் பருவதராஜனிடத்தில் வேதமுனியாகிய நாரதமகாமுனிவர் மகிழ்வோடும் எழுந்தருளி உபசரிக்கப்பெற்று ஆசனத்தின்மீதிருந்து உலகமெல்லாம் பயந்தெடுத்த வயற்றினையுடையவளாகிய பார்வதியம்மனைப்பார்த்துக் கூறுகின்றார்—எ-று. (கஉ௦)

அம்மநீபருவதன்றன் தவப்பேறால்புத்திரியா யானைநீத்து
இம்மகியிலுதித்ததனால் தேவர்பிரான்யோகமுற்றா ரிமையோரெல்லாம்
செம்மலுனைப்பரவுவதாற் சிவன்மனைநீமாலையிடத் தபங்கள்செய்து
நன்மைதருமணம்புரிந்தாற் கயிலைநகரடைவையென நவின்றுசென்றார்.

இ-ள். ஓ அம்மணி நீர் பருவதராஜனுடைய தபோபலப்பெருமையினால் கயிலாசபதியாகிய ஜகதீசனது வாமபாகத்தைவிடுத்து இவ்வேந்தனுக்குப் புத்திரியாய்த் தோன்றினமையால் தேவதேவனாகிய சயம்புயாதுந்தோன்றாதவராய் மவுனத்திலிருக்கின்றனர் அதைக்கண்ட தேவர்முதல்யாவருந் துன்பங்கொண்டு தாங்கள் கயிலைப்பதிக்குவரும்படியாய்த் துதித்துக்கொண்டிருக்கிறார்களாதலால் சிவபெருமானை மாலையிடவேண்டித் தபஞ்செய்து - அப்பெருமான் உளமகிழ்ந்தபின் மணம் புரிந்து எந்தையுடன் வெள்ளியங் கிரிக்கு எழுந்தருளிவந்து வாழ்வாயென்று நாரதமுனிவர் கூறித் தன்னிருப்பிடம் போய்ச்சேர்ந்தார்—எ-று (௱உக)



வேறு-விருத்தம்.

அவ்வுரைகொண்டமாது அகமதுமகிழ்ந்துஆங்கு
கொவ்வைசேர்வாயினாளுங்கொழுனனை மனத்திலுன்னிச்
செவ்வியமாலைசூட்டத்திருந்தியதபஞ்செய்யுங்கால்
எவ்வுலகத்தோர்கூப்பும்இறைவனேர்ந்திசையலானன்

இ-ள். நாரதமகாமுனிவருரைத்த வாய்மையைக்கேட்ட கொவ்வைக்கனியைப்போன்ற வாயினையுடைய பார்வதியம்மன்மனங் களித்துதனதுமணாளனாகிய பரமசிவனதுவாமபார்ம்பெறவேண்டி அழகிய விரதமுதலியநோன்புகளையந்தப்புரத்திலிருந்துஇழைத்துவருங்காலையில் எவ்வுலகமும்போற்றித் துதிக்கும்படியாகிய ஜகதீசனறிந்து உள்ங்கனியலானார்—எ-று. (௧௨௨)

சங்கரன்மணத்தைவேண்டி உமையுநற்றவமேசெய்தா
ளங்கதுபுணருமாரேழ் முனிவருக்கமலன்சொன்னான்
மங்கலமுரைக்கவேழு முனிவருமகிழ்வாயெய்தி
துங்கவெற்பிறையாற்கிந்த சோபனஞ்சொல்லினார்கள்

இ-ள். கயிலாசபதியாகிய பரமசிவன்மகிழ்ந்து தன்னிடத்திலிருக்கு, மரீசு அத்திரி, ஆங்கிரசு புலஸ்தியன், புலகன், பிருகு, வசிஷ்டரென்னுஞ் சப்தரிஷிகளையும்நோக்கி பருவதராஜகுமாரியாகிய பார்வதி என்னைமணஞ்செய்யவேண்டித் தபஞ்செய் கின்றமையால் நீங்கள் அவ்வேந்தனிடத்திற்குப்போய் சுபஞ்சேதிதெரிவித்து வாருங்களென்றுசொல்ல அதைக்கேட்ட எழுவரும் அப்படியேசென்றுவேந்தனைக்கண்டாசீர்வதித்து உபசரிக்கப்பெற்றுஉனது குமாரத்தியைசுவாமிக்குக் கலியாணஞ்செய்துக் கொடுக்கவேண்டுமென்றுகேட்டார்கள். ()

மன்னவன்மகிழ்ந்தானுங்குவரைமகன்சொன்னவள்ளல்
பன்னுநற்குடிதான்யாது பயந்தவர்யாவர்வாழும்
துன்னியபதியாதென்றான் தூயவர்நகைத்துச்சொல்வார்
என்னிலம்பிறக்கவல்ல வெந்தலென்றறிவாயென்றார்

இ-ள். தேவரிஷிகள்சொல்லிய வாய்மையைக்கேட்ட பருவதராஜன் மனமகிழ்வுகொண்டிருக்க அவ்வேந்தன்புதல்வனாகிய மைநாகன் அம்முனிவர்களைப்பார்த்து நீங்கள்சொல்லும் வள்ளல் எக்குலம் அவரையீன்றவர்கள்யாவர் இருப்பிடம் யாதென்றுகேழ்க்க அதைக்கேட்ட முனிவர்கள் நகைத்துசராசரங்களுக்கெல்லாம் நாயகனாகியசகதீசனென்றுகூறினார்கள்—எ-று. (௧௨௪

பெருத்ததோருவகையாகிப் பிறைமுடியன்பேர்நாளிற்
பொருத்தமுநாளுந்தேர்ந்து முனிவரைப்புகழ்ந்துபோற்றி
விருத்தியார்வரவுநாளுங் குறித்திறைவிடுத்தானன்னோர்
பருத்தசங்கையினுர்க்கிந்த படியெலாம்பணிந்துசொன்னுர்

இ-ள். இவ்வகையாய்க்கூறிய சப்தரிஷிகளினது வாய்மையைக் கேட்ட பருவதராஜன் முதல்யாவரும் சந்தோஷமென்னுங் கடலுட் டோய்ந்து மூன்றும்பிறையைத்தரித்த சடாமகுடத்தினையுடைய பரமசிவன் உதித்தநட்சத்திரத்திற்கு அம்மனுடைய நட்சத்திரத்திற்கும் பொருத்தமும் மணமுடிக்குந்தினமும் அறிந்துநிச்சயஞ்செய்துரிஷிகளது பாதகமலங்களிற்பணிந்து போற்றி விருத்திபொருந்திய மணஓலையும் எழுதிக்கொடுத்தனுப்ப அதைப்பெற்றுக்கொண்டு எழுவருங் கயிலாயத்துக்குச்சென்று சுவாமியைப்பணிந்து மணஓலையைக்கொடுத்து நடந்தசங்கதியாவும் விண்ணப்பஞ்செய்தார்கள்—எ-று. (கஉரு)

இமையவெற்பிறைவனோலை முகத்திலேழ்கிரிக்குமேருச்
சிமையமால்வரைக்குஞ்செம்பொற்கிரிமால்வரைக்குமேழு
தமரவான்கடற்குஞ்சித்தசாரணர்முனிவோருக்கும்
அமரரானவற்கும்வஞ்சிமணத்தினையறிவித்தார்கள்

இ-ள். பருவதராஜன் றனது குமாரத்தியினது மணவோலையை அநேகந் தூதர்கையிற்கொடுத்தனுப்ப ஏற்ற அத்தூதுவர் சப்தகுலபருவதங்களுக்குங் கொடிமுடிபொருந்திய மேருவுக்கும் சக்கிரவாளகிரிக்கும் பேரொலியைக்காட்டி வயங்குஞ் சப்த சமுத்திரங்களுக்கும் தேவர், சித்தர், சாரணர், முதலானவர்களுக்கும், அம்மன் கலியாணஓலையைத்தெரிவித்தார்கள்—எ-று. (கஉசு)

ஓலைகண்டளவேசேர்ந்தஉததிகளேழும்பூமி
மாலையாய்ச்செல்லுகின்றமகிமைசேர்நதிகளேழும்
நீலமேமுதலாவுள்ளகிரியெலாநெருங்கிச்சென்ற
கோலமாமுனிவர்சித்தரிமையவர்குழாங்கள்சேர்ந்தார்

இ-ள். அம்மன் மண ஓலையைக்கண்டபோதே ஏழு சமுத்திரத்திற்கும், பூமிதேவிக்கும், மாலைபோற் பிரகாசித்துக்கொண்டிருக்குங் கங்கை, யமுனே, நர்மதா, கோதாவரி, துங்கபத்திரா, பாகீரதி, பாபாக்கினியென்னுஞ் சப்தநதிகளும் நீலகிரிமுதலாகிய சப்தகுலபருவதங்களும் தேவர் முனிவர்கள் சித்தர் சாரணர்முதலிய யாவருங்கூட்டங் கூட்டமாய்க்கூடிவந்தார்கள்—எ-று. (கஉஎ)

அட்டதிக்கனைத்துந்தோரற்கொடிகளாலடைத்தார்விண்ணை
முட்டறுவிமானந்தன்னுன்மாலையால்மறைத்தார்வீதி

நெட்டிலை பரம்பை பூகநிரைகளாய்நிறைத்தார்வெம்பிற்
றட்டியபுழுகினாலேமெழுகினார்தரைகளெல்லாம்

இ-ள். நெடியகடல்சூழ்ந்த நிஷதமாபுரியென்னும் பட்டணத்திலும் கனகமயமாகிய தேர்களினாலும் வன்னவன்னக்கொடிகளாலு மிடமில்லாமற்செய்து பின்னர் ஆகாயத்தை அழகியவிதானங்களாலும் மலர்மாலைகளாலுமறைத்து வீதிகடோறுங் கமுகு கதலி மாவிலைத் தோரணங்களை நிறைநிறையாய்நட்டு அலங்காரஞ்செய்து மலைகளிலும்பலமாகின்ற கதம்பகஸ்தூரிகளைக் கரைத்துத் தரையெல்லா மெழுகினார்கள்—எ-று. (கஉ௫)

வேறு - விருத்தம்.

மணிவிளக்கனையமின்னைமாலையாமகளிர்கூடி
கணிமலர்க்கங்கையாட்டிகலையினுன்மருங்கைவாட்டி
பணிமணியாரம்பூட்டிப்பரிமளத்தாபஞ்சூட்டி
யணிநுதற்றிலகந்தீட்டியருமறைச்சடங்குசெய்தார்

இ-ள். மாணிக்கத்தீபம்போன்ற பார்வதியம்மனை மேனவதிமுதலிய மங்கலஸ்ரீகள்கூடிக் கற்பகமலர் வாசனைபொருந்திய கங்காசலத்தினாலே மஞ்சனமாட்டுவித்து ஈரந்துவட்டிப் பீதாம்பரமுடுத்தி ஆபரணாதிமுதலிய யாவும் முத்துமாலை மோகனமாலைகளும்பூட்டி பரிமளவஸ்துக்களையும் மலர்மாலைகளுஞ்சூட்டி சந்திரபிம்பம்போன்ற அழகியநெற்றியிற்றிலகமிட்டு மணவறையிற்சேர்த்து வேதவிதிப்படிசடங்குசெய்தார்கள்—எ-று. (கஉ௬)

பூமணம்வேண்டிவந்தபொடியணிபுநிதனுக்கா
தாமணக்கோலஞ்செய்யச்சதுர்முகன்முதலோர்கூடித்
தூமணித்துகில்கள்சாத்திச்சுரதருமாலைசாத்தி
மாமணிப்பணியைநீக்கிமாமணிப்பணிகள்பூட்டி

இ-ள். வாசனைபொருந்திய ஐந்துவிதமலர்க்களால் எய்தமன்மதனைவெறுத்து நெற்றிக்கண்ணினால் எறியச்செய்த சிவபெருமான் அம்மலர்மாலைவேண்டி வந்தவரைக் கோலஞ்செய்யும்படி பிரமன் முதலினோர்கள்கூடிப் பரிசுத்தமாகிய ரத்தினவஸ்திரங்களும் மலர்மாலைகளும்சாத்தி முன்னணிந்திருந்த சற்பமாலைகளைப்போக்கி மாணிக்கமாலைகளைத்தரித்தார்கள்—எ-று (கஉ௭)

கூற்றனைவன்கனகபாதுகைகொடுகுறுக்க
காற்றுவேந்தனுந்திசையெலாநறும்புகைகாட்ட

வேற்றுவாகனக்கடவுளருஞ்சிறியவரளெடுப்பத்
தோற்றமாதவர்கலைமதிவிளக்கொடுசூழ

இ-ள். இம்மனைவன் பசும்பொன்னிறற்செய்திருக்கின்றபாதக்கு நடுகளைக் ... லடுத்துக்கொண்டு வரவும், வாயுபகவான் எல்லாடிக்கிலும் அகிற்பு... சூழ்பிராணிப்புகை காட்டிவரவும், விருஷப வாகனாகிய சிவபெருமான் உடைவாளேந்தி சூரியசந்திராளநேகர் தீவத்தியைப்போற் சூழ்ந்துகொண்டுவரவும்—எ-று. (கங-க)

திக்குப்பாலகர்தெரிவையர்திசைதொறும்வயங்க
மிக்கமாதர்களெழுவருஞ்சோபனம்விளம்ப
விக்குநேர்மொழிநீரறமகளிர்வாழ்த்தெடுப்பத்
தக்கவிஞ்சையமகளிர்பல்லாண்டிசைச்சாற்ற

இ-ள். அஷ்டதிக்குப் பாலகருடைய தேவிகள் அவரவர்கள் திசைகளினின்றுஞ் சேவிக்கவும் சப்தமாதர்கள் சோபனம்பாடவும் கன்னன்மொழியினையுடைய நீரறமகளிர்கள் மங்கலவாழ்த்துசொல்லவும், தக்கவித்தியாதரமாதர்கள் பல்லாண்டுகூறவும்—எ-று. (கங-உ)

கண்டைபேரிகைகுடமுழாமுழவுகாகளந்த
முண்டமல்லரிசல்லரிவலம்புரியொலிப்ப
வண்டகோளகைமடந்தையர்சிலம்பொலியார்ப்ப
வெண்டிசாமுகந்தனிலுமெண்பிரம்பொலியிசைப்ப

இ-ள். கெண்டாமணி ஓசையும், பேரிகை,குடமுழாவாத்திய டித்தள காகள டமாரமல்லரி சல்லரி சங்கங்கள்முதலிய யாவுஞ் சப்திக்கவும் தேவமாதர்களணிந்திராநின்ற சிலம்பினோசை கணீல்கணீலென்று சப்திக்கவும் எண்டிக்கிலும் நந்திகேஸ்வரர் வருகிறகூட்டங்களை விலக்க அடிக்கின்ற பிரம்பினது ஓசையெழவும்—எ-று. (கங-ங)

எண்ணும்வெள்ளிமால்வரையடியிரங்கிபிடபம்
அண்ணல்சேனையின்கொழுந்திமகிரித்தலமடைந்த
விண்ணுமண்ணுமெவள்ளிடமறநெருங்கியவிமானம்
மன்னுமாவிடைநெறிகடந்தடைந்ததுப்பிறியே.

இ-ள். இயாவராலுந் தோத்திரஞ்செய்யப்பட்ட கயிலாசகிரியடிவாரத்தில் சுவாமியினுடைய ரிஷபாவகனமிரங்க சேனையினுடையமுன்னணி இமயமலையையடைந்து ஆகாயமும் பூமியும் எள்ளிருக்குமிடமில்லாமல் விமானங்கள் நெருங்கியது அலங்காரத்தோடுங் கூடிய ரிஷபம் சுவாமியைத்தூக்கிக்கொண்டு வழிமுழுதுங் கடந்து பருவதராசன்பட்டணம்வந்து சேர்ந்தார்கள்—எ-று. (கங-ச)

மாதுலன்பெருங் கிளைஞருமருகனூர்திரளும்
காதலன்பிறு லெதிரெதிர்தழுவினார்கலந்தார்
ஆதியந்தமு மதனிலேயளவிடவரியோன்
வேதியன்கரம் பிடித்தினிதிழிந்தனன்விடையின்.

இ-ள். பரமசிவனுக்கு மாமனாராகிய பருவதராஜனும், அவன் சுற்றத்தார்முதலிய சேனைகளும், மருகனது சேனைமுகமும் மிகுந்த ஆசையோடுங் கூடியவர்களாய் எதிரெதிராகவந்து ஒருவரையொருவர் ஆலிங்கனஞ்செய்கயில் அடிமுடிகாணப்படாத சிவபெருமான் பிரமன் கையைப்பிடித்துக்கொண்டு ரிஷபவாகனத்தினின்றும் இறங்கினார்—எ-று. (கரு௫)

இலகுமங்கைய ரனேகர்நீராஞ்சன்மெடுப்ப
உலகபாலக ரிருமருங்கினுநடந்தொதுங்கத்
திலகமாதவ னிருகைமேலொருகரஞ்சேர்த்திட்
டலகிலாமணி இழைத்ததோர்மண்டபத்தணைந்தார்.

இ-ள். பரமசிவன் வெள்விடையினின்றும் இறங்கிய உடனே அழகிய அநேகம்மாதர்கள் ஆராத்தியெடுக்கவும், அஷ்டதிக்குப்பாலர்கள் சுவாமியினது இருபுரத்திலும்நடந் தொதிங்கிவரவும், யாவருக்குந் திலகம்போன்ற திருமாலினது இரண்டுகைமேலும் தம்முடைய ஒரு கையைச்சேர்த்து எண்ணுதற்கரிய நவமணிகளால் அலங்கிருதஞ்செய்யப்பட்டிருக்கும், தவிசுட்சேர்ந்தார்கள்—எ-று. (கரு௬)

அரியமண்டபத் தமைந்தபீடிகையின்மீதணைந்தார்
வரையிடப்பிறந் தமைவள்ர்மூலைசொலவருவார்
குருமலர்க்கயி லேந்திவந்தருள்குடியிருக்கும்
திருமுகத்தியைப் பிறையவனிடப்புறஞ்சேர்த்தார்.

இ-ள். சுவாமி அத்தவிசுகள் இட்டிருக்கும் இரத்தினகசிதமாகிய பீடத்தின்மீது உட்கார குஜங்கள் திணிந்தவரைபோலிருப்பதால் அந்தஸ்தலங்களே இவர்கள் மலையிற்பிறந்தார்களென்று காண்பிக்கும்படியாக வருகிற மாதர்களுடைய நிறம்பொருந்திய புட்பம்போலுங் கரங்களிலேந்திக்கொண்டு இருபையே குடியாகயிருக்கின்ற அழகிய வதனத்தினையுடைய பார்வதியைச் சிவனுடைய இடப்பாகத்திலே உட்காரவைத்தார்கள்—எ-று. (கரு௭)

அன்னகாலையில் யீசனுமரசனைநோக்கி
மின்னேடின்னமு மென்றருவாயெனவினவ
துன்னுநாதவென் மகளொடுதுய்யசெம்பொன்னும்
பன்னுமாபுவி யனைத்துமீந்தேனெனப்பகர்ந்தான்.

இ-ள். இவ்விதமாப் பார்வதாதேவியை அலங்கிருதஞ்செய்து பரமசிவனுடைய இடப்பாகத்தில் உட்காரவைக்கும்போது சுவாமிமகிழ்ந்து எதிர்நிற்கும் பருவதமகாராஜனைக் கருணையோடும்நோக்கி ஓய் வேந்தே இப்பெண்ணோடும் இன்னம் சீர்தனமாக என்னகொடுப்பாயென்றுகேட்க மன்னன் மகிழ்ந்து ஏ நாதனே என்மகளோடும் பெண்ணுண்மூன்றும் உனக்கு தத்தஞ்செய்தேன் என்று சுவாமிக்கு தத்தஞ்செய்தான்—எ-று. (கஙஅ)

முன்னையாரணன் வதுவையின்சடங்கெலாமுடித்து
வன்னிமேற்பொரி யிறைத்துநெய்சொறிந்துமந்திரத்தால்
என்னையாளுடை யிறைவனுமேழுலகீன்ற
கன்னிசெங்கரம் பிடித்துமூவலஞ்செய்தான்கனலை.

இ-ள். சுவாமியும், அம்மனும், மணவறையிலெழுந்தருளியிருக்க அவ்வேளையிற் பிரமனானவன் கலியாணச்சடங்குகளை விதிப்படிமுடித்து இருவர்கரங்களாலும் அக்கினியிற் பொரிசொறியச்செய்து நெய் [illegible] ஏழுலகையுமீன்ற அம்மன் கரத்தைப்பிடித்து அக்கினியை மூன்றுதரம் வலம்வரச்செய்தான்—எ-று. (கஙகூ)

ஒற்றைசங்கமு மொலித்தனமறைகளுமொலித்த
சுற்றும்வானவ ரிருடியர்மலர்மழைசொறிந்தார்
பற்றியாசனத் திருந்தனரனைவரும்பணிந்தார்
பெற்றதாதையோ டன்னையைப்பணிந்தனள்பெதும்பை.

இ-ள். அக்காலையில் வெள்ளைமைபொருந்திய ஒப்பற்ற சங்குமுழங்க, நான்குவேதங்களுஞ்சப்திக்க, அம்மன்டபத்திலிருந்த தேவர்கள், முனிவர்கள், மற்றயாவர்களு மலர்மாரிசொறிய வேறே ஆசனத்திலெழுந்தருளினர் அப்போது தேவர்களெல்லாம்வந்து தெரிசனஞ்செய்தார்கள் பார்வதியம்மன் அவள்தாயாகிய மேனுவதியையுந் தகப்பனாகிய பருவதராஜனையும்வணங்கி ஆசிபெற்றாள்—எ-று. (கசய)

எரித்தகாமனை தருதியென்றிமையவரயன்மால்
ஒருத்தரன்றியே யிறைவன்மகிழ்ச்சிகொண்டுரைத்தார்
மரித்தகாமனை யழைத்தருள்புரிந்தனன்வள்ளல்
பெருத்தவன்பின லனைவரும்விடைகொடுபெயர்ந்தார்.

இ-ள். பிரமன்-விஷ்ணு-தேவர்கள்முதலிய யாவரிடத்திலும், ஜகதீசன்வைத்திருக்கும் விருப்பத்தைக்கண்டு சுவாமி தாங்கள் முன்னர் எரிசெய்தமன்மதனை எழுப்பித்தரல்வேண்டுமென்று பணிந்துவினவ அவ்வாறே சிவபெருமானுக் கருட்சுரந்து இறந்த மன்மதனையும் எழுப்பிக்கொடுத்தார்—எ-று. (கசக)

அதற்பின்னன்னை லுமரிவையுமுருகிலன்றுகி
மதத்தயானையைக் குமரனைப்பயந்தனர்மகிழ்வாய்
விதித்தவேலினைக் குமரனுக்களித்திறைவிடுத்தான்
கொதித்தரக்கர்கள் வல்லுயிர்குடித்திடக்குமரன்.

இ-ள். பின்பு பருவதராஜன் அரண்மனையிலிராணியும், அம்ம னும், மிகுந்த பரிவோடுங் கூடியிருந்து வலிமைபொருந்திய யானைமு கத்தினையுடைய கணேசனையும், சுப்பிரமணியனையும்பெற்று ஓர் சத்தி வேலை அருளிச்செய்து கொடும்பாவிகளாகிய அரக்கர்களினது ஆவி யைக் கொள்ளைகொள்ளும்படியாய்ச் சுப்பிரமணியனுக்கருளினர்-எ-று

மயிலெனத்திகழ் மலைமகள்பொருக்கிரவதன
னயிலெடுத்தசெங் கரனுடன்பதியதையகன்று
கயிலைவெற்பில்வந் திமையவர்முனிவர்கண்களிக்க
வெயிலுடைப்புர மெரித்தவனிருந்தவன்னாளில்.

இ-ள். மயில்போல்விளங்காநின்ற பருவதராஜன்மகளாகிய பார் வதியோடும், யானைமுகத்தினையுடைய கணேசனையும், வேலாயுதத் தைத் தரித்திராநின்ற சுப்பிரமணியனையும், அழைத்துக்கொண்டு பர மசிவனானவர் ஒஷதமாபுரியென்னும் பதியைவிடுத்து தேவர்கள் மு னிவர்கள்து கண்களிகூறும்படி எழுந்தருளிய முப்புரத்தை எரித்தவ ராகிய பரமசிவன்வாழும்நாளில்—எ-று. (கசுஅ)

வேறு - விருத்தம்.

பையரவமணிந்தபிரான் மாதுலனுந்தேவிதனைப் பரிந்துநோக்கி
தையலேநம்மனம்போலப் புத்திரிக்குமணமுடித்தோம் தரணியாளும்
மெய்யுலவுமைநாகன் றனக்கினிமேல்மணமுடிக்கும் விதியாதென்று
செய்யமணிப்பீடமிசை யிருந்துசிந்தித்திடுகாஞ்சை மினிவந்தோ.

இ-ள். விஷம்பொருந்திய சர்ப்பங்களை ஆபரணமாகப்பூண்டு வி ளங்கும் கயிலாசபதியினது மாமனுராகிய பருவதமகாராஜன் தனது தேவியாகிய மேனைவதியை மிகவும் பிரியத்தோடுபார்த்து அடி பெண் பாவாய் நமதெண்ணம்போல் நம்முடையபுதல்விக்கு விவாகமுடித்து விட்டோம் இனிமேல் தரணியையாண்டுவரும் நீதியுடையோனுகிய நம் புத்திரன் மைநாகனுக்கு விவாகஞ்செய்யவேண்டியிருப்பதால் எ ன்னவழியென்று நவரத்தினங்களழுத்தி யிலகாநின்ற பீடத்தின்மீதிரு ந்து பேசிக்கொண்டிருக்கயில் நைமிசாரண்ணியத்து முனிவர்களிலொ ருவராகிய சைமினிமுனிவர் வேந்தன்சமுகத்துக்கு வந்தார்—எ-று.()

வேறு - விருத்தம்.

வந்தவம்முனிவன்தம்மை மன்னனுமெதிர்சென்றேத்தி
இந்துநேர்பீடமீது இனிதுவீற்றிருக்கச்செய்து

கந்தமதுலவுந்தேவர் கழலதுவருந்தயென்பால்
வந்தகாரணம்யாதென்ன வல்முனியிசைக்கலுற்றார்.

இ-ள். எழுந்தருளிவந்த சைமினிமுனிவரைக்கண்ட பருவதராஜன் மணிபீடத்தைவிட்டெழுந்து எதிர்சென்று பணிந்து அழைத்துக்கொண்டுவந்து பூரணச்சந்திரோதயம்போல் இலகாநின்ற பீடிகையின்மீது ஆரோகணிக்கச்செய்து பின்பு கந்தமூலாவுந் தேவர் இவ்வேழையினிடம் கழல்வருந்தும்படியாய் வந்தகாரணம் யாதோவென்றுகேட்க அதற்கந்த வல்லமைதங்கிய முனிவர் வேந்தனைப்பார்த்துச் சொல்லுகின்றார்—எ-று. (கசரு)

வேறு - விருத்தம்.

மன்னவவெனது புத்திரிதனையுன்
மைந்தனுக்களித்திடவெண்ணித்
துன்னுமுன்சமுக மடைந்தனம்யாமுஞ்
சொல்லுவாய்நின்கருத்தென்ன
நன்னிலமுனிவன் சொற்றனைகேட்ட
நரேந்திரனும்மனிமகிழ்கொண்டு
பன்னருந்தேவ ருள்மதானுலென்
பாக்கியமென்றுபின்பகர்வான்.

இ-ள். சைமினியானவர் பருவதராஜனைப்பார்த்து ஓ மன்னவனே எனதுபுதல்வியாகிய சன்பகவதியை உனதுகுமாரனுக்குப் பாணிக்கிரகணஞ்செய்துக் கொடுக்கும்படியாகநினைந்து பிரகாசம்பொருந்திய உனதுசமுகத்தை நாடிவந்தோம் ஆதலால் உன்கருத்தெவ்வணமாகயிருக்குதென்று நன்னிலத்தோர்பரவும்முனிவரன் கூறியதைக்கேட்ட நரேந்திரனுகிய பருவதராஜன் மிகவும் உளம்பூரித்து பன்னுதற்கரிய தபோதனராகிய தமதுமனம் அவ்வகையாகயிருந்தால் என்பாக்கியமென்று பின்னுஞ்சொல்லுவான்—எ-று. (கசசு)

இருவர்கடமக்கும் பெருத்தமதாய்ந்து
யிசைத்திடுஞ்சுபதினமென்ன
திருமுனியதுபோற் பார்த்தவனுரைக்கத்
திரைகடற்சூழ்புவியோர்க்கும்
பொருவிலாப்புகழ்சே ரும்பர்கடமக்கும்
புதுமணவோலையதனுப்பப்
பெருகியகளியான் முனிவிடைகொண்டே
பெற்றிசேரகணியஞ்சென்றார்.

இ-ள். பருவதராஜன் முனிவனைநோக்கி ஓ முனிசிரேஷ்டரே சல்பகவதிக்கும், மைநாகனுக்கும் பொருத்தம்பார்த்து முகூர்த்தத்தின்மேற்படுத்திச் சொல்லவேண்டுமென்றுகேழ்க்க அதுபோல் அழகிய சைமினி அவடத்திற்முனே பார்த்துச்சொல்ல வேந்தன் நெடியகடல்சூழ்ந்த உலகின்கணுள்ளவர்களுக்கும் அளவுபடாப் புகழ்மாறிகிய ஸ்ரீகயிலாசபதிமுதல் யாவருக்கும் மணவோலையெழுதித் தூதர்களிடத்திற்கொடுத் தனுப்பியதைக்கண்டு சந்தோஷங்கொண்டு முனிவன் தனது புதல்வியை அழைத்துவரும்பொருட்டு மன்னனிடத்தில்விடைகொண்டு நம்மவர்கள் மதிக்கத்தக்கதாகிய பெருமையினையுடைய நைமிசாரண்ணியத்துக்குச்சென்றார்—எ-று. (கசஎ)

பரவியவிசும்பின் வெளியெலாம்பச்சைப்
  பந்தரால்மறைந்திடச்செய்து
நிரைநிரையாகத் தோரணத்துவச
  நீணகரெங்கணுந்தூக்கி
தரையெலாமணியா சனமதானிறைத்து
  தண்ணறுஞ்சுகந்தமுந்தூவி
இரைகடற்போல வாத்தியமுழங்க
  இசைத்தனர்நிஷதநாடெங்கும்.

இ-ள். விசாலம்பொருந்திய ஆகாயவெளியெங்கணும் கண்ணுக்குத்தோன்றாமலிருக்கும்படியாய் பச்சைப்பந்தர்போட்டு வரிசைவரிசையாய் மகுடதோரணங்களும், மாவிலைத்தோரணங்களுந், துவசங்களுந்தூக்கி தரைமுழுதும் நவமணிகளாலிழைத்த பீடங்கள்பரப்பி, குளிர்ச்சிபொருந்திய சுகந்தவஸ்துக்களைத்தூவிச், சமுத்திர ஓசையைப்போல் முப்பத்திரண்டுவகை வாத்தியங்களு முழங்கச்செய்தார்கள் நிஷதபுரிபட்டணமெங்கும்—எ-று. (கசஅ)

நைமிசாரண்ணிய முனிவரர்கூடி
  நங்கையைச்சிவிகையிலேற்றி
வெயில்புகாதிலகு மென்மதியனைய
  விமலனும்பார்வதியாரும்
அயிலுடைக்குமரன் கரிமுகனோடு
  வரிபிரமாதிகளெவரும்
பயிலுதற்கரிய பதியைமேவுங்கால்
  பருவதவேந்தனுமகிழ்ந்தான்.

இ-ள். நைமிசாரண்ணியவாசிகளாகிய முனிவர்கள்யாவருஞ்சேர்ந்து சைமினிபகவான் புத்திரியாகிய சல்பகவதியாற்கு மங்களஸ்நா

ஞ்செய்வித்து முத்துச்சிவிகையிலேற்றி சூரியகிரணத்துக்கெட்டாமல் பந்தர்களாலும், பலவகைத்தோரணங்களாலும், பிரகாசம்பொருந்திய மாணிக்கங்களினாலும், இலகாநின்ற நிஷதபுரியைச்சேர அக்காலையில் கயிலாசபதியாகிய பரமசிவனும், உமாதேவியாரும், யானைமுகத்தினையுடைய விநாயகனும், வேலேந்தும்பிள்ளையாகிய சுப்பிரமணியனுங்கூடி வாகனாதிகளிலேறிப் பிரயாணப்படுகையில் வைகுந்தநாதனாகிய திருமால், இலக்குமிதேவியோடும், பிரமலோகத்துக்குரிய சதுர்முகனும், கலைவாணியும், மற்ற தேவர்கள்யாவரும் வருதலைக்கண்டு மகிழ்ந்தான் பருவதமகாராஜன்—எ-று. (கசகூ)

வேறு-விருத்தம்.

வந்தவரெவருங்கூடி வதுவைமண்டபத்துட்சேர்ந்து
கந்தமென்குழலியோடு காளையைப்பீடமேற்றி
விந்தைநற்சடங்குயாவும் வேதனார்நடத்தஆங்கு
இந்துநேர்வனப்பினாரை யெரிவலஞ்செய்வித்தாரால்.

இ-ள். தேவர்முதல் யாவருங்கூடிக் கலியாணமண்டபத்துட்சேர்ந்து கந்தமுலாவுங் குழலினையுடைய சன்பகவதியையும், மைநாகனையும், மணவறையில் உட்காரச்செய்து பிரமதேவனால் ஓமம்வளர்த்திப் பொரியை அவற்றிற்சொரியவைத்துச் சேஷையிடுவித்துப் பின்பு பூரணச்சந்திரோதயம்போன்ற அழகினையுடைய இருவர்களையும், அக்கினிவலஞ்செய்வித்தார்கள்—எ-று. (க௫0)

வரைமகன்வனிதையோடு வன்கயிலாயனாதி
தரைபுகழ்தாதையாற்குஞ் சைமினிதனக்குமற்ற
பரவியதேவராற்கும் பணிந்திடவாசிகூறி
மரைமலர்மாரிபெய்து வானவர்மேவினாரால்.

இ-ள். பருவதராஜன்புதல்வனாகிய மைநாகன் தனதுமங்கையோடும் கயிலாசபதியாகிய பரமசிவன்முதல் வையமெல்லாம்புகழுந் தகப்பனுக்கும், மாதுலனாகிய சைமினிக்கும், மற்ற தேவர்களனைவருக்கும் ஏகநமஸ்காரமாய் நிலத்தில்வீழ்ந்துபணிய, அக்காலையில் யாவரும் ஆசீர்வதித்துக் கற்பகமலர்களை மாரியோற்சொறிந்து தேவர்கள் அவரவர்கள் பதிக்குச்சென்றார்கள்—எ-று. (க௫க)

வேறு-விருத்தம்.

அன்னாலதருளால்வரைமகன்றானும் ஆழிசூழ்நிஷதமாபுரியை
மன்னனுள்ளாதிவானவர்மதிக்க மதுமூறைமேன்படநடாத்தி
தன்னமலர்க்குழலிசன்பகவதியா டன்னுடன்கூடியேகளித்து
விண்மணியென்னும்வாசவன்போல வேந்தனும்வாழ்ந்திடுநாளில்.

இ-ள். அண்ணலாகிய ஸ்ரீ கயிலாசபதியினுடைய அருளால் பருவதராஜகுமாரனாகிய மைநாகரர்ஜன் கடல்சூழ்ந்த நெடிய உலகாகிய கிஷுதமாபுரியை வையமீதுவாழும்படியாகிய மாந்தர்முதல் வேந்தர்களும், முனிவர்களும், ஆகாயவாசிகளாகிய தேவர்களும், மதிக்கத்தக்கதாக இராஜநீதியைநடாத்தியும், குளிர்ச்சிபொருந்திய வாசனையைத்தரும் மலர்களை அளகபாரத்திற்பொருந்தியிருக்கும் சண்பகவதியென்னும் வனிதையோடுகூடித் தேவநாயகனாகிய இந்திரனைப்போலச்சந்தோஷித்து வாழ்ந்துவரும்நாளில்—எ-று. (கருஉ)

பொங்கரவணிந்தசங்கரனருளாற் பூவையுஞ்சூலதுகொண்டு
மங்கையர்கூடிப்பரிந்துபசரிக்க வனிதையின்உருவமுமாறி
திங்கள்பத்தாகிநோயதுஉறுகாற் றிருந்தியசண்பகவதியும்
மங்களகரமாய்தத்துவனெனவே வழங்கிடப்புதல்வனைப்பயந்தாள்.

இ-ள். வெவ்வியவிடங்களையுடைய சர்ப்பங்களை ஆபரணமாயணிந்திலகாநின்ற சங்கரனது கிருபையினால் சண்பகவதியென்னும்பூவை குளியாகி மாதமாதம்நிறைந்து திரேகம்வேறுபட்டு வருந்தன்மையினால் சேடியர்முதலிய யாவருங்கூடிப் பரிவோடும் விசாரணைசெய் துபசரித்துவரப் பத்துமாதமும் பூரணமாய்நிறைந்தவுடன் கெர்ப்பநோயுற்றுவருந்தும் அழகிய சண்பகவதியானவள் மங்களகரமாய் பூலோகத்தின்மீது சந்திரசூரியாருள்ளவளையில் தத்துவகுலத்தானென்று பெயர்வழங்கும்படித் தொண்ணூற்றாறு புத்திரனைப்பெற்றாள்-எ-று

அரசிளங்கன்னிபுத்திரர்தமக்கு அரியநற்சடங்கெலாமுடித்து
விரைசெறிவையமெங்கணுமதிக்க வியன்பெயரளித்திடநினைந்து
திரைபுகழ்பொன்னுடையவனென்றுந் தனியிலம்புகழினனென்றும்
கரிந்திநற்காலன்காமப்பிரியன் கருதருஞ்சேதுவான்டானும்.

இ-ள். பாலைப்பருவத்துக்குரிய சண்பகவதியென்னும் அரசியானவள் பயந்தபுத்திரர்கள் தொண்ணூற்றறுவருக்கும் செய்சடங்குகள் யாவுஞ்செய்து சிறப்போங்கிய பூமிமுழுதும் மதிக்கும்படியாய்த் திருப்பெயரளித்திட எண்ணமுற்று உலகம்புகழும் பொன்னுட்டானென்றும், இலம்புகழாண்டானென்றும், கரிந்திக்காலனென்றும், காமப்பிரியனென்றும், சேதுவான்டானென்றும்—எ-று. (கருச)

பரமானந்தன்பகர்பூதுபுரியான் பாவலர்புகழ்ந்திடுஞ்செய்ய
பிரியாப்பாதனென்றுபற்பலவாய்ப் பிள்ளைகடமக்கெலாமளித்து
அரியநற்கலையோடாந்தருவிதிய மன்புடனுணர்ந்திடச்செய்தே
திருமலிந்திலகுதனிப்பிறைபோலச் செல்வரும்வளர்ந்துவாழ்நாளில்.

இ-ள். பரமானந்தனென்றும், பூதுபுரியானென்றும், பாவாணர்களும் புகழத்தக்க மேன்மைபொருந்திய பிரியாப்பாதனென்றும், பற்பலவிதமாகிய பெயர்களைப் புத்திரர்கள் தொள்ளூற்றுறுபேர்களுக்கு மளித்துப் பெறுதற்கரிய பம்பலகலைகளும், சதுர்வேதமுதலிய யாவு முணரச்செய்து அழகுலாவும் மூன்றும்பிறையினின்றும் கலைகளோங்கொளிரும் பூரணச்சந்திரோதயத்தைப்போல் புதல்வர்கள்வளர்ந்து வாழ்ந்துவரும்படியாகியநாளில்—எ-று. (கருரு)

மலைமகன்றனுமைந்தர்கடமக்கு மணமதுபுரிந்திடவெண்ணி
தலைமிசையோங்குபட்டவேடுகண்டத் தனிநகராண்டிடும்வேந்தன்
கலைமிகுநந்திராஜனென்போன்றன் நற்றவப்பேற்றினாலுதித்து [தான்
இலகுபுத்திரிகள்தொள்ளூற்றருவரையுமிசைந்திட்முனிவரால்முடித்

இ-ள். பருவதராஜகுமாரனாகிய மைநாகவேந்தன் தன்னுடையபுத்திரர்களுக்குக் கலியாணஞ்செய்யவேண்டுமென்று எண்ணங்கொண்டவனாய்ப் புவியின்மீது கீர்த்தியோங்கிய பட்டவேண்டுகண்டத்தை அரசாட்சிசெய்துவரும் நற்குணம்வாய்ந்த நந்திராஜனுடைய நற்றவப்பெருமையினா லுதித்திலகாநின்ற சுபுத்திரிகள் தொள்ளூற்றுறுபேர்களையும், கலியாணஞ்செய்துவைப்பதற்கு முனிவர்களாற்பேசி இசையவைத்தான்—எ-று. (கருசு)

வேதவேதியரால்முகூர்த்தநாள்கொண்டு வியனுலகெங்கணுஞ்சாற்றி
சீதமென்மலர்ப்பூங்குழலினாரோடு செல்வனைப்பீடமீதிருத்தி
ஓதுநற்சடங்குயாவுமேமுடித்து ஊர்வலஞ்செய்துபின்னுங்கு
நீதிசேர்பதியையாண்டுவாழ்நாளில் நேர்ந்தனவசுரராற்றுயரம்.

இ-ள். மறையவர்களால் முகூர்த்தநாள்நியமித்து பிரகாசம்பொருந்திய உலகமெங்கும் மணவோலைப்போக்கி சீதளத்தோடுங்கூடிய நறுங்கமழுலவு மலர்க்களைச்சூட்டி இலகாநின்ற குழலினையுடையவனிதையர்களோடும் மைநாகவேந்தன் புதல்வனை மணவனையிலிருத்தி மணச்சடங்குகளை நிறைவேற்றி ஊர்க்கோலங்காட்டிப் பின்பு நீதியோடுங்கூடிய நிஷதமாபுரியை அரசுசெலுத்தி வாழ்ந்துவரும்படியாகிய நாட்களில் தேவர்கள்முதலியயாவருக்கும் சிங்கமுகாசுரன், பாநுகோபன்முதலிய அரக்கர்களால் துன்பம்நேரிட்டது—எ-று. (கருஎ)

வானவரொவருங்கூடிவாசவன்றனையணைந்து
தானவர்தம்மாலுற்றசலனமதொழிப்பாயென்றக்
கோன்றனையிசையவைத்துக்கொடுஞ்சமர்கோலங்கொண்டு
ஈனராமவுணர்மீது எதிர்த்திகல்விளைத்திட்டாரால்

இ-ள். பொன்னுலக வாசிகளாகிய தேவர்களெல்லாம் ஒன்ருய்க் கூடி தேவேந்திரமகாராஜனை அபயமென்றடுத்து ஓ-அரசே, தானவராகிய இராக்கதரால் சம்பவித்ததுன்பத்தைநீக்கி யாட்கொள்ளுவா யென்றுபணிய அதைக்கேட்ட இந்திரன் அவ்வாறேஇசைந்து கொடுமைபொருந்திய யுத்தகோலம்பூண்டு ஈனர்களாகிய தானவரை யெதிர்த்தார்கள்—எ-று. (கரு௮)

வல்லிருள்போன்றவிராக்கதர்மீதுவானவர்சரமழைச்சொரிய
கல்மரமுதலாந்தண்டமுங்கொண்டுகரிமுகன்துன்முகனுதி
புல்லர்களானசூரர்களெழுந்துபுடைத்திடப்பண்ணவர்மெலிந்து
வில்லொடுவாளியாவுமேயிழந்துமெலிவொடுபுறங்கொடுத்தயர்ந்தார்

இ-ள். அந்தகாரவிருள்போன்ற தேகத்தினையுடைய இராட்சதர்கள்மீது தேவேந்திரன் முதலியதேவர்களெல்லாங்கூடி பாணவருஷம் பொழியயில் அதைக்கண்ட சிங்கமுகாசூரன் துன்முகன் பானுகோபன் கஜமுகாசூரன்முதலிய அசுரவீரர்கள் ராட்சதசேனைகளோடுங் கூடி பருவதங்களையும் அண்டகடாகம்வரையில் உயர்ந்து வளர்ந்திராநின்ற விருட்சங்களையும் மேருவைப்போன்ற காலதண்டங்களையு மெடுத்து வீசிமோதுகையில் தேவர்களெல்லாந் துன்பமடைந்து தங்கள் கரங்களிற்பற்றியிருந்த வில் வேல் வாளி யாவும் இழந்துபுறங்கொடுத் தோடி ஒருவரையொருவர்நோக்கி வருத்தப்படுவார்கள்—எ-று. (கருகூ)

இந்திரனுதிவானவரெவருமெவ்வணமுய்குவோமென்று
சிந்தைபற்பலவாய்வெருண்டுபின்னுஞ்செஞ்சடாடவியினனளித்த
கந்தவேள்தன்னைக்கருதியே துதித்துக்காத்திடாயெனுமுறைகேட்டவ்
விந்தைநற்றேகைமீதினிலேறிவேல்கொடுகுமரனும்வந்தான்

இ-ள். தேவேந்திராதி தேவர்களெல்லாம் ஒன்ருய்க்கூடி ஐயோ, என்செய்வோம் எவ்வணம் ஈடேறுவோமென்று துன்பக்கடலுட்டோய்ந்து பற்பலவிதமாயோசித்துமிகவும் பயங்கொண்டு பின்பு செஞ்சடைக்கடவுளாகிய பரமசிவனுலளிக்கப்பட்ட கந்தவேளாகிய சுப்பிரமணியக்கடவுளை நினைந்து துதித்துக்காப்பாயென்று கூறியமுறையைக்கேட்டவக்கடவுள் அம்முறைக்கிரங்கி விந்தைதங்கியமயிலின் மீதேறிசத்திவேற்றுங்கி சுப்பிரமணியக்கடவுள்வந்தார்—எ-று. (கசூ0)

வேறு - விருத்தம்.

வானவர்சேனையோடுமயின்மிசைக்குமரவேளும்
தானவர்க்கதிபனுனதனிஅரிமுகத்தான்மீதும்

பானுகோசூரபத்மன் பகர்கொடுவரக்கர்மீதும்
சோனைமாமாரிபோலச்சொறிந்துடல்மாயச்செய்தார்

(இ-ள்.) ஒள்ளிய வேலாயுதத்தைத்தாங்கிய சுப்பிரமணியக் கடவுளானவர் புருஷாமிருகத்தின்மீதேறித் தேவர்களைச் சேனைகளாகக்கொண்டு இராட்சதவீரர்களாகிய சிங்கமுகாசூரன் அக்கினிமுகாசூரன் சூரபத்மன் துன் முகன்பானுகோபன்முதலிய கொடுமைபொருந்திய அரக்கர்களின்மீது தீமுகக்கணைகளைச் சோனைமாரிபெய்வதுபோல விடுத்து அரக்கர் குலத்தைநீறுக்கித் துன்பப்பட்டு உடல்மாயச்செய்தார் ()

அரிமுகனாதியோர்களயிற்கிரையானபின்னர்
விரிதருஅரக்கர்தம்மில்மிகுமவருள்நடுங்கி
உருவிலிதன்னைக்காய்ந்த வொண்சுடர்மகனுக்கஞ்சி
திருவுயர்மச்சமாகித்திரைகடலொளித்திட்டாரால்


(இ-ள்.) சிங்கமுகாசூரன் முதலிய இராக்கதவீரர்கள் சுப்பிரமணியக்கடவுளால் விடப்பட்ட வேலாயுதத்திற்கிரையாகியபின்பு தப்பிப்பிழைத்திருந்த அசுரர்கள் மன்மதனைஎரிக்கவெழுந்த அறுபொறியின்வடிவமாகிய சுப்பிரமணியக்கடவுளுக்கஞ்சி உளம்பதைத்து அழகிய மச்சவுருவங்கொண்டுஅலைகளைஎறியாநின்ற சமுத்திரத்திற்போயொளித்தார்கள்—எ-று. (கசுஉ)

கரந்தவல்லரக்கரெல்லாங்கலைமுனிஎன்போராங்கு
இருந்துமீனுருவமாகித்திகழ்பவர்மாபிற்சேர்ந்து
பொருந்திவாழ்கின்றபண்பைப்பொன்னுலகத்தோர்கண்டு
வருந்தியென்செய்கோமென்றுவரைஇறைதன்னைச்சேர்ந்தார்

இ-ள். இவ்விதமாய் சிவசுப்பிரமணியக்கடவுளினது வேலாயுதத்திற்குப்பயந்து சமுத்திரத்திற்போய் ஒளித்துக்கொண்ட கொடுமைபொருந்திய அசுரர்கள் முன்னர் இவ்வரக்கருக்காக அஞ்சி மீனுருவங்கொண்டு சமுத்திரத்தில் யோகத்திலிருக்கும் கலைமுனியினது ஆசிரமத்திற்சேர்ந்து வாழ்ந்துக்கொண்டிருப்பதைப் பொன்னுலக வாசிகளாகிய தேவர்களறிந்து யென்செய்வோமென்று துயரமுற்றுப் பருவதராஜனிடத்திற்போய்ச்சேர்ந்தார்கள்—எ-று. (கசுங)







இமையவரெவருங்கூடி இமாசலன்றன்னைநோக்கி
எமைதுயர்செய்யுமிந்தவீனரைப்பொருதநும்மைச்
சுமையதாய்க்கொண்டவல்லணங்தொலைத்திடவேண்டுமென்ன
தமணியப்பொறும்பினுனுஞ்சார்ந்தனனரக்கர்தம்மேல்

இ-ள். உம்பருலகத்தாராகிய தேவர்களெல்லாங்கூடிப் பருவத ராஜனைப்பார்த்து ஓ அரசே, எங்களைத்துயரிலாழ்த்திய ஈனராகியராட் தர்களைக்கொன்று எங்கள் சலமென்னுஞ் சிறமையை இரக்கியர்ட்கொ ள்ளும் பொறுப்புத்தங்களுடையதென்று கோறிவினவிய தேவர்களு க்கிரங்கி இராக்கதர்மீது சண்டைசெய்யத்துணிந்தான்—எ-று. ()

திருந்தியவர்சன்றானுஞ்செம்பினாற்படவுண்டாக்கி
இரும்பினல்வலையைப்பின்னிஇந்துவில்வீசியாங்கு
குருகியஅவுணர்தம்மைக்கொலைத்தொழிற்புரியும்போது
பெருந்தகைமுனிவராங்குபிடியெனச்சாபமீந்தசு

இ-ள். பருவதராசன் தனது சிருஷ்டியால் செம்புப்படவுஞ்செய் து வலுவுபொருந்திய இரும்பினல் வலைபின்னிச் சமுத்திரத்தில் எறி ந்து மச்சவுருவாயிருக்கும் அரக்கரைப் பிடித்து நாசம்படுத்துகயில், முன்ன ரிவ்வரக்கர்களுக்காக பயந்து மச்சவுருவாய்த் தபஞ்செய்திரு க்கும் கலைமுனியானவர் வேந்தனைநோக்கி ஓ வேந்தே நீ எனது தபத் தையழித்தமையால் இவ்வடிவங்கொண்டொளித்த அரக்கர்களைப் பிடி த்துச் செம்புப்படவோரென்று வாழக்கடவாயென்று சாபமீந்தார். ()

இறைவனுக்கின்சந்ததுன்பத்திருங்கடற்புக்கியந்தோ
கறைமிடற்றண்ணல்தன்னைக்கண்டிஃதென்னவென்ன
குறையெலாமகற்றுநாதன்கோமலைவேந்தன்றன்னை
துறையீதுமூவற்குற்றதொன்மையென்றறைந்தார்மாதோ

இ-ள். இறைவனாகிய பருவதராஜன்றனக்கு நேர்ந்ததுன்பத்தா ல் வெவ்வியகருங்கடலைப்போன்ற துன்பக்கடலுள்ளமுழ்ந்தி ஐயோ, எ ன்செய்வோமென்று பரதவித்துக் கறைமிடற்றண்ணலாகிய நீலகண் டனைநாடி ஏ வாணு, இதென்ன தேவர்களுக்காகச் சகாயப்பட்டுப்போ ன எனக்கும் இத்துன்பமணுகலாமோவென்று அயற பரமசிவன்வேந் தனைநோக்கி மூவருக்கும்சாபம் உள்ளதே நூதனமன்றே என்றுரைத் தார்—எ-று. (கசுசு)

வேறு-விருத்தம்.

உரைத்தவர்பின்னுமாங்குவுவகையோடரசைநோக்கி
விரைசெறிவேங்தேதேன்மோவிளம்பிடுங்கலியுகத்தில்
தரைபுகழ்நினக்குப்பின்னர்சந்ததியுள்ளாரேற்றுப்
புரையகன்றுய்வாரென்னப்புத்தனும்வாழ்த்தினரால்

இ-ள். இவ்விதமாகவுரைத்த சந்திரசடாதர மூர்த்தியாகிய பரம சிவன் மிகப்பிரியோடும் பருவதராஜனைநோக்கிச் சீர்த்திபொருந்திய வேந்தேகேளாய் இப்போது உனக்கு அம்முனிவரால் கிடைத்தசாபம் உன்னைச்சேராமல் மறைவிதியிற்புகலும் நான்குயுகத்தில் கடையுமாகிய கலியுகத்தில் லோகாலோகங்களெல்லாம் புகழும் உன்சந்ததியாருக்கு இச்சாபமணுகி யாதுங்குறைவின்றி வாழக்கடவர்களென்று கயிலாசபதியாகிய பரமசிவன் திருவாய்மலர்ந்தருளினரென்று நைமிசாரண்ணியரிஷிகளுக்குச் சண்முனியுரைத்தருளினர்—எ-று(கதாஎ)

பருவதராஜபுராணம்

மூலமும் உரையும்

முற்றிற்று.

வாழி விருத்தம்.

—o✻o—

சீரோங்கிமாசலச் சந்த்தியெனுங்கலியில்
செம்புநற்படவோரெனும்
ஸ்ரீராமதத்வவன் ளீக்குரியமோனனெனுஞ்
செய்பமலையிறையோனெனுஞ்
பேரோங்குஉயர்குலப் பெற்றியோன்புதுவைநகர்
பெரியோர்தமக்கொருமணி
பேசருங்கல்விச் சிகாமணிகாகமதை
பேசவைத்திடுமென்மணி
ஏரோங்குயிரிசப்ப பூபன்றவத்துதித்
திலகுவிருபாலர்தம்முள்
எழில்கொள்வீராசாமி என்னுமால்சோதரன்
இங்கிதமிகுந்தசிலாக்யன்
காரோங்குபருவத குலப்பெருமைவையமிசை
கண்ணுளாரோத்தவறைமெய்க்
கண்யசின்னத்தம்பி வேளிரவிமதிநாள்
களிப்புற்றுவாழிமாதோ.

—✻—

முற்றுப்பெற்றது.

சிவமயம்.

வினா - விடை.

வினா— செம்புப்படவோர்களென்பவர்கள், எக்குலத்தைச்சார்ந்தவர்கள்.

விடை- செம்புப்படவோர்கள் ஸ்ரீவைகுந்தனாகிய விஷ்ணுகுலத்தைச்சார்ந்தவர்கள்.

வினா— அவர்களுக்கெவ்வாறு விஷ்ணுகுலத்தாரெனப்பெயராயிற்று.

விடை- ஆதி அதியினிடம்பிறந்த இலக்குமிதேவிக்கும் விஷ்ணுவுக்கும் பிறந்த மருவுமாமுனிஎன்பவர் சந்ததியில் வந்தவர்களாதலால் விஷ்ணு குலத்தாரொன்று காரணப்பெயராயிற்று.

வினா— இப்பெயரையன்றி வேறே இவர்களுக்குப் பெயருளதோ,

விடை- உளது,

வினா— அவையாவன.

விடை- திருமால் கோத்திரரென்றும், ஞானகுலத்தாரொன்றும் அக்கினிகாத்தாரென்றும், தத்வ குலத்தாரொன்றும், பருவதராஜ குலத்தாரொன்றும் காரணப்பெயருண்டு.

வினா— திருமாலுக்குஞ் செந்திருவுக்கும் பிறந்த மருவுமாமுனிக்கு இவ்வகைத் திருப்பெயர்வாய்ந்ததற்குக் காரணம் யாது.

விடை- மருவுமாமுனி என்பவர் - ஸ்ரீகயிலாசபதியாகிய பரமசிவனைக்குறித்துத் தபஞ்செய்து அத்தேவினதருளால் நெடியகடல் சூழ்ந்த உலகாகிய நிஷதபுரியனைத்தும் அரசாட்சிசெய்து அளகாபுரிக் கிறைவனாகிய குபேரனது புத்திரிசவ்லாகினியை மணந்துபருவதராஜனெனும்ஒருபுதல்வனைப்பயந்து அப்புதல்வனுக்கு வருணராஜனுக்குங் கேந்திரவதிக்கும்பிறந்த மேனுவதியென்னுங் கன்னிகையை மணஞ்செய்வித்துத் தன்னுடைய ஆளுகையையுங் கொடுத்துப் புவனமுழுதுஞ் செங்கோனடாத்தும்படிச்செய்து பின்னர்தான்றபந்துக்குச்செல்ல அரசுக்குரிய அப்பருவதவேந்தனால் இவ்வகைச்சிறப்புப் பெயருண்டாயிற்று.

வினு— பருவதவேந்தனுக்குச் சந்ததிகளேதேனும் உண்டா.

விடை- உண்டு.

வினு— அவர்கள் பெயரென்ன.

விடை. மைநாகவேந்தனென்று ஓர் புத்திரனும் பார்வதா தேவியென்று ஓர் புத்திரியுமுண்டு.


வினு— தத்வகுலத்தாரென்பதற்குக் காரணம்யாது.

விடை. மைநாகவேந்தனென்பவன் சயிமினிமுனிவரனுடைய புத்திரி சண்பகவதியென்னுங் கன்னியைமணந்து தொண்ணூற்றாறு புதல்வர்களைப்பயந்து அப்புத்திரர்களுக்குப் படவேடுகண்டத்தை அரசாட்சிசெய்துவந்த நந்திராஜனுடைய புத்திரிகள் தொண்ணூற்றருவரை மணஞ்செய்வித்து தேவர்முதலியயாவரும் புகழும்படியாய் அரசாண்டுந் தபமிழைத்தும் ஒப்பொருவரில்லாக் கற்பகமாகிய ஜகதீசனைக்கலந்தும் இருந்தமையாலும் பருவதவேந்தன் றபோபலத்திலுதித்த ஜகதீஸ்வரியாகிய பார்வதியம்மனை ஸ்ரீ கயிலாசபதியாகிய பரமசிவனுக்குத் திருக்கலியாணஞ் செய்துக்கொடுத்துத் தனது பெண்ணோடும்-பொன்.மண்-இம்மூன்றுந் தத்தஞ்செய்து அப்பரமசிவன் மனமகிழும்படியாய் நடந்து அவ்வாறே இக்கலியுகத்திலும் நடத்திவருகின்றபடியால் அவர்களுக்குத் தத்வகுலத்தாரென்றும் ஞானகுலத்தாரென்றும் பெயராயிற்று.

வினு— அக்கினிகாத்தாரென்பதற்குக் காரணம்யாது

விடை- அக்கினிகாத்தாரென்பதற்குக் காரணம் சோம சூரியாக்கினி என்னும் முக்குலத்துள் அக்கினிக்குத்தாயகமாகிய சூரியகுலத்தாராதலான் அக்கினிகாத்தாரென்று சொல்லுவ தன்றியும் இக்கலியுகத்தினும் அச்சந்ததியார் அக்கினிமலையாகிய திருவண்ணமலையினிடத்தும், பிரிதிவு தலத்தைச்சார்ந்த கதலிப்பெலா நகரத்தினும் மலையனூரிலும் இன்னுஞ்சிலதலங்களில் அற்புதங்களைக்காட்டி வருகின்றமையால் அக்கினிகாத்தாரென்று சொல்லப்படும்.

வினு— திருவண்ணமலையினும் இன்னுஞ்சில தலத்தினும் இவர்களால் நடந்தேறிவரும் அற்புதங்களென்ன.



விடை.- அருணகிரியாகிய திருவண்ணாமலையில் ஆண்டுகடோறும்நடக்துவரும் கார்த்திகமாதக் கிர்த்திகைக்கு முன்னாள் பரணிதினத்தில் அண்ணாமலைக்கடவுளினது கெர்ப்பக்கிரகத்தில் அர்த்தயாமவேளையில் இச்சந்ததியாரிற் சிலர் பஞ்சசுத்தியோடும் ஆண்டவனுக் கெதிர்நின்று பக்தியோடுந் துதிசெய்துக்கொண்டிருக்கயில் கடவுளுக்கு அபிஷேகமுதலியனவிதியாவும் வழுவறநடத்திச் சுவாமியின் முன்னிலையில் பஞ்சகலசங்கள் வைத்து அவற்றிற் கற்பூரமுஞ்சூட்டியிருப்பதால் இச்சந்ததியார் மீதுற்ற கருணையினால் அத்தீபம் தானாய்ப்பற்றிக் கொள்ளுகின்றபடியாலும் இவர்களையன்றி இதாஜாதியார் அவ்வாறு நிற்கப் பற்றாமலிருப்பதாலும் அன்றிரவுமுச்சூடும் மறுநாண்ஞானதீபம்வன்றியிலு மணையாமலிருந்து அத்தீபத்தினிடந் தீயைக்கொண்டு அவருட்சிலர் மலையின்மீதேறி அங்ஙனஞ்செய் விதியாவுமுகித்து அடிவாரத்திற் கடவுளுக்காராதிக்குஞ் ஞானதீபத்தை எதிர்பார்த்திருக்கயில் சுவாமியை எழுந்தருளச்செய்து கிளி கோபுரவாயலிற் கொண்டுவந்து நிருத்த மலைமீதேறியிருப்பவர்கள்யோக மற்றவர்களால் ஞானதீபத்தை எடுப்பித்துஆலயத்துட்பிரதட்சணஞ்செய்துகிளிகோபுரத்திற்கொண்டுவந்து சுவாமிக்கு ஆராதிக்கும்போது இவ்வொளியைக்கண்டஅவர்கள்மலைமீது தீபதரிசனத்தைக் காட்டுகின்றார்கள். இதன்றியும் கதலிப்பெலா நகரத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஜகதீஸ்வரியாகிய பச்சையம்மன் சன்னிதானத்தில் நிகழும் ஆண்டுகடோறுங் கடகமாதத்தில் சோமவாரதினத்தில் அத்தேவியினுடைய அருளாலிலங்கும் நதிகளாகிய, கம்பாநதி, யாகுநதி, பாகுநதி, இவைகளில் இச்சந்ததியார் பச்சைப்பந்தர் போடுவித்து அங்ஙனம் - ஓர், ஊற்றுக்குழி ஏற்படுத்தி அவற்றுட் பெருகிய கங்கைக்கு வேதவிதிப்படி அபிஷேகமுதலியவைசெய்துபின்னர் அக்கங்கையை ஓர்கலசத்திலெடுத்து மேடைஏற்படுத்தி யதன்மீதுவைத்துக் குசையினால் அக்கங்கையைமூடி மந்திரவிதியால் அதன்மீதுஅட்சதையினாலும் புட்பத்தினாலும் அர்ச்சிக்க அக்கங்கைபொங்கி எழும்புகின்றது அதைத்தரிசித்தஉடனே அதையெடுத்துக்கொண்டு சந்நிதானத்துட்சென்றுஅச்சலத்தை மூன்று கலசங்களுள் ணிறைத்து ஓர்கலசம் அம்மனுக்கும் ஒன்று அக்கினிஎந்துங் கரகத்திற்கும் மற்றொன்று பருவதராசகுலத்தானாகிய விரதசீலனுக்குமாய் அபிஷேகஞ்செய்வித்து அதன்பிறகுஅக்கரகத்துள் எரிகரும்பும் நெய்யுங் கற்பூரமுஞ்சேர்த்தத் தீயிட்டு தலைமீதெடுத்துக்கொண்டு ஆலயத்தைப்பிரதட்சணஞ்செய்து

வீதிப்பிரதட்சணம் வருகையில் பிரார்த்தனைக் குரியவர்கள், நெய்களையும், கற்பூரங்களையும் அபரிமிதமில்லாமற் கொண்டு வந்து அக்கரகத்திற் கொட்ட அவை அக்கினிச்சுவாலையாய்ப் புறமுமெறிந்துக் கொழுந்துவிட்டெரிய அத்தனையாற் றனக்கு யாதுஞ்சலனமில்லாமலும் மற்றவம்சத்தாருக்குஇடங்கொடாமலிருப்பதாலும்- மலையனூர் தேவஸ்தானத்திலும் இவர்களே முதன்மையானவர்களாகவிருந்து வேண்டிய அற்புதங்களையெல்லாம்கால துவரையில் நடத்திவருகின்றமையால்இவர்களுக்கு அக்கினிகாத்தாரென்று சிறப்புப்பெய ருண்டாயிற்று.

வினு— பருவதராஜகுலத்தாரென்பதற்குக் காரணம்யாது.

விடை. மருவுமாமுனிக்கும் அளகேசன்புதல்வியாகிய சவுலாகினிக்கும் பிறந்த பருவதவேந்தன் கால்வழியாய்வந்தவராதலான் பருவதகுலத்தாரென்று பெயராயிற்று.

வினு— செம்புப்படவோரென்பதற்குக் காரணம்யாது?

விடை. அவுணர்களால் தேவர்களுக்கும் மற்ற யாவர்களுக்கும் இடுக்கணுற்றகாலையில் தேவர்கள் குமரவேளைச் சரணுகதியாகப்பணிந்து எங்களை இத் துன்பத்தினின்றும் நீக்கி ஆட்கொள்ள வேண்டியது நமது பொறுப்பென்றுகூற அவ்வாறே அக்கடவுளிரங்கி தேவர்களையெல்லாஞ் சேனைகளாகக்கொண்டு சிங்கமுகாசூரன், கஜமுகாசூரன், சூரபத்மன், பாநுகோபன்முதலிய இராக்கத வீரர்களையெல்லாம் ஒள்ளிய தனது வேலாயுதத்திற் கிரையாக்கியதன்றியும் அன்னவர்தளங்களையும் பாழ்படுத்திய காலையில் அவ் விராக்கதருட் சிலர் சுப்பிரமணியக்கடவுளான்விடுத்த வைவேலுக்கஞ்சி உய்வகையாதெனச் சமுத்திரத்தில் மச்சவுருவங்கொண்டு புகுந்து வாழ்ந்திருக்கையில் அச்செய்தி தேவர்களறிந்து யாவருமொருங்குசேர்ந்து பருவதராஜனிடத்தில் முறையிட அம்முறைக்கிரங்கிய வேந்தன் செம்பினுற் படவு ஒன்று சிருட்டித்து இரும்பினுல் வலைசெய்து சிந்துவிற்சென்றுவீசி மச்சவுருவாகிய அரக்கர்களைப்பிடித்து வதஞ்செய்கையில் பண்டு அவ்வரக்கரது துயரத்தால் மச்சவுருவங்கொண்டு சமுத்திரத்தில் மறைந்து யோகசாதனத்திலிருந்த கலைமுனியென்பவராம் பருவதவேந்தனுக்குச் சாபங்கிடைத்தமையாற் செம்புப்படவோரென்று பெயர் வழங்கலாயிற்று.

வினு— முனிவரனாற் பருவதராஜனுக்குக்கிடைத்த சாபம் நிகழும் இக்கலியுகம்வரையினும் நீடித்திருப்பதற்குக் காரணம்யாது.

விடை. பருவதவேந்தன் சாபத்தை ஏற்றவுடனே மனவருத்தமுற்றவனாய் ஸ்ரீ கயிலாசபதியாகிய சிவபெருமானிடத்திற்சென்று பணிந்து ஏ-ஜகதீசா தேவர்களுக்காகச்சென்ற எனக்கு இச்சாப மணுகலாமோ என்றுவினவ அப்பெருமான் உளமிரங்கி ஓ அரசே சாபமென்பது திரிமூர்த்திகளுக்கும் உண்டாதலான் நீ வருத்தப்படுவதில் லாபமில்லை ஆனால் இச்சாபம் உன்னைச் சாராமல் கலியுகத்தில் உனது சந்ததியாரைப்பற்றி யாதுங்குறைவின்றி வாழ்வாரென்று திருவாய்மலர்ந்தருளினார்.

வினு விடை

முற்றுப்பெற்றது.

—*—

உ

சிவமயம்.

விளம்பரம்.

இதனால் யாவருக்குந் தெரியப்படுத்துவதுயாதெனில், சன்னுமுனி திருவாய்மலர்ந்தருளிய இப் பருவதராஜபுராணம் வேண்டுமவர்கள் சென்னைமாநகரத்தைச்சார்ந்த சிந்தாத்திரிப்பேட்டை சிங்கணசெட்டி தெருவில் கீழண்டைவாடையில் பழனியாண்டவர் பஜனைசெய்யும் ம-ா-ா-ஸ்ரீ வீராசாமிநாட்டாரிடத்திலும், கிருஷ்ணாம்பேட்டை ஆனைகுளத்தருகில் இஸ்திரிவேலைசெய்யும் ம-ா-ா-ஸ்ரீ வேங்கியப்பநாட்டாரிடத்திலும் விலைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்

☞ பு-சி. சின்னதம்பிநாட்டார்.